திப்பு சுல்தான்

அவதூறுகளும் பதில்களும்

வரலாற்று ஆய்வாளர்

செ. திவான் M.A., M.Phil.,

ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

திப்பு சுல்தான்

அவதூறுகளும் பதில்களும்

வரலாற்று ஆய்வாளர்

செ. திவான் M.A.,M.Phil.

இலக்கியச்சோலை
26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு
சென்னை - 600 003.

திப்பு சுல்தான்
அவதூறுகளும் பதில்களும்

வரலாற்று ஆய்வாளர்
செ. திவான் M.A.,M.Phil.,

ஜனவரி 2018 | 116 பக்கங்கள் | முதல் பதிப்பு
விலை ரூ. 70

இலக்கியச்சோலை
26, பேரக்ஸ் சாலை, பெரியமேடு, சென்னை 600003
© இலக்கியச்சோலை

Tippu Sultan
Avathoorugalum Pathilgalum

S. Dhiwan M.A., M.Phil.

January 2018 | 116 Pages | First Edition | Tamil
Price ₹ 70

Ilakkiyacholai
26, Barracks Road, Periyamet, Chennai - 600 003.
Phone: 44 25610969 Cell: 99629 18724
ilakkiyacholai@gmail.com
© Ilakkiyacholai

பொருளடக்கம்

பதிப்புரை	4
ஹைதர் அலி மைசூர் அரசை அபகரித்தாரா?	6
குடகு நாட்டில் கொடுமை புரிந்தார்களா?	24
திப்பு சுல்தான் கிறிஸ்துவர்களை மதம் மாற்றினாரா?	45
தீரன் திப்பு சுல்தான் இந்துக்களை இம்சித்தவரா?	57
இந்து கோவில்களை இடித்தவரா?	57
சிருங்கேரியின் பாதுகாவலன் திப்பு	63
நாயர் நம்பூதிரிகளை இம்சித்தாரா திப்பு?	71
ஹைதர் –திப்புவின் மலபார் தொடர்பு	81
தீரன் திப்புசுல்தான் மத வெறியரா?	97
தீரன் திப்பு சுல்தானின் கடைசி நாளில்...	106

பதிப்புரை

கடந்த கால வரலாறுகளை எதிர்காலத்திற்கு கொண்டு செல்லும் பணி சமகாலத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். தங்களின் குறுகிய இலாபங்களை இலக்காகக் கொண்டு செயல்படுபவர்கள் வரலாறுகளை திரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ள நிலையில் உண்மை வரலாறுகளை மக்களுக்கு அறியத் தருவது சவால் நிறைந்தது. இந்தியாவில் வரலாறுகளை திரிக்கும் பணியில் இந்துத்துவ சங்பரிவார கும்பல் பல்லாண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இதற்காக பல்வேறு அணிகளை உருவாக்கி இவர்கள் வேலை செய்து வருகின்றனர்.

இந்துத்துவ கும்பலின் முக்கிய இலக்குகளில் ஒருவர் சுதந்திர போராட்ட வேங்கை திப்பு சுல்தான். சுதந்திர போராட்டத்தில் எள்முனையளவு கூட பங்களிப்பு செய்திடாத இந்துத்துவ கும்பல் சுதந்திர போராட்ட தியாகிகளை தவறாக சித்திரிக்கும் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. திப்பு சுல்தானின் சுதந்திர போராட்ட வாழ்க்கை குறித்து எவ்வித களங்கமும் கற்பிக்க இயலாத இக்கூட்டம் அவரின் சமூக மற்றும் அரசியல் வாழ்வு குறித்து தொடர்ந்து அவதூறுகளை பரப்பி வருகிறது.

திப்பு சுல்தான் குறித்து புத்தகங்கள் தொடர்ந்து வெளிவந்த போதும் அவரின் மீதான அவதூறுகள் நிற்பதாக இல்லை. இந்துத்துவ கும்பலின் இந்த பொய்ப் பிரச்சாரங்களுக்கு சாமான்ய மக்களும் அறிவுஜீவிகளும் பலியாகி வருவதும் தொடர்கிறது. இச்சூழலில்தான் திப்பு சுல்தான் குறித்த கர்நாடகா உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி சுப்ரோ கமால் முகர்ஜி தெரிவித்த கருத்துகள் விமர்சனங்களை ஏற்படுத்தின. திப்பு சுல்தானின் பிறந்த நாளை குறிக்கும் வகையில் கர்நாடகா மாநில அரசு திப்பு ஜெயந்தி கொண்டாட்டங்களை அறிவித்தது. அது குறித்த வழக்கை விசாரித்த நீதிபதி, திப்பு ஒரு சுதந்திர போராட்ட வீரர் அல்ல, தனது நலன்களை பாதுகாக்க எதிரிகளை எதிர்த்து

போரிட்ட அரசர் என்று குறிப்பிட்டார். இந்த வழக்கில் சங்பரிவார்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், திப்பு சுல்தான் இந்துகளையும் கிறிஸ்தவர்களையும் கொடுமைபடுத்தினார், கட்டாய மதமாற்றத்தில் ஈடுபட்டார் என்று தங்கள் வழக்கமான கட்டுக் கதைகளை அவிழ்த்து விட்டனர்.

இதனை குறித்த செய்திகளை கண்டறிந்த வரலாற்றாய்வாளர் செ.திவான், திப்பு குறித்து இப்படி அவதூறுகளை பரப்புகிறார்களே, இதற்கு நாம் பதிலளிக்க வேண்டும் என்ற தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். ஆதங்கத்தோடு நிறுத்தாமல், திப்பு மீதான அவதூறுகளுக்கு தகுந்த பதில்களை கட்டுரைகளாக எழுத ஆரம்பித்தார். இந்த கட்டுரைகள் புதிய விடியல் மாதமிருமுறை இதழில் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களின் பெரும் வரவேற்பை பெற்றன. வரலாற்று நிகழ்வுகளை வெறுமனே குறிப்பிடாமல் அவற்றை ஆதாரத்துடன் நிறுவுவதில் செ.திவான் அவர்கள் வல்லவர். அதனை இந்த கட்டுரைகளிலும் அவர் நிரூபித்துள்ளார். திப்பு சுல்தான் மீதான அவதூறுகளுக்கு தகுந்த பதில்களை இந்த கட்டுரைகள் வழங்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

திப்பு மீது சுமத்தப்படும் பல்வேறு அவதூறுகளையும் பல்வேறு தலைப்புகளின் கீழ் தொகுத்து உரிய ஆதாரங்களுடன் அவற்றை மறுத்துள்ளார். செ.திவான் அவர்களுக்கு அல்லாஹ் நல்ல உடல் ஆரோக்கியத்தை வழங்க வேண்டும் என்றும் அவரின் பணிகள் தொடர வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்கிறோம்.

திப்பு சுல்தான் மீதான அவதூறுகளுக்கு தகுந்த பதிலடிகளை வழங்கும் இந்நூலை வாசகர்கள் தாங்களும் வாசித்து மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது. குறைகள் எங்களைச் சாரும். நிறைகள் எல்லாம் நிறைந்த இறைவனைச் சாரும். வாசகர்களின் ஆதரவை தொடர்ந்து எதிர்பார்க்கிறோம்.

இவண்

மு. முஹம்மத் இஸ்மாயீல்

காப்பாளர்

இலக்கியச்சோலை சாரிடபிள் டிரஸ்ட்

ஜனவரி 2018

ஹைதர் அலி மைசூர் அரசை அபகரித்தாரா?

பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை பல்வேறு நூல்களை எழுதியவர், மொழிபெயர்த்தவர். அவரது 'தென்னாட்டு போர்க்களங்கள்' நூல் பிப்ரவரி 1957ல் வெளியானது. இரண்டாம் பதிப்பு சென்னை அவ்வை நூலகத்தால் 1961 ஜனவரியில் 480 பக்கங்களில் எட்டு ரூபாய் விலையில் வெளிவந்தது. (இப்போது இந்த நூல் பல பதிப்புகள் கண்டு வருகிறது). அதில் பக்கம் 438இல், "தென்னகத்தின் உண்மை தேசிய இயக்கம் இந்துக்களையல்ல,முஸ்லிம்களையல்ல அயலாட்சியையே (பிரிடீஷ்ஸரை) எதிர்த்த தேசிய இயக்கமாகும். அது தென்னகத்தின் முஸ்லிம் பெரும் வீரனான ஹைதராலே தொடங்கப்பட்டது. அதனுடன் தென்னகத்தின் வாழ்வில் மீண்டும் அக அலை தொடங்கிற்று. புது மலர்ச்சி ஊழியும் அதன் கருவிலே பிறந்தது" என்று கூறுவார்.

அதே நூல் 440வது பக்கத்தில் தொடர்ந்து சொல்வார் "மைசூர் அரசியலிலும் தென்னக வாழ்விலிலும் ஹைதர் ஒரு புதிய தேசிய ஒளியை ஏற்றினார். இதற்கு அவன் பிறப்புச் சூழலிலேயே அருந்தகுதி உண்டு. ஏனெனில் குடிமக்கள் மரபிலே பிறந்து, குடி(குலம்) யின் வீரமரபிலும் தன் வீர தீரத்தாலும் அரசியல் ஆற்றல் பெற்ற முதல் தென்னகப் பேரரசன் ஹைதர் அலியே என்னலாம் (எனலாம்).மேலை உலகில் நெப்போலியன் ஒருவனே இவ்வகையில் அவனுக்கு இணையாகக்கூடியவன். தாமே தோற்றுவித்த இப் பேரரசாற்றலை ஹைதரும் அவன் மைந்தன் திப்புவும் 1763முதல் 1798 வரை முப்பத்தைந்து ஆண்டுகள் பேணி வளர்த்துத் தென்னக அரசியல் தேசிய வாழ்வின் நடு மையச் சக்திகள் ஆயினர்" என்பார்.

இவ்வளவு பேராற்றல் மிக்க கன்னட நாட்டின் போர்வாள் ஹைதர் அலி மீது சுமத்தப் படும் குற்றச்சாட்டு "அவர் மைசூர் அரசை உடையார்களிடமிருந்து அபகரித்துக் கொண்டார் "

இது உண்மை தானா? வரலாற்றின் பக்கங்களை நடுநிலையோடு நின்று ஆராய்வோம்.

உடையார்: விஜயநகர அரசர்கள் கி.பி.1350களிலிருந்தே உடையார் என்ற பெயர்களை பெற்றிருப்பதை வரலாற்றில் காண முடிகிறது. விஜயநகர பேரரசின் துவக்கத்தில் சங்கம வமிசத்து அரசர்கள் ஆட்சியில் இருந்தார்கள். ஹரிவீரன் (கி.பி.1336–1355) ஆட்சியை தொடர்ந்து, முதலாம் புக்கன் ஆட்சி செய்தார். முதலாம் புக்கனது முதல் மகன் கம்பண உடையார். இவருக்கு குமார கம்பணர் என்ற பெயரும் உண்டு. குமாரகம்பண உடையாரின் மகன் ஜம்மண உடையார் தமிழ் நாட்டில் மகாமண்டலீசவராகப் பதவியில் இருந்தார். (Dr.Krishnashami, Reader in History, Annamalai University, Thesis approved for the Phd. Degree 1957 with a Foreword by Dr. C.P.Ramaswami Aiyar LLO, D.Litt.,Vice Chancellor, Annamalai University (The Tamil country under Vijayanagar, Annamalai nagar, 1964, Pages 66 - 70)

சோழப்பேரரசர் இராச ராசசோழன் கி.பி.985இல் அரியணை ஏறி கி.பி.1014 வரை ஆட்சி செய்தவன். (ஓ.அ.நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், சென்னை 1989, பக்கம் 229) அபயகுல சேகரன் முதல் சத்திரிய சிகாமணி வரை 39 சிறப்புப் பெயர்கள் இராஜராஜனுக்கு உண்டு. (இரா.நாகசாமி, இராஜராஜன் ,சென்னை 1978,பக்கம் 10) மே 2002இலிருந்து தொடர்ந்து வெளியான பாலகுமாரனின் உடையார் நாவல் பாகம் 1448 பக்கங்கள், பாகம் 2 ஜுலை 2002 464 பக்கங்கள், பாகம் 3 டிசம்பர் 2004, 504 பக்கங்கள், பாகம் 4 ஏப்ரல் 2005 416 பக்கங்கள், பாகம் 5 டிசம்பர் 367 பக்கங்கள்,பாகம் 6 ஆகஸ்ட் 2006 536 பக்கங்ககளில் வெளிவந்தது. இது ராஜராஜனின் வரலாற்றை கூறும் நாவல்.

இந்த நாவலுக்கு ‘உடையார்’ என்று பெயரிட்டுள்ளாரே என்று எண்ணியபோது தான் தஞ்சையில் அவன் எடுத்த பெரியகோயிலிலும் அவனது பட்டத்து அரசி திருவையாற்றில் நிறுவிய உலோக மகா தேவீச் சுரத்தும் முறையே உடையார் இராசராச தேவர் திருச் சதயத் திருவிழா எனவும் உடையார் திங்கள் சதய விழா எனவும் திங்கள் தோறும் சதயத் திருவிழா கொண்டாடப்படுவது நினைவிற்கு வந்தது. இதிலிருந்து இராசராச சோழனுக்கு உடையார் என்ற அடைமொழி இருந்ததும் தெளிவாக தெரிகிறது.(க. த.திருநாவுக்கரசு முதலாம் இராசராச சோழன் சென்னை 1975 பக்கம் 56,57)

சோழவம்ச அரசருக்கும் விஜயநகர அரசருக்கும் உடையார் என்ற நாமம் சொல்லப்படுவதை வரலாற்றில் தெளிவாக காணமுடிகிறது. முதலாம் புக்கானை தொடர்ந்து பதவிக்கு

வந்தவன் ஹரிஹரன். இவர் கி.பி.1404இல் (இரண்டாம் ஹரிஹரராயர்) மறைந்தார். விஜயநகர அரசிற்காக விருபண்ண உடையார், புக்கண்ண உடையார், முதலாம் தேவராயர் என்ற மூன்று புதல்வர்களும் போட்டியிட்டனர். விருபண்ண உடையார் என்ற விருபாட்சன் வெற்றி பெற்று ஆட்சி பீடத்தை கைப்பற்றிருந்தார். ('At first Virupaksha succeeded in securing the throne'. K.A.Nilakanta Shastri, A history of South India from pre historic times to the fall of Vijayanagar, Oxford, 1958, Pages 257,258)

முதலாம் தேவராயர்(1406–1422), இரண்டாம் தேவராயர் (1426–1449), இரண்டாம் விஜயராயரின் இரண்டாவது மகன் மல்லிகார்ச்சுரையர் (1449–1465), இரண்டாம் விருபாட்சராயர் (1465–1485), நரசிங்கராயர், நரச நாய கர்(1503–1506), துருவவீர நரசிம்மா (1506–1509) ஆகியோர் தொடர்ந்து ஆட்சி புரிந்தனர். கிருஷ்ணதேவராயர் 1509–1530 வரை ஆட்சி புரிந்தார். அவரைத் தொடர்ந்து அச்சகதேவராயர் 1545–1570 வரை அரசுப் பொறுப்பில் இருந்தார். இவர் ஆட்சி காலத்தில் தான் தலைக்கோட்டைப் போர் (கி.பி. 1565 ஜனவரி 23) நடைபெற்றது.

சதாசிவராயரின் பாதுகாவலராக இராமராயர் தனது ஆட்சி அதிகாரத்தை வளர்த்து கொண்டு மன்னரைப் போன்று இருந்தான். பிஜப்பூர் சுல்தான் இப்றாஹிம் அதில்ஷா மற்றும் ஆமது நகரத்து புர்ஹான் நைஜாம் ஷா ஆகியோரிடையிலான போட்டியில் இராமராயர் தலையிட்டார். ஆமது நகர சுல்தான் மீது ஆத்திரங்கொண்ட இராமராயர் அதன் மீது படையெடுத்தார். பீடார் வழியாக இராமராயரின் தம்பி திருமலைராயரின் படையும் கோல்கொண்டா வழியாக இராமராயர் படையும் சென்றது.

பின்னர், கி.பி.1544இல் விஜயநகர இராமராயர், ஆமது நகர சுல்தான், கோல்கொண்டா சுல்தான் மூவரும் சேர்ந்து பிஜப்பூரை தாக்கினர். பிஜப்பூர்,ஆமது நகர்,கோல்கொண்டா ஆகிய மூன்று சுல்தானிய அரசுகளும் ஒற்றுமையின்றி ஒன்றோடு ஒன்று போரில் ஈடுபடுமாறு இராமராயர் சூழ்ச்சி செய்தார். கி.பி.1548ல் கலியான்புர கோட்டையை பீடார் சுல்தான்களிடமிருந்து ஆமது நகரத்து சுல்தான் புர்ஹான் நைஜாம்ஷா கைப்பற்ற இராமராயர் உதவி செய்தார். தனது தேவைக்கேற்ப அணி மாறினார் இராமராயர்.

கி.பி.1549இல் பிஜப்பூர் சுல்தானும் பீடார் சுல்தானும் நட்புறவு கொள்ளவே இராமராயர் ஆமது நகரத்து சுல்தானுடன் நடப்புறவு கொண்டார். பிஜப்பூர் சுல்தானுக்கும் ஆமது நகரத்து சுல்தானுக்கும் இடையே பெரும் போர் துவங்கியது.

இராமராயர் இந்தத்தருணத்தில் துங்கபத்திரை ஆற்றுக்கருகில் உள்ள ராய்ச்சூர், முதுகல் பகுதிகளை கைபற்றிக் கொண்டார். கி.பி.1560இல் ஆமது நகரமும் பிஜப்பூரும் மோதிடவே, ஆமது நகரத்திற்கு எதிராக கோல்கொண்டா சுல்தான் சென்றார். அவரோடு இராமராயரும் சேர்ந்து கொண்டார்.

பீடார் நாடு கொள்ளையடிக் கப்பட்டது. கோல்கொண்டா சுல்தான் இழந்த கலியபுரத்தை மீட்க முயன்றார் இராமராயர். அவரது தம்பி வெங்கடாத்திரி கோல் கொண்டா நாட்டின் தென் பகுதிக ளில் புகுந்து இஸ்லாமியர் வாழும் இடங்களில் அவர்கள் வெறுக்கத்தக்க செயல்களை செய்தான். கி.பி.1560இல் விஜயநகரப்படைகள் ஆமது நகரைத் தாக்கிய போது நாடு முழுவதும் பாழாகியது. பேரஸ்டா என்னும் இடத்திலிருந்து கிபர் என்னும் இடம் வரையிலும் ஆமது நகரத்து தவ்லதாபாத் வரையிலும் உயிரினங்களையே காண முடியாதவாறு வெற்றிடங்களாகத் தோன்றின.

பள்ளி வாசல்களை அழித்தனர், முஸ்லிம் பெண்களை கற்பழித்தனர். திருக்குர்ஆணை மிதித்து அவ மதித்தனர். இரண்டாவது படையெடுப்பில் இஸ்லாமியருடைய வீடுகளை கொளுத்தினர். சில மசூதிகளில் தங்கள் குதிரைகளை கட்டி அவற்றை குதிரை லாயங்களாக மாற்றினார். சில மசூதிகளில் உருவ சிலைகளை வைத்து வழிபடவும் துணிந்தனர்.

The infidels of Beejaanuggar left no cruelty unpractised. They insulted the honour of the Mussulman women, destroyed the mosques and did not respect even the sacred Koran. The Hindus of Beejanuggar committed the most outrageous devastations, burning and raging the buildings, putting up their horses in the mosques and performing their abominable idolatrous worship in holy places. (Ferishta, History of the rise of the Mohamedan power in India till A.D.1612. Translated from the original Persian of Mohammed Kasim Ferishta by John Briggs.

(தொகுதிகளாக) கல்கத்தாவில் 1908இல் வெளியிடப்பட்டது. இந்நூலின் தொகுதி 3இல் பக்கம் (120,122 இல் இந்த விவரங்கள் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.)

இந்த இராமராயர் யார் தெரியுமா? தட்சனத்தில் கோல்கொண்டா சுல்தானின் (குதுப் ஷா)அவையில் ஓர் அலுவலன்! அப்படித்தான் வாழ்க்கையை தொடங்கியவர். (கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்திய வரலாறு, வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் விஜயநகர பேரரசின் வீழ்ச்சி வரை, முதல் பகுதி. தமிழாக்கம் மு.ரா.பெருமாள்

முதலியார், சென்னை,1979, பக்கம் 460) இராமராயர் தான் என்றும் அகந் தையுடன்,தக்காணச் சுல்தான் களுடன் அடிக்கடிக் கூடிகொண்டு அவர்களிடையே பகைமையை வளர்த்து தாம் இலாபம் அடைந்து வந்ததை சாமர்த்தியம் என்று எண்ணினான்.

இராமராயரது படை வீரர்கள் இஸ்லாமிய மக்களையும் அவர்களது சமயம், கலை பழக்கவழக்கத்தையும் அலட்சியம் செய்தனர். நிலைமையை உணர்ந்த பிஜப்பூர், கோல்கொண்டா, ஆமது நகர சுல்தான்கள் ஒன்றிணைந்தனர். விஜயநகரப் பேரரசை வீழ்த்திடபெரும்போர் நடைபெற்றது. அதுவே தலைக்கோட்டை போர் ஆகும். பிஜப்பூர் சுல்தான் அலி ஆதில் ஷா தம்மிடமிருந்து வன்முறையில் பெற்றுக்கொண்ட ராய்ச்சூர், முதுகல், எடிகர், பகரகாட் பகுதியையும் திருப்பித் தரவேண்டி தூதரை அனுப்பி வைத்தார். பிஜப்பூர் சுல்தான் எதிர்பார்த்து போல தூதர் அவமானப் படுத்தப்பட்டார். போர் துவங்க ஏற்பாடுகள் தயாராயின. பிஜப்பூர் நாட்டுச் சமவெளியில் படைகள் கூடின.

1564ல் டான் நதி கிருஷ்ணா நதியோடு சேருமிடத்திற்கருகில் உள்ள தலைக்கோட்டை என்னுமிடத்தில் படைகள் கூடின. கிருஷ்ணா நதியின் வட கரையிலுள்ள ராட்சசி, தாங்கடி என்ற இரு கிராமங்களுக்கு இடையே இஸ்லாமியப் படைகள் முகாமிட்டிருந்தன. எனவே இவ்விடத்தில் நடந்த போரை (தலைக்கோட்டைப் போர்) ராட்சசி தாங்கடிபோர் என்றும் அழைப்பார்கள். தலைக்கோட்டைப் போர் என்று நாம் அழைக்கிறோமே அந்தப் போருக்கு உண்மையான பெயர் ராக்சஸ் தக்கடி (தாங்கடி) போர் என்பார் ஹென்றி ஹீராஸ். The Aravindu dynasty of Vijayanagara by Rev. Henry Heras, Vol.I, B.G.Paul Publishers, Madras, 1927, Page 203 (இந்த நூல் 681 பக்கங்களைக் கொண்டது).

தலைக்கோட்டைப் போர் என்பதற்கு ராட்சசி தாங்கடிப் போர் என்ற பெயரும் உண்டு என்ற வரலாற்று உண்மையைச் சொல்லவே இதனைச் சொன்னேன். தலைக்கோட்டைப் போரில் இராமராயரும் வேங்கடாத்திரியும் உயிரிழந்தனர்.

தக்காண வரலாற்றை எழுதிய இஸ்லாமிய வரலாற்றாசிரியர்கள் இப்போர் இஸ்லாமிய சமயத்தைக் காப்பாற்றுவதற்காக நடந்த போராகக் கருதினர். ஆனால் இக்கருத்தில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. (டாக்டர் அ.கிருஷ்ணசாமி, விஜயநகரப் பேரரசின் வரலாறு. பக்கம் 161).

ஆமது நகரத்திலும் கோல் கொண்டாவிலும் இராமராயரும் அவருடைய படையினரும் செய்த கொடுஞ்செயல்களுக்கேற்ற

தண்டனையே இது என்று பெரிஷ்டா கூறுவார். தென்னிந்திய வரலாற்றில் இந்தப் போர் பல மாற்றங்களை உருவாக்கியது என்று ராபர்ட் செவல் கருது கிறார். இந்துக்களுடைய ஆட்சிப் பெருமை யிலிருந்து தென்னிந் தியாவில் எப்படி இஸ்லாமிய அதிகாரம் பரவியது என்பதைக் குறிப்பதே தலைக் கோட்டைப் போர் என்பார் ஹிராஸ் பாதிரியார்.

தலைக்கோட்டைப் போருக்கு பின்பும் கி.பி.1616இல் தோப்பூர் என்னுமிடத்தில் பெரும்போர் ஒன்று நடக்கும் வரையில் விஜயநகரப் பேரரசு தென்னிந்தியாவில் நிலைபெற்றிருந்தது. ஆரவீட்டு வமிசத்து அரசர்களாகிய திருமலைராயர், ஸ்ரீரஸ்வராயர், இரண்டாம் வேங்கட தேவராயர், இராம தேவராயர் ஆட்சிக் காலங்களில் விஜயநகரப் பேரரசு நிலைகுலை யாமல் இருந்ததென நாம் உணர்தல் வேண்டும். இராமராய ரின் தம்பி திருமலைராயர் விஜயநகரத்திலிருந்து பெறுகொண்டாவிற்கு தம்முடைய தலைநகரத்தை மாற்றிய போதிலும் பிஜப்பூர், கோல்கொண்டா, ஆமது நகர் சுல்தான்களிடம் தமது அயல் நாட்டுறவை நல்ல முறையில் வைத்துக் கொண்டார்.

கிருஷ்ணதேவராயரும் அச்சுத தேவராயரும் விஜயநகரத்தை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த காலத்தில் செஞ்சி, தஞ்சாவூர், மதுரை ஆகிய மூன்று நாயக்க அரசுகள் தோன்றின. செஞ்சியில் துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயக்கரும் தஞ்சாவூரில் செவ்வப்ப நாயக்கரும் மதுரையில் விஸ்வநாத நாயக்கரும் தமது ஆட்சியை நிறுவினர்.

தலைக்கோட்டை போருக்குப்பின் சந்திரகிரிக்கும் வேலூருக்கும் விஜயநகர அரசின் தலைநகரம் மாற்றப்பட்டது. அப்போது தமிழ் நாட்டிலுள்ள நாயக்க மன்னர்களுக்கும் இதர அரசர்களுக்கும் இடையே பகை உணர்வு விரோத மனப்பான்மையாக தோன்றியது.விஜயநகர அரசின் பெறுகொண்டா ஆந்திரப் பகுதிக்கு தலைநகரமானது.முதலாம் ஸ்ரீரங்கன் ஆளுநர் ஆனார். திருமலை நாயக்கரின் மற்றொரு பிள்ளையான இராமன் ஸ்ரீரங்கப்பட்டிணம் கன்னடப்பகுதிக்கு ஆளுநர் ஆனார். மூன்றாவது மகனான வேஸ்கட தேவரியர் சந்திரகிரிப் பகுதிக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

தலைக்கோட்டை போருக்கு பின்பு நடந்தவை இவை. தலைக்கோட்டை போரில் இந்துக்களை ஒழிக்கவே போர் நடந்தது என்று வரலாற்றில் திரிக்கப் பட்டு இன்றளவும் சொல்லப்பட்டு வருகிறது. இதிலேதும் உண்மை உண்டா! இல்லை, இல்லவே இல்லை.

செ. திவான்

இரண்டாம் தேவராயர் *(1426-1469)* காலத்தில் அவரது படையில் இஸ்லாமியர்கள் இருந்தனர். அவருக்கு முன்பே மூன்றாம் வல்லாளனும் தமது படையில் முஸ்லிம்களை சேர்த்திருந் தார். விஜயநகர பேரரசில் முஸ்லிம் வீரர்கள் இருந்ததை பெரிஸ்டா உறுதி படுத்துகிறார். (பெரிஸ்டா, முற்கூறிய நூல், முதல் தொகுதி பக்கம் 118)

கிபி 1430 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கல் வெட்டின் படி இரண்டாம் தேவராயருடைய சேனையில் 10000 துருக்க (முஸ்லீம்) குதிரை படை வீரர்கள் இருந்தனர்.

கிபி 1440-1451 ஆம் ஆண்டு சாசனமொன்றில் ஆமதுகான் என்ற இஸ்லாமிய படைத் தலைவன் வீரப்பிரதாப இரண்டாம் தேவராயருடைய சேனையில் இருந்ததைக் குறிக்கிறது. இராமராயர்அயின்உல் முல்க், ஆமூர்கான் என்ற இஸ்லாமிய தலைவர்களை தம்முடைய சகோதரர்கள் போல பாவித்ததாக கோல்கொண்டா வரலாற்று ஆசிரியர் கூறுவார். இஸ்லாமிய வில் வீரர்கள் 2000 பேர் விஜயநகர பேரரசின் படையில் இருந்தார்கள்.

1520-1522 இல் விஜயநகரே பேரரசைபற்றி டாமிங்கோஸ் பயஸ் எழுதிய சரித்திர குறிப்பின் மூலமும் இஸ்லாமிய வீரர்கள் விஜயநகர சேனையில் இருந்தது தெரிய வருகிறது.

"At the end of this street is the Moorish quarter,(இஸ்லாமிய வீரர்களின் குடியிருப்பு) which is at the very end of the city, and of these Moors (Muslims) there are many who are natives of the country and who are paid by the King and belong to his guard.' இஸ்லாமிய வீரர்களின் குடியிருப்பையும்,விஜயநகர சேனையில் சேர்ந்து சம்பளம் பெரும் இஸ்லாமிய வீரர்களைப் பற்றியும் போர்ச்சுகீசிய வரலாற்று ஆசிரியர் டாமிங்கோஸ் பயஸ் எழுதியுள்ளார்.(The Vijayanagar Empire, Domingus Paes, National Book Trust of India, New Delhi, First Edition 1977, Reprint 1980, Page 37).

கிருஷ்ண தேவராயர் இராய்ச்சூர் மீது படையெடுத்துச் சென்ற போது இஸ்லாமிய வீரர்களும் அப்போரில் அவருடன் பங்குகொண்டனர். வெற்றித் திருநகர் என்னும் நாவலை ஞான பீட விருது பெற்ற அகிலன் தந்துள்ளார். அதில் நுழைவாயில் என்ற முன்னுரையில் கூறுவார் 'விஜயநகரம் என்றாலே வெற்றித் திருநகரம். அந்தக் கொடியின் கீழ் தெலுங்கர், கன்னடர், சிந்து, முஸ்லிம், கிறிஸ்துவர் என அனைவரும் திரண்டு நின்று அதைக் காக்கத் தங்கள் இன்னுயிரை ஈந்திருக்கிறார்கள். இந்த நாட்டு முஸ்லிம்கள் யாவருமே கஜினி மகமதுவுடன் வடமேற்கு கால்வாய் வழியாக வந்தவர்கள் அல்லர். அதற்கு சில நூறு ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் அரேபியாவிலிருந்தும்

பாரசீகத்திலிருந்தும் இங்கு வாணிபம் செய்ய வந்தவர்கள்... பண்பாளர்கள். இந்த நாட்டுப் பழங்குடி முஸ்லிம்கள் சேர,பாண்டியர்கள் காலத்திலேயே வாணிபத்திற்காகவும் கலாசார உறவு வளர்ப்பதற்காகவும் இந்த நாட்டுக்கு குடிமக்களாகவே வேரூன்றி விட்டவர்கள் அவர்கள். இந்த மண்ணையே சொந்த மண்ணாகக் கொண்டு இந்த மண்ணின் உப்பாலும் உரத்தாலும் வளர்ந்து இந்த மண்ணுக்காகவே தங்கள் இன்னுயிரை நீத்த பெருமை முஸ்லிம்களுக்கு உண்டு என்பார் அகிலன்.(வெற்றித் திருநகர் நாவலின் முன்னுரையில்)

வெற்றித் திருநகர் எனும் சரித்திர நூலை 1960இல் தந்தவர் பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை. அந்த நூலில் பக்கம் 244 இல் விஜயநகரத் திசையில் முஸ்லிம் படை வீரர்கள் மட்டுமே ஒன்னரை இலட்சம் பேருக்கு மேற்பட்டவர் என்று நாம் அறிவதால் விஜயநகர படைகளில் முஸ்லிம் வீரர்கள், தலைவர்கள் இருந்ததை இந்து வரலாற்று ஆசிரியர்கள் பெரிதும் சுட்டிக் காட்டியுள்ளனர். அதை போல முஸ்லிம் அரசுகளும் (பிஜப்பூர், கோல்கொண்டா, ஆமது நகர், பீடார்) தம்படையில் முக்கியப் பிரிவுகளுக்கு இஸ்லாமியரல்லாத வீரர்களையும் தலைவர்களையும் கொண்டிருந்தது. தாங்கடி போரிலேயே (தலைகோட்டைப் போர்)பிண்டாரிகள் என்ற இனத்தவர் காலாட்படை வீரர்களாகவும் வில்லாளிகளாகவும் கள்ளர் மரபினர் படை வீரர்களாகவும் இருந்து விஜய நகரத் தரப்புக்கு பெருந்தொல்லையும் அழிவும் தந்தனர் என்று தெரிய வருகிறது. (கா. அப்பாத்துரை,வெற்றித் திருநகர், சென்னை 1960, பக்கம் 244, 245)

ஆக தலைக்கோட்டைப் போரில் இருதரப்பிலும் முஸ்லிம்கள் போரிட்டுள்ளனர், மடிந்துள்ளனர். அன்று நடந்தது ஆதிக்க அரசியல் யுத்தமே தவிர அது மத வெற்றிக்கான போர் அல்ல என்பதை வலியுறுத்திடவே இவ் வளவு விரிவாக சொன்னேன். இதன் பின் என்ன நடந்தது? மைசூர் உள்ளிட்ட பகுதியை அரசு செய்தது யார்? அதன் வரலாற்றை விரிவாகவே காணவேண்டியது அவசியமாகிறது.கி.பி. 1399 இல் 'எதுராயர்' 'கிருஷ்ண ராயர்' என்ற இரு இளைஞர்கள் மதுராவிலிருந்து மைசூரை நோக்கி வந்தனர்.

அப்போது மைசூரை அரசுபுரிந்த சாம்ராஜர் என்ற சிற்றரசன் தன மனைவியையும் மகளையும் தனியே விட்டு விட்டு மறைந்தார். அப்போது அரசாங்கத்தின் பொறுப்பு 'மாரா நாயகன்' என்பவனிடம் சிக்கியது. அவன் அப்போதே மைசூர் சிற்றரசக் குடும்பத்தைக் கேவலமாக நடத்தத் தொடங்கினான். இதை மதுராவிலிருந்து வந்த இளைஞர்கள் அறிந்தனர்.

லிங்காயத்து மரபினைச் சேர்ந்த மதகுருக்கள், திம்மராசய்யா,நாராயணய்யா (இவர்களையும் ‘உடையார்’ என்று அழைப்பர்)ஆகிய இருவரையும் மதுரா இளைஞர்கள் சந்தித்தனர். அதன் விளைவாக மாரா நாயகனை இருவரும் எதிர்த்தனர்,போர்க்களத்தில் மாரா நாயகன் கொல்லப்பட்டான். மதுரா இளைஞன் எது ராயன், சாமராஜன் (ஏற்கனவே மைசூர் சிற்றரசை ஆண்டு மறைந்தவர்) மகளையும் மணந்து தனது மாமனாரின் நாட்டுக்கு அரசனானான்.

அப்போது எதுராயனின் ஆட்சிப் பகுதி மிகச் சிறியது. மேல் கோட்டையில் அமைந்த அவன் வழிபாடும் தெய்வத்தின் பெயரால் மலையிலே கோட்டை ஒன்றை கட்டினான். சாமுண்டி என்ற தனது குல தெய்வத்தை வணங்க த்தொடங்கினான். 24 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பின் அவனது மகன் இரையப்பெட்ட சாமராஜ உடையார் 36 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

இந்த அரசர்களுக்கு ‘உடையார்’ பட்டம் எவ்வாறு வந்தது என்பது ஒரு ‘ஆராய்ச்சிக் குரிய பொருள்’ என்பார் ஏ.எஸ். பாலசுப்ர மணியன் (முன்னாள் டெபுட்டி செக்ரெட் டரி, பப்ளிக் சர்வீஸ் கமிஷன், பெங்களூர், கருநாடக மாநில வரலாறு நூல் பக்கம் 27. ஆண்டு விவரம் இல்லை. இதில் 1976 வரையிலான வரலாறு சொல்லப் பட்டிருப் பதால் இந்த நூல் அதற்குப் பின் வெளிவந்ததாக இருக்கலாம்). இரையப்பெட்ட சாம்ராஜ உடையாரைத் தொடர்ந்து அவரது மகன் திம்மராஜ உடையார், அதன் பின் இரண்டாம் சாமராஜ உடையார் ஆகியோர் அரசு புரிந்தனர். அதன் பின் சாமராஜ உடையார் கி.பி. 1572 இல் அரியாசனம் ஏறினார். மின்னல் தலையில் தாக்கியதால் தலை மொட்டையாகியது. எனவே ‘வழுக்கை சாம்ராஜ உடையார்’ எனும் பெயரினையும் இவர் பெற்றார். அவருக்குபின் அவரது மூத்த மகன் பெட்ட சாமராஜ உடையார், அதன் பின் 1578இல் அவரது இளைய சகோதரர் இராஜ உடையார் அரசனானான். 40 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான்.

அலமேலு அம்மையின் தற்கொலை

இராஜ உடையார் காலத்தில் ஸ்ரீரங்கப்பட்டணம் (மைசூர் அரசுக்கு) தலைநகரமாக இருந்தது. (சரஸ்வதி ராம்நாத் ,கர்நாடக மாநிலம் கிறிஸ்துவ இலக்கிய சங்கம் 1976.பக்கம் 26)அதற்கு காரணம் கி.பி.1610இல் விஜயநகரத்து இராஜபிரதிநிதியை (திருமலதேவன்)வெற்றி கொண்டு இராஜ உடை யார் தனது தலைநகரை ஸ்ரீரங்கப்பட்டினத்திற்கு மாற்றினார். அவரது காலத்தில் ஸ்ரீரங்கப்பட்டி னத்திலுள்ள கோயிலுக்கு

வெள்ளிக்கிழமை தோறும் பூசைக்கு இராஜப்பிரதிநிதியின் அரண்மனையிலிருந்து விக்ரகத்தை அலங்கரிக்க நகைகளை அனுப்புவது வழக்கம். இராஜ உடையார் ஸ்ரீரங்க பட்டணத்தைக் கைப்பற்றியதும் இவ்வழக்கத்தை நிறுத்தினார். அதோடு விஜயநகரத்து இராஜப் பிரதிநிதியின் மனைவி அலமேலு அம்மா அந்த நகைகளை தன்னுடன் எடுத்து சென்று விட்டதாகவும் பழி கூறினார்.

இராஜ உடையாரின் தூதுவர்கள் அலமேலு அம்மாவிடம் சென்றனர், பலாத்காரத்தை பயன்படுத்தினர். சீற்றம் கொண்ட அலமேலு அம்மாள், நகைகளை தன் இடுப்பில் இணைத்துக் கொண்டு "மைசூர் அரசர்களுக்கு சந்ததி இல்லாமல் போகட்டும்" என்று சபித்தாள். "மாலங்கி என்ற இடத்தில் காவிரி ஆற்றில் ஆழம் தெரியாத குட்டையில் விழுந்து உயிரை மாய்த்தாள். இதனால் இராஜ உடையார் மனம் நொந்தார். அலமேலு அம்மையின் சீற்றத்தையும் சாபத்தையும் தணிக்க வேண்டி அலமேலு அம்மையின் விக்கிரத்தை பொன்னாலே அமைத்து, நவராத்திரி விழாவில் மஹாநவமி தினத்தன்று வணங்கத்ழ தொடங்கினான். இவன் ஆரம்பித்து வைத்த இந்த வழக்கம் நான்கு நூற்றாண்டு களாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது". *(ஏ.எஸ்.பாலசுப்ரமணியன், முற்கூறிய நூல், பக்கம் 29)*

விஜய நகரத்து இராஜப் பிரதிநிதி திருமலராயன் நோய் வந்து 'தலைக்காடு' என்ற ஸ்தலத்திற்கு யாத்திரை போயிருந்த போது தான் இராஜ உடையார் இந்த நகரத்தைக் கைப்பற்றினான்.

அது மட்டுமா? பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கி.பி. 1610இல் விஜயநகர அரசராயிருந்த வெங்கிடப்பதி ராயனுக்கும் ஸ்ரீரங்கப் பட்ட ணத்து பிரதிநிதி திருமலராய னுக்கும் விரோதம் ஏற்பட்டதால் விஜயநகர அரசர் ஏற்பாட்டின் படி அவனது தூண்டுதலால் இராஜ உடையார் ஸ்ரீரங்கப் பட்டணத்தை தாக்கி பிடித்துக் கொண்டான். ("வஞ் சனையாய் உபாயத் திருலே சிறிதும் சனங்கள் உள்ளே வந்து அதற்கு மேல் ராசா உடையாரும் உள்ளே வந்து கோட்டை கவசம் பள்ளிகொண்டார்". கொங்கு தேச இராசாக்கள் இ.வி.ராமச்சந்திரன் செட்டியார், சென்னை, 1950,பக்கம் 38)

'மைசூர் ராஜ குடும்பத்தில் மகாராஜாவாகப் பட்டங்கட்டி கொள்பவர்களுக்கு குழந்தைகளே இல்லாமல் போகக் கடவது ' என்று சாபமிட்டு விட்டு,தலைக்காட்டுக்குப் பக்கத்திலே மாலங்கி என்னுமிடத்தில் காவேரி ஆற்றில் விழுந்து செத்தாள். இதுதான் மைசூர் சாபம் என்பது. அது

முதல் மைசூர் மகாராஜாக்களாக வருபவர்களில் ஒன்று விட்ட ஒருவருக்கு குழந்தைகள் இல்லாமலேயே போய்விட்டதாம்.

அந்த மாதிரியாகச் சாபமிட்ட அலமேலம்மா காவிரியில் விழுந்த போது நேராகத் தண்ணீரில் விழவில்லை, ஒரு பாறையின் மேல் விழுந்து எகிரிப் போய் ஆற்றுத் தண்ணீரில் விழுந்தாள். ஆகையால் அலமேலு அம்மா இட்ட சாபமும் எகிறிப்போய் ஒன்று விட்ட ஒரு மகாராஜாவைத்தான் பீடிக்கிறது என்பர்.

"தலக்காடு மரல் ஆகாலி
மாலிங்கி, மருவு ஆகாலி!
மைசூரு தொரகளு
மக்கள் இல்லாத வேரா காலி"
"தலைக்காடு மணல் ஆகக் கடவது
மாலிங்கி நீர்ச்சுழி ஆகக் கடவது
மைசூர் மன்னர்களுக்கு குழந்தைகள்
இல்லாமல் பூக்கள் கடவது"

உடையார்கள் வரலாறு ஒரு புறம் நிகழ்ந்து கொண்டிருக்க மறுபுறும், ஆங்கிலேயர் வங்காளத்தில் வெற்றி பெற்றார்கள். பிரெஞ்சுக்காரர்களையும் அவர்கள் தோற்கடித்து விட்டார்கள். ஆயினும் அவர்கள் தென்னிந்தியாவில் பெரிய கஷ்டங்களையெல்லாம் எதிர்த்துச் சமாளிக்க வேண்டியிருந்தது. முடிவான வெற்றி கிடைக்கும் முன் அவர்களுக்குப் பல தாழ்ச்சி வீழ்ச்சிகள் நேரிட்டன. அவர்களுடைய கொடிய எதிரி மைசூரை ஆண்ட ஹைதர் அலியாவார். அவன் மிகத் திறமையான ஒரு படைத்தலைவன். பகைவருக்கு விஷம் போற்கொடியவன். அவன் ஆங்கிலேயப் படைகளை பன்முறை தோற்கடித்தான். 1769 இல் சென்னையிலேயே தனக்குச் சாதகமான நிபந்தனைகளை ஹைதர் அலி விதிக்கும் படியாகவும் ஆங்கிலேயர் அவற்றை ஒப்புக்கொள்ளும் படியாகவும் நேர்ந்தது. பத்து வருஷங்களுக்குப் பிறகு அவனுக்கு மீண்டும் பெரிய வெற்றி கிடைத்தது.

ஹைதர் அலி குறித்து பண்டித நேரு தனது மகளுக்கு எழுதிய 92 வது கடிதத்தில் (1932 செப்டம்பர் 13) இதனை குறிப்பிடுகிறார்.

Haider Ali of Mysore was their bitter opponent. He was an able and fierce leader, and he repeatedly defeated the English forces (Jawaharlal Nehru, Glimpses of World History, London, 1949,page 316)

பத்ஹே ஹைதர் அலி கான் பகதூர் (தைரியம் கொண்ட வெற்றி சிங்கம்) ஃபத்ஹே முஹம்மது-மாஜிதா பேகம் தம்பதியினருக்கு 1721 இல் பிறந்தவர். மீர்ஹுசைன்அலி கான் கிர்மானி ஹைதரின் கி.பி.1842 இல் The History of Hyder Naik என்ற பெயரில் பாரசீக மொழியில் எழுதி, Colonel W.Miles ஆங்கிலத்தில் அதனை மொழி பெயர்த்து 513 பக்கங்களில் வெளியிட்டுள்ளார்.கி.பி.1919 இல் சதாவதானம் தெ.கிருஷ்ணசாமிப் பாவலர் எழுதி சென்னை ஆர்.வெங்கடாசலம் அண்டு கம்பெனியார் 12 அணா விலையில் 171 பக்கங்களில் 'ஐதர்அலி' என்னும் நூல் வெளிவந்துள்ளது.

கி.பி.1936 இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்க முத்திங்கள் வெளியீடு இதழான தமிழ்த்தாயில் தாளாசிரியர் இ.மு.சுப்ரமணிய பிள்ளையவர்களால் மாலை 3, மலர் 1.2.3 இதழ்களில் எழுதப்பட்டது ஐதராலி. 1958 இல் பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார் எழுதிய 'கன்னட நாட்டின் போர்வாள் ஹைதர் அலி' 116 பக்கங்களில் வெளிவந்தது. சார் வால்டர் ஸ்காட் எழுதிய Surgeon's Daughter மருத்துவர் மகள் நூலில் ஹைதர் அலி பற்றிய குறிப்புகள் இருக்கிறது. (தமிழாக்கம் மு.சதாசிவம். 1962 இல் வெளிவந்த 302 பக்கங்களைக் கொண்ட நாவல்) அது போல மாஸ்தி வேங்கடேச அய்யங்கார் எழுதி கலைமகள் வெளியீடாக 1963 இல் வெளிவந்த 'சென்ன பசவநாயக்கன்' எனும் நாவலில் (504 பக்கங்கள்) ஹைதரைப் பற்றிய குறிப்புகள் உண்டு.

1965இல் எம்.எஸ்.சுப்ரமணிய ஐயர் எழுதிய வரலாற்றுக் கதைகள் நூலில் 'ஹைதரின் வரிசை' என்ற சிறுகதை உண்டு. 1942 இல் தி.நா.சுப்பிரமணியன் எழுதி சூடாமணிப் பிரசுராலயம், சென்னை ஒரு ரூபாய் விலையில் வெளியிட்ட 'ஹைதர் காலம்' ஒன்பது சிறுகதைகள் கொண்டது. அத்தனையும் ஹைதர் அலி பற்றியது.

1982 இல் கோவிமணிசேகரன் எழுதிய 142 பக்கங்களைக் கொண்ட நூல் 'ஹைதர் அலி'. 2002 இல் பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரை எழுதியதுடன் தோப்பூர் திருவேங்கடமும் இணைந்து எழுதிய நூல் கன்னட நாட்டின் போர்வாள் ஹைதர் அலி திப்பு சுல்தான். 2013 ஏப்ரல் தீக்கதிர் வண்ணக்கதிரில் தாஸ் எழுதிய கட்டுரை 'ஹைதரின் அம்பு'.

எனது பிரியத்திற்குரிய பேராசிரியர் மா.க.அண்ணாமலையும், முனைவர் மா.சு.சாந்தா ஞானதேசிகனும் இணைந்து எழுதிய வரலாற்றுப் புதினம் 'சாம்ராட் ஹைதரலியின் சபதம்'. 2013

இல் 580 பக்கங்களில் வெளியாகியுள்ளது. சமநிலைச் சமுதாயம் செப்டம்பர் 2014 இதழில் ‘தேசம் மறந்த மாவீரர் ஹைதர் அலி’ எனும் ராபியா குமரன் கட்டுரை வெளிவந்துள்ளது.

இப்படி ஹைதர் அலி குறித்து வந்த நூல்களைப்பற்றி சொல்லிக் கொண்டே செல்லலாம். (வாசகர்கள் அவைகளைத் தேடிப் படிப்பதற்காக இந்த விவரங்களைத் தந்துள்ளேன்). இனி ஹைதர் - மைசூர் அரசு உறவு நிலைப்பற்றிய செய்திக்கு வருவோம். ஹைதரின் உறவினரான அப்பாஸ் அலிகான் பேராசையால் ஹைதர் அலி, அவரது தாய், அண்ணன் ஆகியோரை சிறையிலிட்டு கொடுமைக் குள்ளாக்கினான். அப்போது ஹைதருக்கு வயது 3 அல்லது 5. ஒரு பெரிய முரசினுள் வைத்து அதிர்ச்சியால் துடிதுடித்து வீறிடும்படி முரசு அறையப் பெற்றது. இக்கொடுமையைக் கேள்விப் பட்ட ஹைதர் அலியின் உறவினரான மைசூரில் வாழ்ந்த மூத்த ஹைதர், தனது சிற்றன்னையரும் தம்பியரும் படும் அவதி கேட்டு அவர்களை விடுவித்தான். தன் பாதுகாப் பில் வைத்துக் கொண்டான். வயது வந்தவு டன் தனது படையில் வீரனாக இருவரை யும் சேர்த்துக் கொண்டான். இவ் வாறு சாதாரண சிப்பாயாகச் சேர்ந்தவர் ஹைதர்.

1749இல் ஆம்பூர் போர் நடைபெற்றது. ஆற்காடு நவாப்களுக்கிடை யேயான போர் அது. இதே நேரத் தில் தேவனஹள்ளிக் கோட்டையை மைசூர் படைகள் முற்றுகையிட்டன. மூத்த ஹைதர் இந்தப் போரில் வீரப் போர் புரிந்து மாண்டார். ஹைதர் அலியின் அண்ணன் ஷாபாஸ் போரில் காட்டிய வீரம் தனது பெரிய தந்தையின் பதவிக்கு அவரை கொண்டு சென்றது.

நமது ஹைதர் அலி இப்போரில் ஒரு புதுப்படை வீரன்; அந்த நிலையிலும் ஹைதர் ஆற்றிய அஞ்சாத வீரதீரச் செயல்கள் பாராட்டைப் பெற்று, ஒரு சிறுபடைப் பிரிவின் பொறுப்பாளரா னார் ஹைதர் அலி. 200 காலாட்படை, 50 குதிரைப்படை வீரர்களுக்கான பொறுப்பும் தேவனஹள்ளி கோட்டையைப் பாதுகாக்கும் பொறுப்பும் ஹைதர் அலிக்கு கிடைத்தது.

ஹைதர் அரசியல் வாழ்வில் நுழைவதற்கு முன்பே நிஜாமும் ஆற்காடு நவாபும் விடுதலை வாழ்வின் சரிவை நோக்கிச் சறுக்கத் தொடங்கிவிட் டனர். ஹைதரின் பெருமை அவர் விடுதலை வாழ்வு சரியாமல் காக்க முயன்றார் என்பது மட்டுமல்ல, விடுதலை சரிவுறும் காலத்திலேயே புதிய

விடுதலைக்கு அடிகோலினார். அது மட்டுமின்றி, ஹைதரின் முழூப்பெருமை இவை கடந்த ஒன்று. ஹைதர் அலி தென்னகத்தின் பொருளியல் சரிவு கண்டு அதைத் தடுக்க அரும் பாடுபட்டார் என்பதே வரலாற்று உண்மையாகும்.

ஹைதர் அலி 19வது வயதில் மொய்னுதீனின் புதல்வி பக்ருன்னிசாவை மணந்தார். அவள் நோயுற்றாள். அதன் பின்னர் மீர் அலி ரஸாகானின் மைத்துனியை, மக்தூம் சாயபு மகள் ஃபஹ்ருன்னிஸாவை மணந்தார். இந்தத் தம்பதியருக்குப் பிறந்தவர் தான் தீரன் திப்புசுல்தான்.

இந்தியாவில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரர்களும் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ள முயன்று கொண்டிருந்த வேளை இது. தக்காண சுபேதார் சாலபட்ஜாவ் ஸ்ரீரங்கப் பட்டணத்தைத் தாக்கினான். எதிர்ப்பை தாங்க முடியாமல் மைசூர் தளவாய் தேவராஜையா 56 இலட்சம் நஷ்டஈடு கொடுத்து அரசைக் காப்பாற்றினான். ஆற்காடு நவாப் முகமதலி சதி புரிந்தான். மைசூர் மன்னரிடம் கோள் மூட்டினார். பண ஆசையால் மராட்டியர் அச்சுறுத்தினர். இந்த நிலையில் சர்வாதிகாரி நஞ்சராஜய்யா மைசூருக்குச் செல்லாமல் சத்தியமங்கலத்தில் தங்கியிருந்தான். இதனையறிந்து மராட்டிய பேஷ்வா பாலாஜிராவ் நானா மைசூர் மீது படையெடுத்தான். மைசூரை அடுத்திருந்த சுநா மாகாணம் கைப்பற்றப்பட்டது. அடுத்து மைசூர்ப்பகுதி சூறையாடப்பட்டது. மராட்டியருக்கு ஒரு கோடி வெள்ளி லஞ்சமாக தந்து மைசூர் அரசர் தப்பித்துக் கொண்டார்.

சர்வாதிகாரி நஞ்சராஜய்யா தனது படைவீரர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருந்ததால் படைகள் கிளர்ச்சி புரிந்தன. திண்டுக்கல் கோட்டை யின் அதிபதியாக இருந்த ஹைதர் அலிக்கு தகவல் தரப்பட்டது. மைசூர் அரசின் உடமைகள் விற்கப்பட்டு படைவீரர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது.

மேல் கடற்கரைப் பகுதியை மீட்க சர்வாதிகாரி நஞ்சராஜய்யா, ஹைதர் அலியை அனுப்பினான். திண்டுக்கல், கோயமுத்தூர், பாலக்காடு, கள்ளிக்கோட்டை எல்லாம் ஹைதர்அலியின் கீழ் இருந்தது. எனவே ஏராளமான பொருட்களை ஹைதர் அலி மைசூர் அரசுக்கு அளித்தார். மைசூர் அரசர் நஞ்சராஜய்யாவை பணம் கிடைத்தவுடன் ஏற்றார். உடன் சென்ற ஹைதர் அலிக்கும் மதிப்பு உயர்ந்தது.

கடப்பை, கர்னூல் தலைவர்கள் மேற்கு மைசூர்ப் பகுதியில் குடிமக்களையும் தலைவர்களையும் கிளர்ச்சிக்குத் தூண்டினர். கங்காராம் நடத்திய கிளர்ச்சியை அடக்கிட ஹைதர் அலி சென்றார். வென்றார். எதிரிகள் தப்பித்தோம், பிழைத்தோம் என்று ஓடினர். ஹைதரின் செல்வாக்கு மேலும் பெருகியது. இந்நிலையில் நஞ்சராஜய்யாவின் தம்பி தேவராஜன் மைசூர் அரசைக் கைப்பற்ற முயன்றான். ஹைதர் விரைந்து சென்று கிளர்ச்சியை அடக்கி வெற்றி பெற்றார். புகழ் மேலும் மேலும் வளர்ந்தது.

மைசூரின் பாதுகாப்பைக் கருதி தொலைவிலிருந்து வீரர்கள் பலரைக் கொண்டு வந்து படையை வலுவாக்கினார். பிரெஞ்சுக்காரர்கள் பலரைப் படையின் பயிற்சித் துறையில் பணியாற்ற வைத்தார். ஆற்காடு முகமது அலியால் துரத்தப்பட்ட வீரர்களான ஆசாத்கான், முகமது உமர் சர்தார்கான் ஆகியோரைத் தனது படையில் சேர்த்தார் ஹைதர் அலி.

முகம்மது உமரின் புதல்வர் முகமது அலியே ஹைதரின் பிற்கால வாழ்வில் ஒப்பற்ற படைத்தலைவராக விளங்கினார். 1755இல் திண்டுக்கல்லில் வெடி மருந்துச்சாலை அமைத்தார். வெடி மருந்துப் பொருட்களையும் படைக் கருவிகளையும் திரட்டினார்.

வலிமை மிக்க சக்தியாக ஹைதர் அலி வளர்ந்தார்.1757 இல் மராட்டிய பேஷ்வா பாலாஜி பாஜிராவ் மீண்டும் மீண்டும் கொள்ளையிட்டு மைசூர் நாட்டை பாழாக்கினான். மைசூர் மன்னன் ஐந்து இலட்சம் வெள்ளி இலஞ்சமாக கொடுத்தான். 27 இலட்சம் தருவதாகவும் வாக்களித்தான். வாக்களித்த தொகைக்கு மைசூர் அரசின் வட பகுதி முழுவதும் அடமானம் வைக்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் மராட்டிய காவற்படை வீரர்கள் ஆங்காங்கே தங்கி மைசூர் அரசின் வடபகுதியில் மனம் போன போக்கில் செல்வத்தை கொள்ளையிட்டுக் கொண்டிருந் தனர். மைசூர் மன்னரோ தலைமை தாங்க வரவில்லை. நிலமையைச் சமாளிக்க வல்லவர் ஹைதர் அலி ஒருவரே என்று மைசூர் மன்னரிடம் கூறப்பட்டது. உடனே மைசூர் அரசர் நாட்டின் முழு நிறை உரிமையுடைய முதல்வராக ஹைதர் அலியை ஆக்கினார். மன்னரோடு ஒத்த பொன்னணிமணி விருதுகளுடன் படைதிரட்டல், படைத்தலைவர்களுக்கு ஆணையிடல், கருவூலத்தையும் நாட்டுச் செலவாணியையும் கையாளல், வரிவிதித்தல் போன்ற சிறப்புரிமைகள் ஹைதர் அலிக்கு மைசூர் அரசரவையில் தரப்பட்டது.(கா.அப்பாத்துரை, முதற்கூறிய நூல், பக்கம் 40,41) படை வீரர்களுக்கான நேர்மையான சம்பள

பாக்கியை வழங்கிட நடவடிக்கை எடுத்தார். மராட்டியருக்கு கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்காமல் ஹைதர் அலி காலம் தாழ்த்தினார். அதோடு இழந்த பகுதிகளை திரும்பவும் கைப்பற்றிக்கொண்டார்.

சீற்றங்கொண்ட மராட்டிய பேஷ்வா 1759 இல் கோபால்ராவ் ஷரி என்ற தமது படைத்தலைவனை மைசூர் மீது பெரும் படையுடன் ஏவினான். கடல் போன்ற மராட்டிய படைகள் மைசூர் முழுவதையும் பங்களூர் நகரையும் முற்றுகை இட்டன. ஹைதர் அலி, லத்தீப் அலிபேக் என்பவரை மராட்டியரின் பிடியிலிருந்த சென்'னப் பட்டணத்தைத் தாக்கிப் பிடிக்க வைத்தார். உடனே மராத்தியர்களால் பங்களூர் முற்றுகை கைவிடப்பட்டது. ஹைதர் இராஜதந்திரத்தோடு நேரடி களப் போரில் ஈடுபடவில்லை. தேர்ந்தெடுத்த குதிரைப் படைகளை ஆங்காங்கு அனுப்பிய ஹைதர் அலி மராத்திய படைகளுக்கு பெருந்தொல்லை விளைவித்தார். இரண்டாண்டுகள் மராத்தியர் கோபால் ராவினால் வெற்றி பெற முடியவில்லை.

மூன்றாம் பானிபட் போரின் காரணமாக (1761)மராத்திய கோபால் ராவ் திரும்ப அழைக்கப்பட்டான். தான் வென்ற பகுதியையும் பிணையாகக் கோரிய பகுதியையும் விட்டு கோபால் ராவ் 16 இலட்சம் மட்டும் பெற்றுக்கொண்டு பூனாவிற்கு மீண்டான்.

ஹைதர் அலி தனது விடா முயற்சியால் அறிவார்ந்த திட்டங்களால் கடல் போன்ற மராத்திய படையால் மைசூரைச் சூழ்ந்த காரிருளை விளக்கினார். மைசூர் மன்னர் மகிழ்ச்சி அடைந்தார். எல்லையற்ற அன்பால் ஹைதர் அலிக்கு தலைமைப் பதவியை நிரந்தரமாக்கினார். விருதுகள் பல வழங்கினார்.

தம்மையொத்த பிள்ளைகள் எல்லாம் பட்டம் பறக்க விட்டுக் கிட்டியாடித் திரிந்து கொண்டிருந்த போது ஹைதர் அலி தமது கையில் வாள் எடுத்துப் போராடினார். அதே நேரத்தில் மைசூர் அரச குடும்பத்தின் அதிகாரமும் செல்வாக்கும் சரிந்து சீர் குலைந்து கொண்டே வந்தது. இது தான் வரலாற்று உண்மை.

ஹைதர் அலி மைசூரின் புகழின் உச்சத்தில் இருந்த 1761 முதல் 1782 வரை இருந்த 21 ஆண்டு காலத்திலும் ஓர் ஆண்டு கூடப் போர் இல்லாமல் கழிந்ததில்லை. ஓர் ஆண்டு காலம் கூட ஹைதர் அலி தலைநகரில் அரண்மனை வாழ்வு வாழ்ந்ததும் இல்லை. ஹைதரின் குடும்பத்தின் வாழ்விலும் அரண்மனை வாழ்விலும் எல்லாம் திட்டப் படுத்தி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன என்பார் கா.அப்பாத்துரை (முற் கூறிய நூல் பக்கம் 52).

1782 டிசம்பர் 7இல் ஹைதர் அலி மறைந்தார். ஹைதர் மைசூரில் அதிகாரம் செலுத்திய போது மக்கள் மத்தியில் எந்த எதிர்ப்பும் எழவில்லை. மேலும் மைசூர் சிம்மாசனத்தில் வாழாமல், காவிரி நதி மைசூர் நகருக்கு வட திசையில் ஒன்பதாவது மைலில் (8 கி.மி. 5 மைல்) இரண்டு கிளைகளாகப் பிரிந்து ஒன்று சேருவதால் உருவான ஸ்ரீரங்கப்பட்டணத் தீவிலேயே வாழ்ந்தவர் ஹைதர் அலி.

ஐரோப்பிய பாணியில் துருப்புகளைப் பழக்கி இந்தியாவிலேயே பலம் வாய்ந்த சைனியத்தை உருவாக்கி 1766 இல் கிருஷ்ணராஜ உடையார் மறைந்த போது மைசூர் சீமையில் முடிசூடா மன்னராக விளங்கி மிகவும் வலிமையான ஆட்சியை நிறுவினான்.

“ஆங்கிலேயர் தங்களுடைய விளைபொருட்களையும் கைத்தொழிற்பொருட்களையும் மாற்றுவதற்காக இங்கே வந்திருக் கிறார்கள். நம் நாட்டிலுள்ள பொருட்களையும் மக்களையும் வளத்தையும் புகழையும் அவர்கள் கெடுத்து விட்டார்கள். தாம் கவர்ந்து செல்லும் பெரும் பொருட் களுக்குப் பதிலாக தமது தீய ஒழுக்கங்களையும் தொத்து நோய்களையும் வறுமை துன்பங் களையும் கொண்டு வந்து நம் நாட்டில் அவர்கள் நிரப்புகிறார்கள். தீவினை வசத்தால் தம் வசப்பட்ட அரசர்களை சந்தையிற் காட்டும் வாணிப பொருட்களைப் போலவே நடத்து வதோடு, அவ்வரசர்கள் தங்களுக்கு எதுவரை பயன்படுகின்றனரோ அது வரையே அவர்களை மதித்தும் வருகிறார்கள். ஆங்கிலேயர் எத்தனை வாக்குறுதிகளும் உடன்படிக்கைகளும் செய்திருக்கின்றனரோ அத்தனை மோசடிகளும் தீச் செயல்களும் செய்தி ருக்கிறார்கள்” என்று முழங்கியவர் ஹைதர் அலி.

தாம் பெற்ற வெற்றிகளினால் மயங்கி ஹைதர் அலி தலைகால் தெரியாமல் நடக்கவில்லை. அவர் அமைதியான அறிவுடையவர். மைசூரின் பழைய அரசரை அவருடைய அரண்மனையிலேயே குடும்பத்தோடு இன்பமாக வாழச் செய்து அவருக்கு வேண்டும் வசதிகளையும் அவர் செய்து வந்தார். அவ்வரசர் ஆளுந்திறமை யற்றவர் என்பதை குடிமகனுக்கு விலக்கிக் காட்டி அவருக்காக பணியாற்ற தொடங்கினார்.

தமது படைவீரருக்கு அவர் அளவில்லா பரிசுகளை அளித்தார். அதனால் மகிழ்ந்த படை அவரைத் தெய்வமெனப் (இறைவன் பிழை பொறுக்க)போற்றி வந்தது. பாளையக் காரர்களும் குடியா னவர்களும் அவருடைய அரசாட்சியை முறை தவறியதென்று கூறவும் முன் வரவில்லை என்பார் இ.மு.சுப்ரமணிய பிள்ளை. (சென்னை மாகாண தமிழ் சங்க

அமைச்சர் தாம் நடத்திய தமிழ்த் தாய் இதழில் மாலை 3 மலர் இல் பக்கம் 30 1936 ஆகஸ்ட்)

1749 இல் தேவனஹள்ளி கோட்டைப் போரில் மைசூர் படை தோற்று ஓடும் நிலையில் அதனைக் காப்பாற்றி மைசூர் அரசைக்காத்தவர் ஹைதர் அலி. கி.பி.1757 இல்மராத்திய படையெடுப்பின் போது மைசூர் உடையார் வெறும் பாளையக் காரர்தான். அவரிடம் மைசூரும் 33 கிராமங்களுமே இருந்தன. ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு முறையாகச் சென்று போரிட்டு கண்டிராவ்வை (குந்திராவ்)சிறையிலிட்ட போதே மைசூர் அரச குடும்பத்தினரை அழித்திருக்கலாம். அப்போது அதனை தடுப்பார் இல்லை. ஆனால், அவ்வாறு செய்யாமல் தனது ராஜ விசுவாசத்தைக் காட்டியவர் ஹைதர் அலி. (மஹதி ,இஸ்லாமியச் சோலை, செடி 1 மலர் 3 ஜனவரி 1962 பக்கம் 31)இப்போது சொல்லுங்கள் ஹைதர் மைசூர் அரசை அபகரித்தவரா?

வியாபாரம் செய்ய வந்து நாடாள் பவர்களாக மாறிய ஐரோப்பியர்களை எதிர்த்து விடுதலைப் போர் முரசு கொட்டிய வீர வேந்தர்களும் நம் நாட்டில் அக்காலத்தில் இருந்தனர். மைசூரை ஆண்ட மன்னன் ஹைதரும் அவனுக்கு பின் அவன் மகன் திப்பு சுல்தானும் அத்தகைய அரசர்களாவர். இந்திய வரலாற்றில் இவ்விருவரின் பெயர்களும் அழியா இடம் பெற்று விட்டன என்று எனது பிரியத்திற்குரிய பேராசிரியர் மா.க. அண்ணாமலையும் அவரது சகோதரியான மா.சு.சாந்தாவும் தந்த நூலின் முன்னுரையில் கூறுவது எவ்வளவு பொருத்தம்.

குடகு நாட்டில் கொடுமை புரிந்தார்களா?

அவுத் (ஔது) நாட்டின் நவாப் சதாத் கான் பாரசீகத்தில் பிரபுக்குலத்தில் பிறந்தவர். ஐதராபாத்தில் நிஜாம் மரபைத் தோற்றுவித்த நிஜாம் உல் முல்க்கின் முன்னோர் மத்திய ஆசியாவில் பொக்காரோ நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆனால் உலகம் மெச்சும் வகையில் அரசாண்ட ஹைதர் (சிங்கம்) அலிக்கு குலச்சிறப்பு ஏதுமில்லை. பஞ்சாப் முஸ்லிம் ஞானி ஷைக் வலி முகம்மதுவின் வழிவந்தவர் ஹைதர் அலி. 1749 இல் தேவன ஹள்ளி முற்றுகையின் போது சிறு படைப்பிரிவின் தலைவரான ஹைதரின் எழுச்சி வேகம் ஒருவால் நட்சத்திரத்தையும் மிஞ்சுவதாக இருந்தது. (ப.சிவனடி ,இந்திய சரித்திரக் களஞ்சியம், தொகுதி 3, சென்னை 1990 பக்கம் 81)

“ஐதர் அலியின் வாழ்க்கையை கி.பி.1760 முதல் 1780 வரை நுணுகி ஆராயும் போது,ஹைதர் அலி அருமையான முறையில் திட்ட மிட்டுச் செயல்பட்டவர் என்றும்,அது கட்டங்கட்டமாக நிறைவேறியது என்றும் நாம் எளிதில் நிலைநாட்டத்தக்க முடிவிற்கு வர முடிகிறது” என்பர் நரேந்திர கிருஷ்ண சிங்கா. (Narendra Krishna Sinqa ,Haider Ali, Calcutta,1959)

சீரங்கப்பட்டணத்தைத் தாக்கிய மராட்டியப் படைகளையும் தோற்கடித்து வெற்றி கண்டார் ஹைதர் அலி. மைசூர் அரசர் இரண்டாம் கிருஷ்ன உடையார் இந்த அருஞ் செயலை மெச்சி ஹைதர் அலிக்கு 1759 இல் பெங்களூரைச் சொந்த ஜாகீராகக் கொடுத்தார். ஹைதர் அலி 1763இல் விடனூரினுள் நிலவிய உட்பகையை பயன்படுத்திக் கொண்டு துளு நாட்டின் இக்கேலியை வென்றார். ஹைதர் அலியின் படையினரில் ஆயிரக்கணக் கானோருக்கு பெங்களூரில் பயிற்சி அளிக்கப்பட்டது.

பிரஞ்சு மன்னன் பதினான்காம் லூயி (1636 - 1715) மன்னனின் படைத்தளபதி வாமன் வெல்ல முடியாத பிரஞ்சுப்

போர்த்தந்திர வல்லுநர். அவர் உருவாக்கிய பீரங்கி போரியல், போர்க் களப் பொறியியல் போன்ற போர்துறையில் நன்கு பயிற்சி பெற்றிருந்த புகழ் பெற்ற பிரஞ்சுப் படைத்தலைவர். லாலி பிரபுவின் உடன் பிறந்தார் மகளான இளைய லாலி, ஃபிரான்சுவா தேரேமன், ஹிச்சுக்காக்கு ,ஜோஜ் சொரியாதெ பிக்ச் சோட்டோ, செவாலியர் தெலாங் குவி,மேக்குன்ஸ், ஹியூகல்,லஃ பாயிட்டு என்று பிரெஞ்சு இராணுவத்தில் முன்னர் பணிபுரிந்த ஏராளமான படை அதிகாரி களும் பிற ஐரோப்பியப் படையதிகாரிகளும் மைசூர் கொடியின் கீழ் நின்று ஐதர் அலி யோடு சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக போராடினர்.

கி.பி.1766 இல் சேர நாட்டின் மீது ஐதர் அலி படையெடுத்து கள்ளிக்கோட்டையைக் கைப்பற்றினார். பொன்னானி- கண்ணூருக்கு இடைப்பட்ட பகுதியும் ஹைதர் அலியின் கீழ் வந்தது. கொச்சி படையெடுப்பின் போது ஹைதர் அலியின் படைகள் கொச்சியை நெருங்கி வத்து கொண்டிருந்தது. அப்போது யூத வணிகர் எசக்கியேல் ராகபி கொச்சி மன்னரின் சார்பில் ஹைதர் அலியிடம் பேசி, ஹைதர் அலிக்குத் திரை (வரி) செலுத்து வதாய் ஆசை காட்டி, ஹைதர் அலியின் படைகளின் முன்னேற்றத் தை தடுத்து நிறுத்தினார். இதில் யூத தந்திரம் வென்றது. அதன் பின் எட்டாண்டுகளுக்குப் பின் மீண்டும் வடகேரளத்தைத் தாக்கிய ஹைதர் அலியின் இந்தப் போர் அவர் இறக்கும் வரை நீடித்தது. ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் குடகு (Coorg) பகுதியில் கொண்டிருந்த தொடர்புகள் மற்றும் போர்கள் பற்றி பார்க்க வேண்டியது இன்றைய சூழலில் அவசியமாகிறது.

ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்து குடகின் சரித்திரம் சிறிது புலருகிறது. அதற்கு முன் உள்ள வரலாறு வெறும் ஊகம் தான். குடகு மலை நாடு வடக்கிலும் கிழக்கிலும் மைசூர் ராஜ்யம் தெற்கே கேரளம்,மேற்கே தென்கன்னடம் ஆகியவற்றை எல்லைகளாக கொண்டது. குடகு நாட்டைச் சுற்றி உள்ள மலைகளுக்கிடையே முப்பது அல்லது நாற்பது அடிகள் ஆழமுள்ள ராஜ கடங்கா என்ற அகழ்கள் உள்ளன. நாட்டுக்குள் எதிரிகள் நுழையாமல் தடுப்பதற்காக குடகு அரசர்கள் செய்த பெரு முயற்சி இது எனலாம். குடகுகள் சிறந்த போர்வீரர்கள், ஆனால் அவர்கள் அக்காலங்களில் சுதந்திரமாக இருந்ததில்லை.

"ஆண் போர்க்களத்தில் சாகவேண்டும்
பெண் பிரசவத்தில் சாக வேண்டும்"

என்பது குடகு பழமொழி.

மைசூரில் ஆட்சியிலிருந்த ஹைதர் அலிக்கும் திப்பு சுல்தானுக்கும் குடகிற்கும் என்ன தொடர்பு?

3.11.2016 'தினமணி' (திருநெல்வேலி பதிப்பு, பக்கம் 9) இதழில் வந்த செய்தி அப்படியே இதோ. திப்பு ஜெயந்தி கொண்டாட காரணம் என்ன? என்று கர்நாடக அரசுக்கு உயர் நீதிமன்றம் கேள்வி.

பெங்களூரு நவ.2. திப்பு சுல்தான் ஜெயந்தியைக் கொண்டாட வேண்டிய அவசியம் என்ன? என்று கர்நாடக அரசுக்கு அந்த மாநில உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

"18 ஆம் நூற்றாண்டில் மைசூரை ஆண்ட முகலாய மன்னர் (தினமணியில் தவறாக வந்துள்ளது, திப்பு சுல்தான் முகலாயப் பரம்பரையில் வந்தவரல்ல) திப்பு சுல்தானின் பிறந்த நாள் விழாவை கர்நாடக அரசு கடந்த ஆண்டு கொண்டா டியது. அப்போது குடகு பகுதியில் இருவேறு சமூகத்தினரிடையே மோதல் மூண்டு வன்முறையாக வெடித்தது. இந்தச் சூழலில் இந்த ஆண்டும் திப்பு ஜெயந்தியை கொண்டாட மாநில அரசு முடிவு செய்தது. இதை எதிர்த்து கே.பி. மஞ்சு நாதன் என்பவர் கர்நாடக உயர் நீதி மன்றத்தில் பொது நல மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அந்த மனு உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சுப்ரோகமல் முகர்ஜி, நீதிபதி ஆர்.பி.புத்திலால் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு புதன் கிழமை (2.11.2016) விசாணைக்கு வந்தது. அப்போது கர்நாடக அரசு தரப்பில் ஆஜரான எம்.ஆர். நாயக் வாதிடுகையில் "திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடியவர் என்பதால் அவரை நினைவு கூறும் வகையில் விழா நடத்துவதில் தவறில்லை" என்றார். இதையடுத்து வாதிட்ட மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் சஜன் பூவையா, " திப்பு சுல்தான் கொடுங்கோல் ஆட்சி புரிந்த மன்னன். கொங்கணி, குடைவர், கிறிஸ்தவர்கள் என பல்வேறு சமூகத்தினரை கொன்றொழித்த திப்புவிற்கு எதற்கு விழா எடுக்கவேண்டும்?" என்று வாதிட்டார். இருதரப்பு வாதங்களைக் கேட்ட பிறகு நீதிபதி கூறியதாவது:

திப்பு ஜெயந்தியை மாநில அரசு கொண்டாடுவதன் அடிப்படைக் காரணம் என்ன? திப்பு சுதந்திரப் போராட்டவீரர் அல்ல, ஒரு அரசர் என்ற முறையில் தனது எதிரியுடன் (பிரிட்டிஷார்)அவர் போரிட்டுள்ளார். ஒரு பகுதியின் அரசராக இருந்த ஒருவரது பிறந்த தினத்தை எந்த காரணத்தை முன்னிறுத்தி கொண்டாடுகிறது கர்நாடக அரசு? என்று நீதிபதி

கேள்வியெழுப்பினார். திப்பு ஜெயந்தி கொண்டாடப்பட்டால் மதரீதியாக மோதல்கள் நடைபெறலாம் என அஞ்சப்படுகிறது. முன்னதாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் பாஜகவும் இந்த கொண்டாட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பை பதிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது என்று 3.11.16 தினமணி செய்தியை படித்ததும் இது குறித்த வரலாற்று உண்மைகளை நாட்டுக்கு தெரிவித்திடல் கடமையென்று உணர்ந்து இந்தத் தொடர்களை எழுதுகிறேன். முதலில் 'குடகு' நாட்டைப் பற்றிப் பார்ப்போம்.

மைசூரை சேர்ந்த சங் கலவ வம்சத்து அரசர்கள் மைசூர் நகருக்கு மேற்கே உள்ள பகுதியையும் குடகு நாட்டின் கிழக்கு வடக்குப் பகுதிகளையும் ஒன்பதாம் நூற்றாண்டிலும் பத்தாம் நூற்றாண்டிலும் ஆண்டு வந்தனர். ஆனால்,மைசூரை ஆண்ட கங்கா மன்னர்களுக்கு கப்பம் கட்டிவந்தனர்.

11ஆவது நூற்றாண்டில் சோழர்கள் சங் கலவ அரசர்களைத் தோற்கடித்து அவர்களிடமிருந்து கப்பம் பெற்றார் கள்.

இராசராச சோழன் படை (கி.பி.985–1014) குடகு நாட்டைத் தாக்கியது. கொங்காள்வார் மரபில் வந்த ஒருவர் அப்போது அதனை ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். பண சோகே என்ற இடத்தில் பெரும் போர் நடைபெற்றது. அதில் அரசன் தோல்வியுற்று ஓடினான். அப்போரில் வீரங்காட் டிப் போர்புரிந்த மனிஜா என்பவனது செய்கையை பாராட்டி இராசராச சோழன் ஆணையின் படி அவனுக்கு 'சிகாமணி கொங்கான் வாள்' என்ற பட்டம் வழங்கப் பெற்றதோடு மாளவ்வி என்ற ஊரும் அளிக்கப்பட்டது. மனிஜாவின் மரபினர் சுமார் நூறாண்டுகள் வரையில் சோழர்கட்டு அடங்கிய குறுநில மன்னராய்க் கொங்கான்வார் எனும் பட்டத்துடன் குடகு நாட்டில் அரசாண்டு வந்தனர். மாளவ்வி என்பது குடகு என்று பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி தனது சோழர்கள் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சத்திரிய சிகாமணி கொங்கான்வான் சோழர்கட்டு அடங்கிய குறுநில மன்னராக குடகு நாட்டை ஆண்டான். அவன் வழித் தோன்றல்களும் நூறாண்டுகளுக்கு மேல் ஆட்சிபுரிந்ததை க.த.திருநாவுக்கரசு முதலாம் இராசராச சோழர், சென்னை, 1975,பக்கம் 147 இல் உறுதிப்படுத்துகிறார். சோழர் சேனைத் தலைவர்களில் ஒருவரான மனிஜா என்பவருக்கு ராஜராஜ சோழன் சத்திரிய சிகாமணி கொங்கலவர் என்ற பட்டத்தைச் சூட்டி குடகு நாட்டில் சனிவாரச் சந்தைப் பகுதியையும் ஆறுகல் நாடு என்ற தாலூகாவையும் கொடுத்து தனக்குக் கீழ் ஆளும் படி செய்தார்.

சங்கலவர், கொங்கலவர் (இருவரும் இந்துகள் இல்லை, ஜைன மதத்தைச் சேர்ந்தவர்கள் (ஏ.கே செட்டியார், குடகு,சென்னை,1967 பக்கம் 134) இருவரும் சோழர் பெயரைத் தங்கள் பெயருடன் சேர்த் துக் கொண்டனர். நன்னி சங்கலவ ராஜேந்திர சோழன் என்பது ஒரு சங்கலவ அரசனின் பெயர் ஆகும்.சோழர் காலத்தை நினைவூட்டும் சின்னங்கள் பல குடகு நாட்டில் உள்ளது.

12வது நூற்றாண்டில் மைசூர் ராஜ்ஜியத்தில் ஹாசன் ஜில்லாவில் தோன்றிய ஹோய்சாலா என்ற அரசவமிசம் சோழர்களை கன்னடத்திலிருந்து விரட்டியது... "and then disappeared with the expulsion of the Cholas from the Hoysalas" (The Cholas,K.A. Nilakanta Sastri,University of Madras, 1984, page 172)

ஹோய்சாலர்களை சங்கலவர்கள் எதிர்த்தனர். சங்கலவ அரசர் மகாதேனை குடகில் பால்பாறை என்ற இடத்தில் ஹோய்சால சேனைத் தலைவன் பெத்தராசா தோற்கடித்து பால் பாறையையே தனது தலைநகராக்குகின்றான்.

மகாதேவாவின் புதல்வன் வீரப்பாவும் குடகின் பகுதியைச் சேர்ந்தவர்களும் மீண்டும் பெத்தராசாவை எதிர்த்தனர், போரில் தோற்றனர். முடிவில் ஹோய்சாலர்களுக்கு கப்பம் கட்டினர்.

12ஆம் நூற்றாண்டில் லிங்காயத்து என்ற வீரசைவம் தோன்றியது. ஹோய்சாலர்கள் தங்களது மதத்தை விட்டுவிட்டு லிங்காயத்துகளாக மாறினார். ஹோய்சாலர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு விஜய நகர சாம்ராஜ்யம் வலுவோடு இருந்தது. சங்கலவர்கள் விஜய நகர அரசுக்கு கப்பம் கட்டினர். சோழர்களுக்கு பிறகு ஹோய்சாலர்களுக்கு அதன்பின் விஜய நகர பேரரசுவிற்கு கப்பம் கட்டி வந்தவர்கள் குடகர்கள்.

தலைக்கோட்டைப் போரில் 1565 இல் விஜயநகரப் பேரரசு சரியத்துவங்கியது. எனவே அதிலிருந்து குடகர்கள், மைசூர் உடையார்கள், பெட்னூர் நாயக்கர்கள் தங்களை விடுவித்து கொண்டனர். கடைசி சங்கலவ மன்னர் கி.பி.1644 இல் நடத்திய போரில் மைசூர்க் காரர்களிடம் தோற்று சாவைத் தழுவிக்கொண்டான்.

விஜய நகரம் வீழ்ந்ததற்கு பின் பெட்னூர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளவரசர் அன்றைய அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான். லிங்காயத்து மதகுரு போல வேஷம் அணிந்து, லிங்காயத்துக்கள் அதிகம் வாழும் வடகுடகில் ஹலேரி எனும் ஊரில் ஒரு சாவடியில் தங்கி குழந்தை களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தான். பெற்றோர்கள் அரிசி யும்

ரொக்கமும் காணிக்கையாகச் செலுத்தினர். சிறிதுகாலம் சென்றது. பெட்னூர் அரச குடும்பத்து போலி லிங்காயத்து குரு அரிசியும் காணிக்கையும் கட்டாயமாக தர வேண்டு மென்று உத்தரவிட்டான்.

தனது சாவடியைப் பாதுகாத்திட சாவடிக்காரர் என்பவர்களை நியமித்தான். பின்னர் படைகளைக் கொண்டு பலமில்லாத குடகர்களை பயமுறுத்தி நாலில் ஒரு பங்கு கட்டும் படி உத்தரவிட்டான். எதிர்த்தவர்களை வென்று நாட்டிற்கே அரசன் ஆனான். அந்தப் பரம்பரைதான் குடகு ராஜாக்கள். ஆனால், உண்மையில் அவர்கள் குடகர்கள் அல்லர் (ஏ.கே. செட்டியார் முற்கூறிய நூல் பக்கம் 137)

மாறுவேடத்தில் கி.பி. 1600 இல் குடகு நாட்டை பிடித்த முதலாவது குடகு ராஜா வீர ராஜா, அவரது மகன் அப்பாஜி ராஜா, அவரது மகன் முத்து ராஜா. ஹலேரி வமிசத்தை சார்ந்த இவர் 1633 இல் ஆட்சிக்கு வந்தார்.

கி.பி.1633 முதல் கி.பி.1807 வரை 175 வருடங்கள் 2 மாதங்கள் 7 நாட்கள் அரசு புரிந்த கூர்க் (குடகு) அரசர்கள் பற்றிய ஆவணம் கி.பி. 1834 இல் மெர்க்காரா ஆவணக் காப்பகத்தில் (Archives at Mercara) கண்டு பிடிக்கப்பட்டது. அதனை அருட்திரு ஏ.மோக்லிங் (Rev.H.Moegling) கனரா மொழியிலிருந்து (Canarese) ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்து 1855 இல் பெங்களூர் Wesleyan Mission Press அச்சகத்தில் அச்சிட்டு Coorg Memoirs – An account of Coorg and of the Coorg Mission எனும் நூலாக 222 பக்கங்களில் வெளியிட்டார். கி.பி.1870 இல் அருட்திரு ஜி. ரிச்டர் Manual of Coorg – A Gazetteer of the natural features of the country and the social and political condition of its inhabitants. Compiled by Rev. G.Richter, Principal, Government Central School, Mercara and Inspector of the Coorg Schools வெளியீடாக 474 பக்கங்களில் வெளியிட்டார். அதில் அடியேன் முதலில் கூறிய மோக்லிங் நூல் 1857 இல் வெளியானதாக பக்கம் 235 இல் தெரிவித்துள்ளார்.

கி.பி. 1770இல் அப்போதிருந்த அரசர் மறைந்ததும் குடகுக்கு வாரிசுப் போட்டி ஏற்பட்டது. குடகில் ஹலேரியை ஆட்சி செய்த அப்பாஜி ராஜாவின் மருமகன் லிங்கராஜா கூர்க்கின் சிம்மாசனத்திலிருந்த ஹோராமலி தேவப்ப ராஜா ஆகியோர் இடையே அதிகாரத்தைக் கைப்பற்றிட கடும் போட்டி நிலவியது. 1770களில் லிங்கராஜா, அப்பாஜிராஜாவை அழைத்துக் கொண்டு மைசூருக்கு செல்கிறான். அங்கு கன்னட நாட்டின் போர்வாள் ஹைதர் அலியிடம் தனக்கு ஆட்சியைப் பிடித்திட உதவுமாறு கேட்கிறான்.

கூர்கில் ஒரு பிரிவினர் தம்மை நடுவராக ஏற்றுக் கொண்டதை எண்ணி மகிழ்ந்தார் ஹைதர். "Fled with his son Vijayaraja and his nephew Appajiraja, to seek powerful aid of Hyder who at this period exercised supreme control in Mysore. Wolf Hyder was delighted to be chosen umpire between the quarrelling jungle - sheep of Coorg and promised every assistance to his new clients, whom he kept as his guests at Seringupatanam" . (G.Richter ன் *முதற்கூறிய ஆங்கில நூல், பக்கம் 244)*

தன்னிடம் உதவி கேட்டு வந்த லிங்க ராஜா மற்றும் அப்பாஜி ராஜாவை ஸ்ரீரங்கபட்டணத்தில் விருந்தினராக ஹைதர் தங்க வைத்தார். கி.பி. 1771 இல் மராத்திய திரியம்பகா மாவா ஹைதர் அலிக்கு ஆதரவை தந்தார். இந்நிலையில் மைசூரில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. குடகு நாட்டில் தானியங்கள் விலை பொருட்கள் செழுமையாக இருந்தது. எனவே அங்கு சென்று அவைகளை எடுத்து வந்தால் மைசூரில் உள்ள பஞ்சத்தைப் போக்கிட உதவும் என்ற யோசனையை குடகின் லிங்கராஜா ஹைதர் அலியிடம் கூறினார். எனவே நன்கு ஆலோசித்து விட்டு குடகை நோக்கி கி.பி.1773 இல் ஹைதர் சென்றார். இப்படித்தான் குடகின் மீது படையெடுப்பு துவங்கியது.

Lingaraja suggested an expendition in to Coorg, where plenty of grain would be found. Hyder Ali took his advice and in 1773 he marched his army in to Coorg... *(முற்கூறிய நூல், பக்கம் 245)* *அரக்கல் கூடு, பெட்டிக்கான்வே வழியாக ஹைதரின் படைகள் ஏதவ் நாட்டை அடைந்தது. கடும் போரில் ஹைதர் படைகள் சேதமடைந்தது. இதற்கிடையில் லிங்கராஜாவின் குடகு படைகள் ஹைதரோடு கரம் சேர்ந்தது. போரில் ஹைதர் அலியின் படைகள் முன்னேறியது. பலேலி, சிக்கட்நாட் வழியாக மெர்க்காராவை ஹைதர் அலி அடைந்தார்.*

லிங்கராஜாவின் எதிரிப் படையை சமாளித்திட குடகின் தேவப்பா ராஜா கோட் அரசிடம் சென்று உதவி கேட்டார். ஆனால் அதற்கு கோட்டின் அரசர்,

''எனது மூதாதையரை உனது மூதாதையர்கள் கொன்று விட்டார்கள், எனவே நான் உனக்கு உதவ முடியாது" என்றார். ''டோமராவில் வைத்து உனது மூதாதையர் தொட்ட வீரப்பா எனது மூதாதையர் வீரவர்மா உயிரை எடுத்து விட்டார். நீ இப்பொழுது இங்கிருந்து உயிரோடு போக வேண்டுமென்றால் ரூபாய் 1666 தந்து விட்டு செல். உனக்கு உதவ முடியாது ''என்று சொன்னான்.

உதவியை எதிர்பார்த்து வந்த தேவரப்ப ராஜாவிற்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. மேலும் அபராதமாக

1666ரூபாய் செலுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது. தன்னை காப்பாற்றிக் கொள்ள பணத்தை கோட் அரசரிடம் கொடுத்த போதும் தேவரப்ப ராஜா நம்பிக்கை அடையவில்லை. தான் உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கையில்லாத நிலையில் மாறுவேடத்தில் நான்கு பேருடன் தப்பிச் சென்றார்.

ஹைதர் அலியின் படைகள் கூர்கை (குடகை) வென்றது. லிங்கராஜாவிற்கு ஹைதர் உதவினார். லிங்கராஜாவின் விரோதிகளான தேவரப்ப ராஜா குடும்பம் போரில் அழிந்தது. ஹைதர் அலி அப்பாஜி ராஜாவை குடகில் ஆட்சியில் அமர்த்தினார். ஸ்ரீரங்க பட்டினத்திலிருந்து குடகு வரை வந்த மைசூர் படைகளின் செலவை தந்து விடு என்று குடகின் அப்பாஜி ராஜாவிடம் ஹைதர் அலி கேட்டார். ஆண்டுக்கு 24000 ரூபாய் கப்பமாக பெற்றுக் கொள்ளப்பட்டது.

கி.பி.1776 அப்பாஜி ராஜா மரணமடைந்தார். லிங்க ராஜா குடகின் ஆட்சியாளரானார். கி.பி. 1780 இல் லிங்க ராஜாவும் மரணமடைந்தார். அப்போது லிங்கராஜாவின் இரண்டு புதல்வர்கள் வீரராஜேந்திர உடையார்,மற்றொருவன் லிங்க ராஜா இருவரும் சிறுவர்கள். எனவே குடகின் பாதுகாவல் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஹைதர் அலி ,கூர்கின் முழுப் பகுதியையும் தனது மேற்பார்வையில் வைத்துக் கொண்டு, சிறுவர்கள் பெரியவர்கள் ஆனதும் குடகு ராஜ்ஜியத்தை ஒப்படைக்க முடிவு செய்து, கூர்க் (குடகு)ராஜாவின் முன்னாள் செயலாளராக இருந்த பிராமணர்(முஸ்லிமல்ல 'பிராமணர்' என்பதை கவனத்தில் கொள்க)சுப்பராசையாவை ஆட்சி செய்ய ஹைதர் அலி நியமித்தார்.

As both were young, Haider became their guardian and assumed the entire possession of Coorg until the princes should come of age, when it would be restored to them. A Brahmin named Subbarasaya, who was formerly one of the secretaries of the Coorg Raja was entrusted with the Government of the country. (Husain Khan Lohani,Tarikki Coorg *எனும் நூலை எழுதினார்.* ''Rajas of Coorg'' *கூர்கின் ராஜாக்கள் என்னும் கனரா மொழி நூலை (கி.பி.1637-38* to *1807) (அல்ஹிஜ்ரி 1047* to *1222) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இவர் கூர்கின் வீர ராஜேந்திர உடையார் காலத்தில் (1789-1837) முன்ஷியாக இருந்தார். இந்த நூல் முழுவதிலும் திப்பு சுல்தானுக்கு எதிராகவே எழுதியுள்ளார். ஆனால், கூர்கில் திப்பு ஹைதர் படையெடுப்பு பற்றியும் காரன்வாலிஸ் கூர்கை பங்கிட்டதைப் பற்றியும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். கி.பி.1792 இல் பிப்ரவரி, மார்ச்*

மாதங்களில் நடந்த சமாதான கருத்தரங்கில் குடகை திப்புவிடம் காரன்வாலிஸ் அபகரிக்க முயன்ற சரித்திரமும் இந்த நூலில் உள்ளது.

தாரிக்கி இ கூர்க் எனும் ஆங்கில நூலில் 236 ,245 பக்கங்களில் உள்ளதை தான் மேலே குறிப்பிட்டுள்ளேன். சுப்பராசைய்யா என்ற பிராமணர் குடகு அரசரின் செயலாளர் என்ற கருத்தும் உள்ளது. அவர் குடகு அரசரின் கீழ் பொருளாளராகப் பணியாற்றியவர் என்று ரைஸ் கூறுகிறார். (L.Rice Mysore and Coorg ,3 volumes Bangalore 1876&1878 இல் அச்சானது).

குடகு ராஜ்ஜியத்திற்கு லிங்கராஜாவின் மகன்களில் ஒருவனை ஆட்சியாளானாக நியமிக்காமல் ஹைதர் அலி பிராமணர் ஒருவரை ஆட்சியாளராக நியமித்திருந்ததால் அது குடகு மக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. கி.பி.1782 சூனில் அவர்கள் ஹைதர் மேற்பார்வையில் சுப்பராசைய்யா என்ற பிராமணர் தலைமையில் நடைபெற்ற ஆட்சியியை எதிர்த்து கலகம் செய்தனர்.

'Enraged that Haider Ali has appointed to the Government of Coorg a Brahmin instead of setting up one of setting up one of the sons of Lingaraaja as ruler, the Coorgs raised the banner of revolt in June 1782 (Mohibbul Hasan Khan, History of Tippu Sultan, Calcutta, ஹைதர் அலி இந்த காலகட்டத்தில் ஆங்கிலேயரை எதிர்த்து போரில் ஈடுபட்டிருந்தார். எனவே குடகின் மீது கவனம் செலுத்த முடிய வில்லை. அந்த வேளையில் குடகு கிளர்ச்சியாளர்கள் ஹைதர் அலியின் ஆட்சிப் பிரதிநிதிகளை விரட்டி விட்டு தங்களை மைசூரின் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டனர். சித்தூருக்கு அருகில் நரசிங் ராயணப் பேட்டை என்ற இடத்தில் 7.12.1782ல் (ஹிஜ்ரி 1195) ஹைதர் அலி மறைந்தார். இனி அவரது வீர மகன் திப்புவுக்கு குடகிற்கும் உள்ள தொடர்பை பார்ப்போம்.

திப்பு சுல்தானும் குடகும்

வளமை நிறைந்த பசுமையான பகுதி மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சரிவில் மைசூர் மாநிலத்தில் குடகு அமைந்துள்ளது. வடக்கிலும் கிழக்கிலுமாக ஹாசன் மற்றும் மைசூர் மாவட்டங்களும் தெற்கில் கேரளாவையும் மலபார் மாவட்டத்தையும் எல்லையாக கொண்டது குடகு. (Imperial Gazetteer,1909 volume IX page 3) வரலாற்றில் நாம் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று, குடகு ஸ்ரீரங்கப்பட்டிணத்தின் கதவாகும். ஆங்கிலேயக் கும்பெனியார் கடலிலிருந்து நேராக கூர்க்கிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு நுழைந்து விடலாம்.

இது தான் குடகில் போர் ஏற்படவும் திப்பு அதை கைப்பற்ற முயன்றதும் வெள்ளையர்கள் அதனை அபகரிக்க முயன்றதும். இப்படி வரலாற்று நிகழ்வுகள் தொடர்கின்றன. இனி திப்பு சுல்தானுக்கும் குடகிற்கும் உள்ள தொடர்பை விரிவாக பார்ப்போம்.

திப்பு சுல்தான் மைசூர் ஆட்சியாளரான போதும் ஆங்கிலேயர்களுடன் போரில் ஈடுபட்டிருந்ததால் கூர்க்களின் கலகத்தை அடக்க முடிய வில்லை. கடும் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளவில்லை. ஹாசன் மாவட்டத்திலுள்ள அர்கால்குடு தாலுகா கோரூருவுக்கு கூர்க் இளவரசனை அவன் தங்கியிருந்த மெர்க்காராவிலிருந்து அப்புறப்படுத்திட உத்தரவிட்டார். அதனால் ஓரளவு கலகம் கட்டுப்பட்டது. எனினும் கூர்க்களை அடக்கிட ஹைதர் அலி பேக் என்ற தளபதியுடன் படையை அனுப்பிவைத்தார். இந்தத் தளபதி துரிதமாக செயல்படவில்லை. எனவே ராஜா கங்கேரியை உதவச் சொல்லி உத்தரவிட்டார். ஆரம்பத்தில் இருவரும் சேர்ந்து குடகில் கொஞ்சம் வெற்றி பெற்றார்கள். ஆனால் அனைத்துத் திசைகளிலிருந்தும் கூர்க்கள் தாக்குதலைத் தொடுத்ததால் இறுதியில் ஹைதர் அலி பேக்கும் ,ராஜா கங்கேரியும் தோற்கடிக்கப் பட்டனர். ராஜா கங்கேரி கூர்க்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

திப்புவிற்கு நெடிய போர்களி னால் ஏற்பட்ட களைப்பும் ஆங்கிலப் படையுடன் சேர்ந்த மராத்தியர்களின் கூட்டணியும் தொல்லைகளை கொடுத்தன. அத்துடன் வேர்செல்ஸ் உடன்படிக்கையின் 16வது சரத்து பிரஞ்சு மற்றும் ஆங்கிலேயர்கள் இருவரும் தங்கள் கூட்டாளிகளை பொது நீரோட்டத்தில் பங்கு கொள்ளச் செய்வதால் சமாதானப் படுத்த வேண்டும் என்பதை முதலிடத்தில் வைத்து 1783 பிப்ரவரி 9 இல் பிரஞ்சு இங்கிலாந்து சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு 1783 ஜுன் 23 இல் நடைமுறைக்கு வந்தது. இறுதியில் 1784 மார்ச் 11 இல் மங்களூர் ஒப்பந்தத்தில் திப்பு கையெழுத்திட்டார். ஆங்கிலேயர்களுடன் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டது.

1785 இல் திரும்பவும் கூர்கின் மீது திப்பு தனது கவனத்தை செலுத்தினார்.கூர்கின் கலகக்காரர்கள் கடும் தடையை ஏற்படுத்தியிருந்தார்கள். அவர்களை தீரத்துடன் போராடி திப்பு ஜெயித்தார். தலைநகர் மெர்க்கராவை கைப்பற்றி அதற்கு ஜாபராபாத் என்று பெயரிட்டார். ஜெய்ன் உல் ஆபிதீன் மாஹ்தவி கூர்கின் பௌஜ்தாராக நியமிக்கப்பட்டார்.

(பௌஜ்தார்-இராணுவ கவர்னர் ஆவார்). கூர்கின் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது. திப்பு ஸ்ரீரங்கபட்டணம்

திரும்பினார். கூர்கில் அல்லது குடகில் இருந்து தீரன் திப்பு சுல்தான் திரும்புவதற்கு முன் குடகு நாட்டில் அவர் செய்தது என்ன? வரலாற்றின் வெளிச்சத்திற்கு வர வேண்டிய விஷயம், இதோ அந்த விஷயம் விரிவாகவே...

குடகு (கூர்க்) மக்களின் திருமண முறை

விசித்திரமான இயற்கைக்கு மாறுபட்ட இயல்பு திரிந்த, தடுமாற்றந் தருகிற, தீமையான, கெடுதி விளைவிக்கின்ற வழக்கம் குடகில் இருந்தது. ஒரு வீட்டில் மனைவி எல்லோருக்கும் பொதுவானவள், பொது உடைமையானவள். அந்த வீட்டில் வாழும் அனைத்து சகோதரர்களுக்கு அவளே மனைவியாவாள். பிறக்கின்ற குழந்தைக்கு தந்தை யார் என்பதை அவளே தீர்மானிக்க வேண்டும். அது மட்டுமட்டுமா?

"The Brahmans, the clever casuists of India who know to find a reason, or precedent for any thing when it suits their interest have told the Coorgs that in this unnatural and hurtful custom they resemble the five great Pandava brothers of antiquity who had one wife Draupadi". (Ibid)

சமய சாத்திரங்களின் தத்துவ ஆதாரங்களை காட்டி விதண்டாவாதம் புரியும் குதர்க்க வாதிகளான பிராமணர்கள் இயற்கைக்கு மாறாக கேடான, ஒரு பெண்ணிற்கு பல கணவன் என்ற குடகு மக்களின் நிலைக்கு, பஞ்ச பாண்டவர்கள் ஐவர் திரோபதியை மணமுடித்ததை சான்றுக்கு சொல்வார்கள். இத்தகைய வழக்கம் (ஒரு பெண்ணிற்கு பல கணவன்மார்கள் உள்ளது) அந்தப் பகுதியிலும் துளு நாட்டிலும் இருப்பதையும் ஏ.மோக்லின் விவரித்துக் கொண்டே செல்வார்.

முழுக்க முழுக்க ஹைதர் அலியையும் திப்பு சுல்தானையும் தாக்கி எழுதுவதற்கென்றே எழுதப்பட்ட நூல் கர்னல் மார்க் வில்க்ஸின் மைசூர் வரலாறு ஆகும். அந்த நூலின் முதல் பாகம் கி. பி.1810இல் வெளிவந்தது. கி.பி.1817 சூன் 25 இல் இரண்டாம், மூன்றாம் பாகம் வெளிவந்தது. சென்னையில் 1869 இல் இரண்டாவது பதிப்பு வந்தது. பின்பு முராரி ஹாமிக் குறிப்புகளுடன் 1930 இல் மூன்றாவது பதிப்பு இரண்டு பாகங்களாக வெளிவந்தது.

முதல் பாகம் 850 பக்கங்கள் ,இரண்டாம் பாகம் 817 பக்கங்கள். நூல் முழுவதும் முழுக்க முழுக்க ஆங்கிலேயப் போர் ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டது. அதில் திப்பு சுல்தானின் நிர்வாகங்களை பற்றிய குறிப்புகள் அரிது. எனினும் அவரே தெரிந்தோ தெரியாமலோ ஒரு விஷயத்தை மறந்து

பதிவு செய்துள்ளார்.இதோ அது,

குடகில் போர் முடிந்ததும் திப்பு சுல்தான் அங்குள்ள நிலைமைகளை பார்க்கிறார். ஒரு பெண் பல கணவன்மார்களை கொண்டிருப்பதை கண்ட திப்பு சுல்தான் அந்த முறையைப் பற்றி கடுமையான கருத்தைக் குடகில் கூறுகிறார். கர்னல் மார்க் வில்ஸ் நூலில் 2 வது தொகுதியில் 280 வது பக்கமும், 281வது பக்கமும் தருகிற செய்தி இது. 'Six brothers dwell together in one house and if the elder brother marries, his wife become equally the wife of the other five, and the intercourse so far from being disgraceful is familiarly considered as a national rite'. ஆறு சகோதரர்கள் இருக்கிற வீட்டில் மூத்த சகோதரர் மணம் செய்து கொண்ட பெண்ணை மற்ற ஐவரும் சமமாக உடல் உறவு கொள்ளும் அவமானம் விளைவிக்கிற, அவமதிப்பு தருகிற, வெட்கக் கேடான, பழிப்புக்கு இடமான நிகழ்வு நடைபெற்று வருவதை நான் அறிகிறேன். கடைசியில் குழந்தை யாருக்கு பிறந்தது என்று தெரியாமலே போய் விடுகிறது. நாட்டிலுள்ள மக்களுக்கு தன் தந்தை யார் என்பதே தெரியாமல் போய்விடும்.

...not a man in the country knows his father and the ascendancy of women, and bastardy of children, is your common attribute, from the period of my father's conquest of the country. You have rebelled seven times, and caused the death of thousands of our troops: எனது தந்தை ஹைதர் அலி குடகு நாட்டை வென்றார். ஆனால் குடகர்களோ எங்களை எதிர்த்து ஏழு தடவை கலகம் செய்தீர்கள். அதனால் எங்களது படைப்பிரிவில் பல்லாயிரக்கணக்கான வீரர்களை நாங்கள் பலி கொடுத்துள்ளோம்.

"I forgive you once more, but if rebellion be ever repeated I have made a vow to God to honour every man of the country with Islam, I will make them aliens to their home, and establish them in a distant land and thus at once extinguish rebellion and plurality of husbands and initiate them in the more honourable practices of Islam" நான் மறுபடியும் ஒரு தடவை உங்களை மன்னித்து விடுகிறேன். நீங்கள் மறுபடியும் கலகம் செய்ய முயன்றீர்கள் என்றால், நான் இறைவன் மேல் சத்தியம் செய்கிறேன், இஸ்லாம் மார்க்கத்தை பின்பற்றுபவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் உங்கள் அனைவரையும் நான் தூர தேசத்திற்கு அனுப்பி விடுவேன். உங்கள் வீட்டிற்கும் உங்கள் நாட்டிற்கும் சம்பந்தமில்லாமல் நீங்கள் தூர தேசத்திற்கு குடி அமர்த்தப்படுவீர்கள். குடகில் கலகம் நின்ற பிறகு ஒருத்திக்கு பல கணவன்மார்கள் இருக்கின்ற வழக்கமும் நின்ற பிறகு இஸ்லாம் மார்க்கத்தில் உயரிய கொள்கையில் அவர்களை ஈடுபடுத்துவேன். (Manual of

Coorg a Gazetteer, G.Richter, Page 147. Tiger of Mysore, The Life and Death of Tipu Sultan, Denys Forrest, Page 94).

1893 இல் ஆக்ஸ்போர்டு கிளரண்டன் பிரசில் அச்சிட்டு வெளியான *233* பக்கங்கள் கொண்ட சர் வில்லியம் வில்சன் கண்டர் பதிப்பித்த மைசூர் தலைமை கமிஷ்னர் எழுதிய ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் நூலில் (Lewin B.Bowring, formerly Chief Commissioner of Mysore, Haider Ali and Tipu Sulthan and the struggle with the Musalman powers of the south, Cruelties in Coorq எனும் தலைப்பில் பக்கம் *127*இல் கூறுகிறார்,

Tippu marched into the courtry with his army and lectured the Coorq on the inquity of their custom of polyandry. He warned them that if any further rebellion took place he would extingush it by removing the population and Islamizing them.

திப்பு குடகு நாட்டில் தனது இராணுவத்தினருடன் சென்று அங்குள்ள மக்களிடம் உரையாற்றினார். ஒரு பெண் பல கணவரைப் பெற்றிருக்கும் பழக்கத்தை உடனடியாக கைவிட வேண்டும் என்னும்,மாறாக கலகம் புரிந்தால் இங்குள்ள மக்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்கவேண்டிய வரும் என்றார். இங்குள்ள அனைவரையும் இங்கிருந்து அகற்றி விடுவேன் என்றும் எச்சரித்தார். History of Tipu Sultan by Mir Hussain Ali Khan Kirmani பெர்சிய மொழியில் எழுதி ஆங்கிலத்தில் கர்னல் தீ.மைல்ஸ் மொழி பெயர்த்த நூல் *1864* இல் வெளிவந்தது. மறுபதிப்பாக *1986* இல் வந்தது. அதில் பக்கம் *36* இல் சொல்கிறார்.

..."it was a foolish custom but one considered in their pagan religion both proper and meritorius that if there happened to be four bothers in one house only one of them married, and the other cohabited with the women so married by turns,one every night and some even say that all four remained with her every night. The off spring of these marriages were divided amoung the brethren"

குடகு நாட்டில் உள்ள முட்டாள் தனமான வழக்கம். நான்கு பேர் ஒரு வீட்டில் இருந்தால் ஒருவர் மட்டுமே திருமணம் செய்வது. மற்றவர்களோடு அந்தப் பெண்ணோடு முறை வைத்து ஒரு நாளுக்கு ஒருவர் என்றும் ஒரு இரவில் ஒருவர் என்றும் சில வேளைகளில் நான்கு பெருமே ஓர் இரவில் அந்த பெண்ணுடன் கூடி இருப்பார்கள். அவர்களது வாரிசுகளாக பிறக்கும் பிள்ளைகளை சகோதர்கள் நான்கு பெரும் பகிர்ந்து ஏற்றுக் கொள்வார்கள்.

ஒரு வீட்டில் ஒருவர் மட்டுமே ஒருத்தியை திருமணம் செய்து வீட்டிலுள்ள மற்றவர்கள் திருமணமான பெண்களோடு உறவு கொள்ளும் முட்டாள் தனத்தை, அசிங்கத்தை ஒழிப்பதே எனது பணி என்றார் திப்பு. ஹைதர் அலி குடகுப் பகுதியில்

படையெடுத்து வெற்றி கொண்ட போது இந்த மோசமான முட்டாள்தனமான பழக்கத்தை தடை செய்து உத்தரவிட்டார். பல பெண்களை கைது செய்து தனது படைவீரர்களுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றும் கிர்மானி தனது நூலில் கூறியுள்ளார்.

குடகில் நிலவிய கேவலமான முட்டாள் தனமான பழக்கத்தை இழிநிலையை ஒழித்திட இஸ்லாம் மார்க்கத்தை ஏற்க வேண்டியவரும் என்று ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் கூறியது உண்மை. ஆனால் திப்பு சுல்தான் ஸ்ரீரங்கபட்டணம் திரும்பிய உடனே மீண்டும் குடகு நாட்டில் கலகம் எழுந்தது.

முன்மேதி நாயர், ரங்க நாயர் என்ற குடகு நாட்டின் இரண்டு கலகத் தலைவர்கள் திப்புவின் படைகளோடு மோதினர். ஜெய்ன் உல் ஆபிதீன் மஹ்தவி கூர்க்கின் கலகத்தை சமாளிக்க முடியாமல் திண்டாடினார். ஏறத்தாழ கூர்க் முழுவதையும் இவர்கள் கைப்பற்றி விடும் நிலை. தலைநகர் மெர்க்காரா முற்றுகையில் இருந்தது எனவே தன்னால் குடகு நாட்டை காப்பாற்ற முடியாது என்று பௌஸ்தார் திப்பு சுல்தானுக்கு கடிதம் எழுதினான். ஜெயின் உல் ஆபிதீன் சுஸ்தாரி என்பவருடன் மேலும் சிலரையும் படைகளுடன் திப்பு சுல்தான் கூர்க்கிற்கு அனுப்பி வைத்தார். இதில் 2000 பயிற்சியில்லாத வீரர்கள் இருந்தனர் என்றும் 15,000 படை வீரர்கள் இருந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஜெயின் உல் ஆபிதீன் சுஸ்தாரி உல் குல்லி வழியாக குடகு நாட்டிற்குள் சென்றார். திப்புவின் படைகளை நான்காயிரம் முதல் 5000 குடகு வீரர்கள் வழிமறித்தனர், கடும் தடைகள் ஏற்படுத்தினர். அத்தனை தடைகளையும் தாண்டி மெர்க்காராவுக்குள் சென்றார் சுஸ்தாரி. ஆனாலும் அங்கு அவரால் தாக்கு பிடிக்க முடியவில்லை அங்கிருந்து பெட்டாதாபூருக்கு ஓடினார். மைசூர் மேற்கு எல்லையில் வலுவான இடம் அது. ஆனால் குடகர்களோ உள்குல்லியில் திப்புவின் வீரர்களை பிடித்து ஏராளமானவர்களை கொன்று குவித்தனர்.

தனது படை வீரர்கள் அதிக அதிக அளவில் சொல்லப்பட்ட செய்தியினை அறிந்த திப்பு சுல்தான் தானே படைகளுடன் 1785 அக்டோபர் மாத இறுதியில் ஸ்ரீரங்கபட்டணத்திலிருந்து கிளம்பினார். குடகு நாட்டின் தலைநகர் மெர்க்காராவுக்கு அருகிலுள்ள உல்குல்லிக்குள் எந்த வித தடைமின்றி திப்பு சென்றார். அங்கு இருந்த போது முஹர்ரம் பண்டிகையினை திப்பு சுல்தான் சிறப்பாகக் கொண்டாடினார். முஹர்ரம் பண்டிக்கை

கொண்டாட்டத்தின் போது அங்கிருந்தவாறே மெர்க்காராவுக்கு உணவுப் பொருட்களையும் படை வீரர்களையும் அனுப்பி கொண்டே இருந்தார். கோட்டையையும் வலுப்படுத்தினார். மொஹரம் பண்டிகை நிகழ்ச்சிகள் முடிந்ததும், திப்பு சுல்தான் தானே மெர்க்காராவுக்கு புறப்பட்டு சென்றார். பிரஞ்சு லாலி தலைமையில் ஒரு படையையும் ஹுசைன் அலி கான் தலைமையில் ஒரு படையையும் மீர் முகம்மது தலைமையில் ஒரு படையையும் இமாம் கான் தலைமையில் ஒரு படை பிரிவையும் தனித்தனியாக பிரித்து பல்வேறு திசைகளில் குடகைத் தாக்கினார். (Mir Hussain Khan Kirmani, History of Tippu Sulthan. Translated by Col. W.Miles. page 297)

குடகு நாட்டில் கூர்க்குகள் மிகுந்த பலத்துடன் பயங்கர வேகத்துடன் போரிட்டனர். கடும் போர் நடைபெற்றது, ஆனால், இறுதியில் திப்பு சுல்தான் வென்றார். கூர்க்குகள் கைது செய்யப்பட்டனர். முன்பு குடகைக் கைப்பற்றி விட்டு ஸ்ரீரங்கபட்டணம் திரும்பியதும் கூர்க்குகள் திரும்பவும் கலக்கத்தில் எழுந்ததை திப்பு சுல்தான் நன்றாகவே அறிவார். எனவே மீண்டும் குடகு நாட்டில் கலகம் தோன்றிவிடக் கூடாது என்பதற்காக கலகக்காரர்களை கைது செய்து மைசூருக்கு அனுப்பு வைத்தார்.

குடகில் அத்வானி பகுதியிலிருந்த மக்களை கொண்டு போய் குடியேற செய்தார். அவர்களின் பிழைப்பிற்கு விளைநிலங்களும் கடன்களும் வழங்கப்பட்டன. அவர்களில் பலர் சீதோஷ்ண நிலையால் திரும்பினர். சுப்பராசைய்யாவின் (பிராமணர்)மருமகன் நாகப்பையா குடகின் பௌஸ்தாராக நியமிக்கப் பட்டார். (Tarikhi -i coorq, Husain Khan Lohani, footnotes 27a) ஆனாலும் குடகில் கலகங்கள் ஓயவில்லை. கூர்க்குகளை ஒடுக்க முடியவில்லை. அவர்கள் மைசூர் அரசுக்கு எதிராகக் கலகங்களை உடனடியாகத் தொடங்கினர்.

திப்புவின் படையெடுப்பின் போது குடகிலிருந்து வெளியேற்றப்பட்ட குடகர்களின் எண்ணிக்கை நிர்ணயிப்பது கடினமாக உள்ளது. ஏனென்றால் கர்னல் வில்க்ஸ் 70 ஆயிரம் பேர்கள் என்கிறார். எல்.ரைஸ் மைசூர் மற்றும் கூர்க் எனும் நூலினை 3 தொகுதிகளாக பெங்களூருவிலிருந்து 1876-1878 இல் வெளியிட்டுள்ளார். ஏறத்தாழ 90 ஆண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்ட அதில் 85000 பேர்கள் என்கிறார். (L.Rice Mysore and coorq, vol III, Bangalore 1878,page 111)

இதனை நம்புவதற்கு எளிதாக இயலாது. ஏனெனில் 1836 இல் நடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கூர்க்கின்

மக்கள் தொகை 65,437 ஆகும். Imperial Gazetteer 1885 வெளிவந்தது. அதில் நான்காவது தொகுதி பக்கம் 33இல் இந்த தகவல் உள்ளது.1836 இல் குடகின் மக்கள் தொகை 65,437 தான். திப்பு போரிட்ட 1785 என்பது அதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது. வில்க்ஸ் மற்றும் ரைஸ் ஆகியோர் குடகு மக்கள் தொகை குறித்துச் சொன்னதை நடுநிலையோடு சிந்தித்திட வேண்டும்.

அடியேன் முன்னரே சொன்ன அருட்திரு மோகிளிங் தனது Coorq Memoirs நூலில் (1850) பக்கம் இல் கூறுவார், The whole Coorq population may be estimated at 25000 or 26000 souls. They have much increased in number during the last twenty years. In former days they seem scarcely ever to have mustered more than 4000 or 5000 fighting men.

குடகிலிருப்பது 4000 அல்லது 5000 படை வீரர்கள் என்று மோகிளிங் குறிப்பிட்டுள்ளார். திப்பு ஸ்ரீரங்கப்பட்டினத்திற்கு திரும்பிய போது குடகில் உள்ள அனைவரையும் அழைத்துக் கொண்டு சென்றது என்பது உண்மையாகாது. ஏனெனில் திப்பு ஸ்ரீரங்கப்பட்டினத்திற்கு சென்றவுடன் குடகில் மீண்டும் கலகம் வெடிக்கிறது. அனைத்து கலகக்காரர்களையும் திப்பு சுல்தான் கைது செய்து அழைத்துக் கொண்டு சென்றிருந்ததால் அவர் போனவுடன் மறுபடியும் கலகம் செய்திட கூர்க்கள் எங்கிருந்து வந்தனர்? மாறாக அங்கே தான் இருந்தனர் என்பது தெளிவாகிறதல்லவா?

(For sufficient men were left to cause another revolt soon after. Mohibbul Hasan Khan, History of Tippu Sulthan 1951, page 86) திப்பு சென்றதும் குடகில் மீண்டும் கிளர்ச்சி நடந்ததா? இல்லையா? குடகர்கள் கலகம் புரிந்தார்களா இல்லையா? அவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? அனைவரையும் திப்பு கைது செய்து கொண்டு சென்றார் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் முடியுமா?சிந்தியுங்கள்.

திப்பு சுல்தான் தனது பறந்து பட்ட மைசூர் ராஜ்ஜியத்தில் குடகிலும் மலபாரிலும் மதமாற்ற முயற்சிகளை மேற்கொண்டது உண்மை. ஆனால் அவை மதவெறி காரணமாக அல்ல,திப்பு மதவெறி கொண்டவராக இருந்திருந்தால் மைசூர் ராஜ்ஜியம் முழுவதற்குமல்லவா மதமாற்றத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். குடகிலும் மலபாரிலும் நிலவிய மோசமான சமூக பழக்க வழக்கங்கள் (குடகில் ஒரு பெண்ணுக்கு பல கணவன்மார்கள்,மலபாரில் பெண்கள் மேலாடை அணியாத்து) இதன் காரணமாகும்.

நாயர்கள்,நம்பூதிரிகள்,கிறிஸ்தவர்கள் மதமாற்றம் குறித்தும்,

அதே வேளையில் திப்பு பிற சமய வழிபாட்டுத் தலங்களுக்கு அளித்த தானங்கள் குறித்தும் அடுத்த கட்டுரையில் விரிவாக எழுதிட இருக்கிறேன். கூர்க் மற்றும் மலபார் பகுதிகளைத் தவிர்த்து திப்பு சுல்தான் தனது சமஸ்தானத்தில் வேறு இந்தப் பகுதியிலும் மதமாற்ற கொள்கை செயல்படுத்த வில்லை. கூர்க் பகுதியில் திப்பு எவ்வளவு பேரை மதமாற்றினார் என்பதற்கு துல்லியமான ஆதாரங்கள் இல்லை. ஆங்கிலேயே தரப்பு ஆவணங்கள் அண்டப்புளுகுகளாக உள்ளன.

முஸ்லிம்கள் தரப்பு ஆவணங்களும் திப்பு சுல்தான் இஸ்லாத்தின் வெற்றித் திருமகன் என்பது போல் காட்டிட 70 ஆயிரம் பேர்கள் குடகில் முஸ்லிமாக்கினார் என்று சுல்தான் உத் தவாரிக்கில் குறிப்பிட்டுள்ளது. இதை எழுதியவர் யாரென்று தெரியவில்லை. மராத்திய மைசூர் போர் (1785–1787) குறித்த தகவல்களைத் தரும் ஆவணத்தில் திப்புவை முஸ்லிம் தீரராகக் காட்டிடவே 70 ஆயிரம் பேர்கள் முஸ்லிமாகிருந்தனர் என்று எழுதி வைத்துள்ளனர். குடகில் அப்போது மக்கள் தொகை மிக மிகக் குறைவும் என்று முன்னேர பார்த்துள்ளோம்.

ஆர். ராமசந்திர புங்கனேரி என்பவர் Memoris of Hyder and Tippoo எனும் நூலை எழுதியுள்ளார். அதனை சி.பி.ப்ரௌன் மொழிபெயர்த்து சென்னையில் 1845இல் வெளிவந்துள்ளது. அந்த நூலில் பக்கம் 37 இல் திப்பு சுல்தான் 500 அல்லது ஆயிரம் பெண்கள்,குழந்தைகள் மட்டுமே மதமாற்றம் செய்தார் என்று குறிப்பிட்டுள்ளார். திப்பு வால் அனுப்பப்பட்ட 500 அல்லது ஆயிரம் மக்கள் ஸ்ரீரங்கபட்டணத்திற்கும் பெங்களூர் மற்றும் பல கோட்டைகளுக்கு குழுக்களாக பிரித்து அனுப்பப்பட்டனர்.

திப்பு சுல்தான் மீது எதிர்ப்புணர்வு கொண்ட புக்கனன், A journey from Madras through the countries of Mysore, Canara, Malabar ...3 volumes, London 1807) குடகில் மதமாற்றம் எதுவும் நடந்ததாகக் குறிப்பிடவில்லை.

திப்பு சுல்தான் மீது தீராப்பகை கொண்ட மூர் திப்பு கூர்க்கில் மதமாற்றம் செய்ததாக எதையும் கூறவில்லை.

பேராசிரியர் மொஹிபுல் ஹசன் கான் தனது திப்பு சுல்தான் நூலில் 1951, பக்கம் 360 இல் தெள்ளத் தெளிவாக சொல்வார் If there had been any truth in the story Moor and Buchanan would not have completely ignored it. இந்த செய்தியில் ஏதாவது உண்மை இருந்தால் மூரும் புச்சான்னும் அதனை முற்றிலுமாக புறக்கணித்திருக்க மாட்டார்கள் என்பதை உறுதியாக சொல்கிறார். குடகில் வசித்த இரவர்களும் ஹெலியர்களும் பக்கத்தில் இருந்த குடகர்கள் என்ற பலம் பொருந்திய ஆடசியாளர்களின்

அடக்குமுறை கொடுமை தாங்காது தங்கள் அடிமை வாழ்வு நீங்க வேண்டும் என்பதற்காகத் திப்புவின் படையெடுப்பை ஒரு காரணமாகக் கொண்டு தங்களை தாங்களே வளர்க்க இப்படி மதம் மாறினார்கள் என்பார் வழித்துணை ராமன் (தீரன் திப்பு சுல்தான், அருணா பப்ளிகேஷன், சென்னை 17)

இதன் பின் குடகின் நிலை என்ன?

1789 இல் வீரராஜா கோரூர் கோட்டையிலிருந்து தப்பி வந்ததும் அவரது செல்வாக்கை பயன்படுத்திட பிரிட்டிஷார் விரும்பினர். 1790 அக்டோபர் 15 இல் கிழக்கிந்திய கம்பெனி தலைசேரி தலைவர் ராபர்ட் டெய்லர் என்பவரும் குடகு ராஜா வீர ராஜேந்திர உடையாரும் செய்து கொண்ட ஒப்பந்தம் விரிவானது. சூரியன் சந்திரன் உள்ளவரை வரை இரண்டு தரப்பினரும் ஒப்பந்தத்தை மீறுவதில்லை. திப்பு சுல்தானையும் அவனை ஆதரிப்போரையும் பொது எதிரியாக நடத்த வேண்டும். திப்புவுக்கு தீங்கிழைக்க குடகு ராஜா தன்னால் இயன்ற எல்லா உதவிகளையும் ஆங்கிலேயருக்குச் செய்யவேண்டும்.

திப்புவை வீழ்த்த பிரிட்டிஷ் படைகள் தங்கு தடையின்றி குடகு வழியாகச் செல்லவும் அதிக அளவில் போர்வீரர்கள் அனுப்புவது என்றும் முடிவு செய்யப்பட்டது. பிரெஞ்சுக்காரர்களுடன் தொடர்பு வைக்க கூடாது. கிழக்கிந்திய கம்பெனி குடகின் சுதந்திரத்திற்கு உறுதி அளித்தது,ஆங்கிலேயர் திப்பு சுல்தானுடன் சமாதானம் செய்து கொள்ள நேர்ந்தாலும் குடகுராஜாவின் உரிமைகள் பாதுகாக்க கம்பெனி உறுதி கூறிற்று.

தலைசேரியில் ராஜ குடும்பத்தினர் விருந்தாளியாக தங்கவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கு கடவுள் சந்திரன் சூரியன் சாட்சி என்று ஒப்பந்தம் முடிகிறது. 15.10.1790 இல் கையெழுத்தான ஒப்பந்தத்தில் ராபர்ட் டெய்லரும் வீரராஜேந்திரன் இருவரும் கையெழுத்திருந்தனர். 1790இக்கு பின்னர் பிரிட்டிஷார் திப்பு சுல்தானுடன் போராடிய இரண்டு போர்களிலும் குடகின் வீர ராஜேந்திரராஜா ஆங்கிலப் படையினருக்கு உணவு அளித்து உதவி செய்தார்.

வீராஜேந்திர ராஜாவை கிழக்கிந்திய கம்பெனி பம்பாய் தளபதி ஸர் ராபர்ட் அபெர் குரோம்பி குடகில் சந்தித்தார். அதன் நினைவாக வீரராஜேந்திர ராஜா தாம் அபெர் குரொம்பியைச் சந்தித்த இடத்தில் ஒரு ஊரை உருவாக்கி வீரராஜேந்திர பேட் என்று தம் பெயரை சூட்டினார்,அது தான் தற்பொழுது வீராஜ் பேட் ஆகும். 1809 இல் வீரராஜேந்திரன்

இறந்த பின் அவரது புதல்வி தேவம்மாஜி அரசியானாள். அப்பொழுது அவர் வயது பத்து.குடகு தலைவர்கள் ஒன்று கூடி தேவம்மாஜியின் மாற்று தாயின் சகோதரியின் கணவர் சோட பசவ லிங்க ராஜாவை திவானாக நியமனம் செய்தனர் ஆனால் வீரராஜேந்திரனின் இளைய சகோதரன் இரண்டாவது லிங்கராஜா தன்னையே திவானாக நியமிக்க வற்புறுத்தி குடகின் அதிகாரத்திற்கு வந்தான். உதவியற்ற தேவம்மாஜி பதவி துறந்தார். இரண்டாவது லிங்கராஜா குடகை 1811 முதல் 1820 வரை ஆடசி புரிந்தார். வீரராஜாவிற்கு பின் அவரது பேரன் பிரிட்டிஷாரை பெரிதளவு எதிர்த்தான் என்று பேராசிரியர் C.S.Srinivasachari 1952 page 48 இல் தனது An advanced History of India, vol 3, part 2 குறிப்பிட்டுள்ளார். 1820 இல் இரண்டாவது லிங்க ராஜா இறந்தான். அவரது புதல்வர் சிக்க வீர ராஜேந்திர ராஜா பதவிக்கு வந்தான். 1834 வரை ஆட்சியிலிருந்த அவனே குடகு ராஜாக்களின் கடைசியானவன்.

1825 இல் சென்னவீரா என்ற தனது குடும்பத்துக்காரன் ராஜதுரோகம் செய்தான் என்று அவனைக்கொல்லும்படி சிக்க வீரராஜேந்திரன் உத்தரவிட்டான். மைசூரிலிருந்த பிரிட்டிஷ் ரெசிடண்டு சிக்க வீர ராஜேந்திரனுக்கு கடிதம் எழுதினான். எத்தனை பேர்களுக்கு மரண தண்டனை விதித்திருக்கிறாய் என்று அதில் கேட்டிருந்தான். தான் சுதந்திர மன்னர் என்றும் பிரிட்டிஷாருக்கு பட்டியல் அனுப்ப முடியாது என்றும் சிக்க வீரராஜேந்திரன் கூறினான். தேவம்மாஜியின் கணவர் சென்ன பசவப்பாவும் அதில் தகுதியற்ற குடகர்களும் சிக்க வீரராஜேந்திரன் ஆட்சியை கவிழ்க்க முயன்றனர். அவர்களை கைது செய்ய முயன்ற போது அவர்கள் தப்பி ஓடி மைசூர் பிரிடிஷ் ரெசிடெண்டிடம் அடைக்கலம் புகுந்தனர். அவர்களைத் திருப்பி அனுப்பும்படி சிக்க வீர ராஜேந்திரன் பிரிட்டிஷாரை கேட்டான். பிரிட்டிஷார் மறுத்தனர். வழக்கம் போல பிரிட்டிஷார் போர் தொடுத்தனர்.

கி.பி.1834 இல் குடகில் பிரிடிஷ் படைகள் நுழைந்தது. கர்னல் பிரேஸர் குஷால் நகர் வழியாக நுழைந்தார். எனவே குஷால் நகர் பிரேசர்பேட் ஆயிற்று .கி.பி. 1834 ஏப்ரல் 4 பிற்பகல் 4 மணி குடகு அரண்மனையிலிருந்த ராஜாவின் கொடி இறக்கப்பட்டது. 21 குண்டுகள் முழங்க பிரிட்டிஷார் தங்களது கொடியை உயர்த்தினார்கள். ராஜா சிக்க வீர ராஜேந்திரனை காசிக்கு நாடுகடத்தினார்கள். (திப்புவின் பிள்ளைகளை வேலூருக்கும் கல்கத்தாவிற்கும் நாடு கடத்தியது போல) குடகை கர்னல் பிரேசர் பிரிடிஷ் ஆட்சியோடு இணைத்துக் கொண்டார்.

காசிக்கு நாடு கடத்த பட்ட சிக்க வீர ராஜேந்திராவும் அவரது மகள் கௌரம்மாவும் பிரிட்டிஷாரின் அனுமதியோடு இங்கிலாந்து சென்றனர். அங்கு விக்டோரிய மாகாராணியைச் சந்தித்தார் கௌரம்மா, கிறிஸ்துவராக மதமாற்றம் செய்யப்பட்டார். அவருக்கு ஆங்கிலம் சொல்லித்தர ஆசிரியை (குமாரி ஆலி ஹகர்) நியமிக்கப்பட்டார்.

தனக்குரிய குடகை திரும்பதர வேண்டுமென்ற சிக்க வீர ராஜேந்திரனின் கோரிக்கையை பிரிட்டிஷ் அரசு ஏற்காமல் நிராகரித்தது.

கௌரம்மா பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி கேப்டன் காமிஸல்லை மணந்தாள். பெண் குழந்தை பிறந்தது, கௌரம்மா இறந்தாள். அவளது கணவனும் மறைந்தார். கௌரம்மாவின் மகள் எடிச்சாது (அவரது கணவர் காப்டன் யார்ட்லி)பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்து முதல் உலக போரின் ஆஸ்திரேலியாவில் ஒரு விபத்தில் மாண்டார்.

வீரராஜனின் தங்கை தேவாம்ஜிக்கு மாதம் 250 ரூபாய் உபகார சம்பளம் தரப்பட்டது.

தீரன் திப்பு சுல்தான் வீழ்த்துவதற்கு எல்லா வழிகளில் உதவி செய்தவர்கள் குடகர்கள். சிக்க வீரராஜேந்திரன் குடகை விட்டு வெளியேற்றப்பட்ட பின் ஜி எஸ் பிரேசர் லெப்டினல் கர்னல் மற்றும் ராஜாபிரதிநிதி 07.05.1834 இல் மடி கேரியிலிருந்து பிரகடனம் வெளியிட்டு அதன் கன்னட அர்த்தத்தை தண்டோரா மூலம் தெரியப்படுத்தினான். ‘குடகு நாட்டு மக்கள் இனிமேல் தங்களுக்கு வீர ராஜேந்திர உடையார் அரசராக இருக்க கூடாது என்றும் கிழக்கிந்திய கம்பெனியின் ஆங்கில சர்க்கார் இந்த நாட்டை ஏற்று கொள்ள வேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானித்ததனால் அந்த அரசர் ஆண்டு வந்த இந்த நாட்டை கவர்னர் ஜெனரல் துரையவர்கள் மகிழ்ச்சசியுடன் கணம் கம்பெனி சர்க்காரின் ஆட்சியின் கீழ் எடுத்துக் கொண்டுள்ளார்.

குடகின் புது அரசிற்கு மைசூர் சமஸ்தானத்தின் சீப் கமிஷனர் பிரபுவே சீப் கமிஷனர் என்றும் அதற்கு அடுத்து பிரத்தியேக அதிகாரி ஆட்சியை நேரிடையாக நடத்திய சூப்ரடென்ட் லெஹார்டி என்ற ஆங்கில தளபதி முதல் சூப்பரிண்டெண்ட்டாக நியமிக்க பட்டார். குடகு ஆங்கிலேயேர்கள் கைக்கு வந்து பல வருடங்கள் ஆகின. குடகின் மக்கள் இவை எதையும் அறியாமல் வாழ்ந்தனர். அப்போது மைசூர்காரர்களான எங்களுக்கு தான் அறிவில்லாமல் போய்விட்டது. குடகு நாட்டு மக்கள் ஏன் இதை தாங்களாகவே ஆங்கிலேர்களிடம் கொடுத்து விட்டனர் என்று ஆச்சசிரியப்பட்டார்கள் என்று

குடகின் வேதனையை சிக்க வீர ராஜேந்திரன் என்ற கன்னட நாவலில் (மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் எழுதியது 1974 இல் ஹேமா ஆனந்த் தீர்த்தான் தமிழில் அதை மொழி பெயர்த்தார்) குறிப்பிட்டுள்ளார்.

திப்புவை வீழ்த்திட உதவியை குடகர்கள் *(1799) 33* ஆண்டுகளுக்குள் தங்களது சொந்த நாடு முழுவதையும் பிரிட்டிஷாரிடம் இழந்தார்கள். *(1834)* அதோடு குடகு மக்களை இம்சித்தார். மதமாற்றம் செய்தார் திப்பு என்று கற்பனைகளை கணக்கின்றி அள்ளி விட்டனர். அவைகளை வெளிச்சத்திற்க்கு கொண்டு வரும் சிறு முயற்சியே இக்கட்டுரை.

திப்பு சுல்தான் கிறிஸ்துவர்களை மதம் மாற்றினாரா?

'தென்னகத்தின் போர்வாள்' திப்பு சுல்தான் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்று நடந்தவர் என்பதற்காக இவர் மீது மக்கள் வெறுப்பு கொள்ள வேண்டும் என்றும் வசைபாட வேண்டும் என்றும் வரலாற்றை திரித்தார்கள். முக்கியமாக திப்பு மலபாரில் இந்துக்களையும் பெங்களூரில் கிறிஸ்தவர்களையும் கட்டாயமாக மதம் மாற்றினார் என்று கதை கட்டினார்கள்.

கிறிஸ்தவர்களை திப்பு சுல்தான் கட்டாயம் மதம் மாற்றினாரா? வரலாற்று உண்மைகளை வெளிச்சத்திற்கு விரிவாகவே காட்ட வேண்டிய அவசியம் உள்ளது.

தித்திக்கும் திருமறையாம் திருகுர்ஆனில் ஏசு, ஈசா (அலை) என்று போற்றப்படுவதும் அவரது அன்னையர் மரியம் (அலை) குறித்து 114 அத்தியாயங்களில் ஒன்றான மரியம் என்ற 19 வது அத்தியாயமும் உள்ளது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டுகிறேன். Antigual has Estudos e Documentos sobra a Historia dus portuguses na India vol ,1.fase 2 போர்த்துகீசியர்களின் இந்தத் தொகுதி, பயனுள்ள தகவல்கள் பலவற்றையும் திப்பு சுல்தானுக்கும் போர்த்துகீசியருக்கும் கனராவில் வாழ்ந்த கிறிஸ்துவர்களுக்கும் இடையே நிலவிய உறவைப் பற்றி அறியத் தருகிறது.

கிறிஸ்தவர்கள் மீதான தீரன் திப்பு சுல்தானின் நடவடிக்கைகள் யாவும் மத ரீதியானவை அல்ல, முழுக்க முழுக்க அரசியல் தொடர்புடையது ஆகும். திப்பு சுல்தான் கிறிஸ்தவர்களை பெருந்தன்மையுடன் நடத்தினார். அவர்களில் சிலர் துரோகமிழைத்த போது மட்டுமே தண்டித்தார். முதல் மைசூர் போர் 1767-1779 இல் நடைபெற்றது, இரண்டாம் மைசூர் போர் 1780-1784 இல் நடந்தது. லிண்ட்ஸே (Lindsay) என்ற ஆங்கில நாட்டுத் தூதுவர் இங்கிலாந்திலிருந்து சென்னைக்கு வந்தார்.

அவர் ஹைதர் அலிக்குப் பகையாக மராட்டிய மன்னர்களுடன் நட்பு கொள்ளுமாறு ஆங்கிலேயருக்கு அறிவுரை கூறினார்.

ஆனால், ஐதரும் நிஜாமும் மகாராஷ்டிரரும் ஆங்கிலேயருக்கு எதிராக ஒன்று சேர்ந்தனர். 1780 ஜுலையில் 80000 வீரர்களுடன் ஹைதர் போருக்கு கிளம்பினார். வங்காளத்திலிருந்து வாரன் ஹேஸ்டிங் அனுப்பிய ஒரு படை சார் அயர் கூட் தலைமையில் சென்னைக்கு வந்தது. பேரார், சிந்திலா ஆகிய நாடுகளின் அரசர்களையும் நிஜாமையும் வாரன் ஹேஸ்டிங் ஐதர் அலியின் கூட்டணியிலிருந்து வஞ்சனையால் பிரித்துக் கொண்டார். ஐதர் அலி டோஸிலூரில் இருந்த பெய்லியைத் தாக்கினார்.சார் அயர் கூட் மனந்தளர்ந்து தமது பதிவிலிருந்து விலகவும் தீர்மானித்தார்.கர்னல் பிரேயத்தை திப்பு சுல்தான் கும்பகோணத்திற்கு அருகில் தோற்கடித்து கைது செய்தார்.

ஆரணியில் ஹைதர் அலிக்கும் சர் அயர் கூட்க்கும் கடும் போர் நடைபெற்றது. இந்நிலையில் சர் அயர் கூட்டின் உடல் நலம் கெட்டது. ஜெனரல் ஸ்டுவர்டு ஆங்கிலேயப் படைகளுக்குத் தலைவர் ஆனார்.

1783 ஏப்ரலில் சர் அயர் கூட் காலமானார். ஹைதர் அலி உடல் நலமற்று ஆற்காட்டுக்கு வடக்கில் தங்கியிருந்தார்.1782 டிசம்பர் 7 இல் சித்தூருக்கு அருகில் உயிரிழந்தார். எனினும் தீரன் திப்பு சுல்தான் தொடர்ந்து போர் நடத்தினார்.பெயிலி, பிரைய்த் வெயிட் ஆகியோர் திப்புவால் சிறை பிடிக்கப்பட்டனர்.

1783 இல் பம்பாய் அரசாங்கப் படைத் தலைவர் பிரிகேடியர் மாத்யூஸ் என்பவரை அவருடைய அதிகாரிகள் பலருடன் திப்பு சிறைபிடித்தார். பெத்தனூரும் மங்களூரும் திப்புவால் வெல்லப்பட்டன. மக்கார்ட்டினி பிரபு (Lord McCartney) சென்னை ஆளுநர் ஆனார். தம் தூதுவர்களை அனுப்பி திப்பு சுல்தானிடம் சமாதானம் கோரினார்.1784 இல் திப்பு சுல்தானுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே மங்களூர் உடன்படிக்கை ஏற்பட்டது.

இரண்டாம் மைசூர் போர் ஆங்கிலேயரை அடியோடு ஒழிப்பதற்காக நடத்தப்பட்ட போர். இதில் ஆற்காடு நவாபு முஹம்மது அலி வாலாஜா தவிர மற்றவர்கள் ஐதர் மற்றும் திப்புவுடன் ஒத்துழைத்தனர் என்பது சரித்திர உண்மை. உலகெங்கும் ஆபத்து ஏற்பட்டிருந்த வெள்ளையர்கள் பின்னால் வெவ்வேறான சோதனையிலிருந்து மீண்டனர். மேற்சொன்ன இரண்டாவது ஆங்கிலேயே மைசூர் போரின் போது மைசூர் ராஜ்ஜியத்திற்கு உட்பட்ட கனரா கிறிஸ்தவர்கள் ஆங்கிலேயருக்கு

பலமான உதவிகளைச் செய்தனர். மேற்குக்கரையில் மாத்யூஸ் படையெடுத்து வந்த போது கிறிஸ்தவர்கள் ஒற்றர்களாகவும் வழிகாட்டிகளாகவும் செயல்பட்டனர்.

During the second Anglo - Mysore war, the Kanara Christians, who were Mysore subjects rendered valuable help to the English. When Matthews invaded the West Coast they acted as his spies and guides. *(முற்கூறிய போர்த்துக்கீசிய நூல்)*

(தென் கன்னடம், வடகன்னடம் ஆகிய இரண்டு மாவட்டங்கள் அரபிக் கடலோரமாக அமைந்துள்ளன. இம்மாவட்டங்களின் மேற்கு எல்லை அரபிக்கடல். கிழக்கு எல்லை மேற்குத் தொடர்ச்சி மலை. துளு மொழி பேசப்படும் செழிப்பான பகுதி. தென் கன்னட மாவட்டத்தின் தலைநகர் மங்களூர். இங்கு இன்னும் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் அதிகம் வாழ்ந்து வருகிறார்கள். நகரில் பல கிறிஸ்தவ தேவாலயங்கள் உள்ளன)

மாத்யூஸ் படையெடுத்து வருகையில் 35 கிறிஸ்தவ படையினர், மைசூர் இராணுவத்தில் பணியாற்றியவர்கள், திப்புவின் படையிலிருந்து விலகி மாத்யூஸ் பக்கம் சேர்ந்து கொண்டனர்

...and about thirty five Christians who were in the Mysore army deserted and entered his service(S.N.Saldanha, The Captivity of Canara Christians under Tippu in 1784, Mangalore 1933 page 18,foot note b) *இதனை S.N.சல்டாகு 1933 இல் எழுதிய 'கனரா கிறிஸ்தவர்கள் திப்பு சுல்தானின் 1784 கால கட்டத்தில்' என்ற நூலில் தெள்ளத் தெளிவாக விளக்குகிறார். திப்பு சுல்தானின் படையிலிருந்து கிறிஸ்தவர்கள் ஆங்கிலேயர் படையோடு சேர்ந்து கொண்டனர். அதுமட்டுமா? கும்பெனிப் படைக்கு வேண்டிய பொருள் உதவியையும் செய்தனர். பெத்தனூர் வீழ்வதற்கு முன் மாத்யூஸ் எழுதிய கடிதத்தில் இதனை உறுதி செய்கிறார்.* History of Tippu Sulthan *நூலினை கல்கத்தாவிலிருந்து 1951 இல் தந்திட்ட மொஹிபுல் ஹசன் கான் தனது ஆங்கில நூலில் பக்கம் 362 இல் தருகிறார்.*

Moreover, the Kanara Christians also gave the English financial assistance. Thus, in a letter which Mathews wrote just before the fall of Bendur, he mentioned that he had borrowed 33,000 rupees from Kanara Christians and requested that anyone who happened to read the letter should make the fact know to president and council in any of the presidencies *என்கிறார்.*

கனரா கிறிஸ்தவர்களிடமிருந்து 33,000 ரூபாய் தான் வாங்கியிருப்பதாகவும் இந்தக் கடித்தை வாசிக்க நேரும் யாரும் இந்த உண்மையை இந்தப் பிரதேசத் தலைவரிடமோ அல்லது ஆட்சிக்கு குழுவிடமோ தெரிவிக்க வேண்டி வேண்டுகோளுடன் கடிதம் முடிந்திருந்தது.(மொஹிபுல் ஹஸன்கான் நூல் தமிழில் மொழி பெயர்த்தது நண்பர் ண்.அர்ஷியா பக்கம் 417) மூல நூலில் 33000 என்பதில் பிழை திருத்தம் உள்ளதா என்று தேடினேன் இல்லை.

33,000? 3,33,000?!

1927 இல் மங்களூரில் இருந்து J.J.Rego at the codialball press எனும் நூல் 94 பக்கங்களை கொண்டது. A Historical Sketch By George M.Moraes with preface by The Rev.,H.Heras, Professor of India History, Director of the India Historical Research Institute, St Xaviers College, Bombay இல் இருந்து வெளிவந்தது.

அந்த நூலில் பக்கம் 65 இல் General Mathews had written that he had borrowed 3,30,000 rupees from the Malabar Christians (The Christians of Kanara are here called Malabar Christians in the wider sense of the West Coast) என்கிறார். மொஹிபுல் ஹசன் கான் 33,000என்கிறார். இதில் எது உண்மை? எது சரி?

ஜேம்ஸ் செக்யூரி நூலை மேற்கோள் காட்டுகிறாரே இவர் யார் என்று தேடினேன். ஹைதர் அலி, திப்பு சுல்தான் காலத்தில் சிறைபிடிக்கப்பட்டு 10 ஆண்டுகள் சிறைவாசமேற்று அதன் பின் எப்படியோ தப்பிச் சென்று இலண்டனில் தனது சிறை அனுபவங்களைத் தந்துள்ளார் ஜேம்ஸ் ஸ்கூரி. The captivity sufferings and escape of James Scurry who was detained a prisoner during ten years in the Dominions of Hyder ali and Tippu Saib written by himself, London , Henry Fisher, B 8 New gate Street 1824 இல் வெளியான நூல் 268 பக்கங்களைக் கொண்டது.

இந்த நூலில் பக்கம் 99, 100 இல் அடிக்குறிப்பான ஜேம்ஸ் ஸ்கூரி தெரிவித்துள்ள செய்தி அவரது வாசகங்களிலேயே ...that he had borrowed 3,30,000 rupees from the Malabar Christians, for the support of his army since he left Bombay.

திப்பு சுல்தான் குறித்து சிறந்த நூலை தந்த மொஹிபுல் ஹசன் கான் அவர்களே சற்று கவன குறைவாக பிரிட்டிஷ் படைக்கு கனரா கிறிஸ்தவர்கள் வழங்கிய கடன் 33000 என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் உண்மையில் தீரன் திப்பு சுல்தானை எதிர்த்து போரிடும் ஆங்கிலேயே படைக்கு கனரா

கிறிஸ்தவர்கள் வழங்கிய தொகை 3,33,000 ஆகும் என்பதனை உறுதியாக பதிவு செய்கிறேன். பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர்கள் பெரும் பிதற்றலாக எழுதியிருக்கும் வேளையில், தீரன் திப்பு சுல்தான் மீது பழிகளைப் போடும் வேளையில் ரஷ்ய சரித்திர ஆசிரியர்கள் கொ.ம.அந்தோனவா, கி.ம.பொன்காரத் லேவின் கி.கி.கத்தோல்ஸ்ஜி ஆகியோர் இணைந்து தந்த இந்தியாவின் வரலாறு இரண்டாம் பாகத்தில் அதாவது 18ம் நூற்றாண்டின் நடு முதல் நம் காலம் வரை என்ற நூலில் (தமிழாக்கம் பூ.சோமசுந்தரம், 1979) பக்கம் 53 இல் வரும் செய்தியை இங்கே பதிவு செய்யவேண்டியது அவசியம் ஆகிறது.

ஐதர் அலியின் அன்பை பெற்றவரும் திப்பு சுல்தானால் வெறுக்கப்பட்டவருமான பிதனூர் கோட்டைத் தலைவன் ஷேக் ஐயாஸ் என்பவனைக் கொன்று விடும்படி திப்பு சுல்தான் இரகசிய ஆணை அனுப்பினான். இந்த ஆணை ஐயாஸ் கையில் அகப்பட்டு விட்டது. ஷேக் ஐயாஸ் உயிர் பிழைக்கும் பொருட்டு 1783 ஜனவரியில் பித்னூரை பம்பாய் சேனைத் தலைவன் ஜெனரல் மாத்யூயிடம் ஒரு குண்டு சுடாமல் ஒப்பு கொடுத்து விட்டு ஆங்கிலேயர் தரப்புக்கு மாற்றிவிட்டான். பிதனூரை இழந்தது திப்பு சுல்தானக்கு பெருத்த அடியாக இருந்தது. மைசூரின் இதயத்தில் புக ஆங்கிலேயருக்கு வழி திறந்து விட்டது. (This meant that a route to the very heart of Mysore had been opened up for the British)

திப்பு சுல்தானின் நற்காலம் பம்பாய்ச் சைனியம் இந்தியாவில் இருந்த ஆங்கிலேர்கள் எல்லாவற்றிலும் பலம் குறைந்ததாக இருந்தது. மாத்யூஸ் இயல்பான திறமையும் மனஉறுதியும் இல்லாத தளகர்த்தனாக இருந்தான்.

Fortunately for Tippu, the Bombay army was the weakest of the British armies in India and Mathews was an incompetent and irresolute commander.

பேதனூர் கோட்டையைப் பிடித்துக் கொண்ட மாத்யூஸ் படையினர் அங்கிருந்த பெருத்த பொக்கிஷத்தைக் கவர்ந்தார்கள். ஆங்கிலேயே சிப்பாய்களோ செல்வம் கொழித்த அந்த நகரின் மக்களை கொள்ளை அடித்தார்கள். பம்பாய் சேனையின் சீரழிவு தொடங்கியது.திப்பு சுல்தான் தன் படைகள் அனைத்தையும் பெதனூருக்கு கொண்டு வந்து பட்னியால் சோர்ந்த நகரத்தைக் கைப்பற்றினார். மாத்யூஸ் சரணடைந்தார்.

'' After taking over the Bedore fortress, Mathews and his officers seized the enormous wealth that had been stored there. The soldiers also took all they could from the inhabitants of the rich city. As a result of all

this, the Bombay army was becoming demoralised and Tipu, concentrating all his forces around Bednore, succeeded in capturing the city by starving it out. Mathews capitulated" (A History of India, India in modern times, K.Antonova, G.Kutovsky, page 38)

இந்த பெதனூர் சண்டையின் போதுதான் மைசூர் படையிலிருந்த கிறிஸ்தவ வீரர்கள் எதிரணிக்குத் தாவியதும் ஜெனரல் மாத்யூக்கு கிறிஸ்தவர்கள் 3,33,000 ரூபாய் உதவி அளித்ததும் நாம் முன்னரே கண்டுள்ளோம். அடுத்து திப்புவின் மங்களூர் போர் ,அந்த போரின் போது மங்களூரை சார்ந்த கனரா கிறிஸ்தவர்கள் இரகசியமாக கேம்ப்பெலுக்கு உதவினார்கள்.

ஆயிரம் மூட்டை அரிசி... அது மட்டுமா, ருஸ்தம் அலி, முஹம்மது அலி இருவரும் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டு சதித்திட்டம் தீட்டினர். திப்புவை வீழ்த்திட முயற்சிகள் தொடர்ந்தது. இந்த வேளையில் மௌண்ட் மரியான் திருச்சபையின் அருட்தந்தை டான் ஜோவாக்யூம் டி மிராண்டா ஆங்கிலேய காவல் படைக்கு 1000 மூட்டை அரிசியை வழங்கி திப்பு சுல்தானுக்கு எதிராக நடந்து கொண்டார்.

Even the head of the Mount Marian congregation supplied the English garrison with 1000 bags of rice *(முற்சொன்ன போர்த்துக்கீசிய நூல்)*

இதற்கு பிறகும் திப்பு சுல்தான் அவர்களை மன்னித்தார்.

போர்த்துக்கீசிய நூல்கள் மேற்கொண்டு தரும் தகவல்கள் இதோ. அருட்தந்தை டான் ஜோவாக்யூம் டி.மிராண்டாவை திப்புசுல்தான் மன்னித்தார். அவரை யாரும் தொந்தரவு செய்யக் கூடாது என்று உத்தரவிட்டார். அவர் மத்தியஸ்தம் செய்ததின் பேரில் 150 கிறிஸ்தவர்களை விடுவித்தார் திப்பு. மைசூர் படையிலிருந்த கோஸிக்னி விலகியதும், அவனுக்கு அருட் தந்தை அடைக்கலம் கொடுத்ததும், அவனுக்கு கடற்கரைக்குப் போகும் வழியையும் காட்டி திப்பு சுல்தானுக்க துரோகமிழைத்தது வரலாற்றுச் சம்பவம் ஆகும்.

இதையடுத்து அருட்தந்தை ஜோவாக்யூம் டி மிராண்டா கோட்டையில் காவலில் வைக்கப்பட்டு, நீதிமன்றத் தீர்ப்பின்படி மௌண்ட் மரியான் திருச்சபைக் குடியிருப்பின் வாசிகளான கிறிஸ்தவர்கள் அத்தனை பேரும் கொச்சிக்கு நாடு கடத்தப்பட்டார்கள். கனரா கிறிஸ்தவர்கள் சிலர் கோவாவிற்கு அனுப்பப்பட்டனர். மேலும் சிலர் கைதிகளாக ஸ்ரீரங்கப்பட்டினத்திற்கும் சித்தலதுற்கிற்கும் கொண்டு செல்லப்பட்டனர். முகம்மது அலி, ருஸ்தம் அலியுடன்

இணைந்து துரோகமிழைத்த ஒரு கிறிஸ்தவர் மட்டும் தூக்கிலிப்பட்டார்.

திப்புவால் நாடு கடத்தப்பட்டவர்கள் 20,000 கிறிஸ்தவர்கள் என்கிறார்கள். 30,000 என்றும் 40,000 என்றும் கூறுகின்றனர். அதைவிட மேலாக புளுகு மன்னன் கர்னல் வில்கிஸ் 60,000 பேர்கள் என்கிறான். இவைகளை எப்படி சரிபார்ப்பது?

தீவிரமாக ஆய்வு மேற்கொண்டேன்.1823இல் லண்டனில் இருந்து வெளியான 222 பக்கங்களைக் கொண்ட ஆங்கில நூல் Letters on the state of Christianity in India in which the conversion of the Hindoos is considered as impracticable to which is added a vindication of the Hindoos male and female, in answer to a severe attack made upon both by the Reverend Abbe J.A.Dubois, Author of the description of the People of India, London, Printed for Longman, 1823.

இந்த நூலில் பக்கம் 75ல் திப்புசுல்தான் படையெடுப்பிற்க பின் 20,000 பேர் மங்களூர் மாவட்டத்திலிருந்து திரும்பினார்கள் என்று குறிப்பிடுகிறார். உண்மை அந்த இறைவனுக்கே வெளிச்சம்.

ஸ்ரீரங்கப்பட்டினத்திலும், சித்தல்துர்க் கோட்டைச் சிறையிலும் கைதிகளாய் இருந்த பலர், அவரவர் மதத்திலேயே நீடிக்க அனுமதிக்கப்பட்டனர். இது 1789 ஆம் ஆண்டு திப்பு சுல்தான் கோவாவின் வைஸ்ராய் மற்றும் ஆர்ச்பிஷப்பிற்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதத்திலிருந்து தெளிவாகிறது. திப்புவின் கடிதத்தில் ‘சிறைப்படுத்தப்பட்ட பின்பு தங்களது மதக்கடமைகளை சரிவரச் செய்யாமல் புறக்கணித்தவர்களை நேர்வழிப்படுத்திட கிறிஸ்தவ மத குருமார்கள் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அழிந்த தேவாலயங்கள் மறுபடியும் கட்டப்பட உத்திரவாதமும் தந்தார். ஏராளமான மதகுருமார்கள் விடுவிக்கப்பட்டனர். பலர் கோவா செல்ல அனுமதிக்கப்பட்டனர். (S.N.Saldanha, The captivity of Canara Christians under Tippu in 1784, Mangalore 1933, pages29,30)

திப்பு சுல்தான் ஆட்சியின் போது பாதிக்கப்பட்டவர்கள் கனரா கிறிஸ்தவர்கள் மட்டும்தான். அவர்கள் கோவாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள். போர்த்துக்கீசியர்கள் கீழ் இயங்கியவர்கள் இவர்கள் மீது மட்டும் திப்புசுல்தானுக்கு நல்ல நம்பிக்கை இல்லை. அவர்கள் பெதனூர், மங்களூர் போர்களின்போது 1000 மூட்டை அரிசி கொடுத்ததும், பிரிட்டிஷ் படைக்கு 3,33,000 ரூபாய் வழங்கியதையும் முன்னரே பார்த்துள்ளோம்.

கனரா கிறிஸ்தவர்கள் திரும்பத் திரும்ப மைசூர் அரசுக்கு எதிராகவே நடந்தார்கள். ஆங்கிலேயர்கள் 1768ல் ஹைதர் அலி காலத்தில் மங்களூரைக் கைப்பற்ற உதவியதும் இவர்கள் தான்

(இந்திய வரலாற்றுக் கழகம் Indian History congress 1944, Moraes, Muslim Rulers of Mysore and their Christian subjects எனும் கட்டுரை பக்கம் 443–445 இல் ஹைதர் அலிக்கும் மலபார் கிறிஸ்தவர்களுக்கும் இருந்த நிலையை விரிவாகக் காணலாம்) எனவேதான் திப்புவிற்கு கனரா கிறிஸ்தவர்கள் மீது அரசியல் ரீதியான பகையே தவிர மத ரீதியான பகை அல்ல.

கனரா அல்லது மலபார் கிறிஸ்தவர்கள் திப்புவின் ஆட்சியின் போது தாங்கொணா வகையில் குட்டிக் கலகங்களைச் செய்து கொண்டே இருந்தனர். இது அரசுக்கு துன்பத்தையும், பாதுகாப்பிற்கு சவாலாகவும் இருந்ததால்தான் திப்பு அவர்களை கோவாவிற்கும் இதர பகுதிகளுக்கும் நாடு கடத்தினார்.

ஆனால் சிரியன் கிறிஸ்தவர்களை திப்புசுல்தான் மிக்க அன்புடன் நடத்தப்பட்டனர். அர்மேனிய வணிகர்களையும் திப்பு அன்பாக மதித்தார். அவர்களை மைசூரில் குடியேற கேட்டுக் கொண்டார்.

வில்லியம் கிர்பாட்டிரிக் திப்பு சுல்தானின் கடிதங்கள்

திப்புசுல்தானின் கடிதங்களை வில்லியம் கிர்பாட்டிரிக் தந்துள்ளார். திப்புசுல்தான் துரோகத்தால் வீழ்த்தப்பட்ட போது கிழக்கிந்திய கம்பெனியில் பணியாற்றிய கிர்பாட்டிரிக் திப்புசுல்தானது பல்லாயிரக்கணக்கான கடிதங்களை கைப்பற்றிச் சென்று அவைகளை பெர்சிய மொழியிலிருந்து முழுவதுமாக மொழி பெயர்க்காமல் அவருக்கு விருப்பட்ட கடிதங்கள் 435 மட்டும் எடுத்துக் கொண்டு, அதிலும் அவருக்குத் தேவையான பகுதிகள் மாத்திரம் மொழி பெயர்த்து, அதிலும் தேவையற்ற விமர்சனங்களையும் அடிக்குறிப்புகளையும் அந்த நூலில் தந்துள்ளார்.

தீரன் திப்புசுல்தானின் புகழுக்கு கேடு பண்ணுகிற, தீங்குவிளைவிக்கின்ற, பொல்லாங்கு செய்கின்ற மூலமரபுகளுக்கு மாறுபட்ட, போலியான பொய்த் தோற்ற முடைய அந்த நூல் சில பயனுள்ள தகவல்களையும் தருகிறது.

திப்புவின் கடிதங்களில் 1785 பிப்ரவரி துவங்கி 1793 நவம்பர் வரை உள்ள கடிதங்களின் பகுதிகளை மட்டுமே

கிர்பாட்ட்ரிக் தந்துள்ளார். திட்டமிட்டே கி.பி. 1794 முதல் 1799 வரையிலான கடிதங்களை மறைத்துள்ளார். வரலாற்று ஆய்வு நோக்குள்ளோர் இது குறித்து தேடலை இலண்டனில் துவங்கி, திப்புசுல்தானது கடிதங்கள் முழுவதையும் வெளியிட்டால் வரலாற்றில் திப்புசுல்தானின் மீது புத்தொளி பாயும்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை விளக்காமல் முன்னுக்குப்பின் தொடர்பின்றி விஷமத்தனமாக தேர்ந்தெடுத்த கடிதங்களின் சில பகுதிகளில் கிர்பாட்ட்ரிக் தன்னையறியாமல் சில உண்மைகளையும் பதிவு செய்துள்ளார். அவர் பதிவு செய்துள்ள 425 வது கடிதம் இதோ... (ஆங்கில நூல் பக்கம் 467 Selected letters of Tippoo Sultan)

1787 ஜனவரி 1இல் யாகூப் என்பவருக்கும் இதர அர்மேனிய வியாபாரிகளுக்கும் திப்புசுல்தான் சார்பில் எழுதப்பட்ட கடிதம்...

To Yakoob and other Armenian merchants, dated 16th yoosufy 11th January 1787 Entitled a Kowl-nameh or Engagement.

The duties upon (such)good (as you may import into our dominions) are with exception, (hereby)remitted. Bring, therefore,with entire confidence to our ports and into our Kingdom, either by sea or land (as you may think proper), your silk stuff and (other) merchandise and thereby buy and sell. Wheresoever you may (choose to) bring your goods, there a place shall be assigned for your residence, and if you should, at any time, be in want of workmen or labourers, the same shall be furnished to you, on hire, by our Taalukddars.

அர்மேனிய வணிகர்களுக்கு ஆதரவாக திப்பு இருந்தார் என்பதற்கு இக்கடிதமே சாட்சி பகர்கிறது. திப்புவின் இராணுவத்தில் கணிசமான எண்ணிக்கையில் கிறிஸ்தவர்கள் பணியாற்றி வந்தனர். அவரவர் மதத்தின் வழமைகளுடன் இறைவணக்கம் செய்து கொள்ள சுதந்திரம் அளிக்கப்பட்டது.

ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்ட கனரா (மலபார்) கிறிஸ்தவர்களை கூட, மங்களூர் வெற்றிக்கு காரணமாக இருந்து ஆங்கிலேயர்களுக்கு உதவியதால் ஏற்பட்ட சேதத்துக்கு இணையாக மூன்றுகோடி ரூபாயை மைசூர் அரசுக்கு அபராதமாகச் செலுத்தி விட்டு, அந்த கிறிஸ்தவர்கள் மைசூர் ராஜ்ஜியத்திற்குள்ளே இருப்பதற்கு அனுமதி தந்தவர் திப்புசுல்தான்.

கோவாவிலிருந்து வந்த புனிதப் பயணிகள் மைசூர் அரசின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்ளும் செயலுக்கும் திப்புசுல்தான் அனுமதி அளித்தார்.

(முற்சொன்ன போர்த்துகீசிய நூல், P S Pissurlencar, Antigualhas, fasc ii, No. 75 Tipu to the Viceroy of Goa march 24. 1784.

மார்ச் 24ல் 1784 ல் தீரன் திப்புசுல்தான் கோவாவின் வைசிராய்க்கு எழுதிய கடிதம் இதற்கு சான்று பகர்கிறது.

இப்போது சொல்லுங்கள் தீரன் திப்புசுல்தான் கட்டாயமாக கிறிஸ்தவர்களை மதம் மாற்றினாரா? கனரா (மலபார்) கிறிஸ்தவர்கள் தனது ராஜ்யத்தில் பெரும் தீங்கும் துரோகமும் விளைவித்த போது அரசியல் காரணங்களுக்காகவே சில கிறிஸ்தவர்களை திப்பு தண்டித்தது உண்மை. கனரா கிறிஸ்தவர்கள் தண்டிக்கப்பட்டது அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதற்காக அல்ல. அவர்கள் அரசாங்கத்திற்கு தீங்கிழைத்ததால்தான் தண்டிக்கப்பட்டார்கள் என்பது தெள்ளத் தெளிவான உண்மை.

திப்பு கடப்பை மாவட்டத்தில் புலி வெண்ட்லா என்ற ஊரில் இருந்த கிறிஸ்தவ தேவாலயத்தை புதுப்பிக்க உதவிகள் செய்தார் என்பது உண்மை (சுஜாவுதீன் சர்க்கார் திப்புவின் அரசியல், சென்னை 1983 பக்கம் 214, 215)

2009ல் திருநெல்வேலி South Indian History Congress 29வது வருடத்திர நடவடிக்கைகள் நூல் Dr.G.சேதுராமன் ஆசிரியராகக் கொண்டு 657 பக்கங்களில் வெளியிடப்பட்டது. அதில் 247 250 பக்கங்களில் ஙி.ரிபரிமளாதேவி வரலாற்று விரிவுரையாளர் அரசு முதல் கிரேடு கல்லூரி, டி.நரசிபுரா, மைசூர் மாவட்டம், கர்நாடக மாநிலம் எழுதிய கட்டுரை Growth of Christianity in Mysore from 1800 - 1850 with special reference to Abbeduboi's church at Srirangpatina and St.Bartholomen's church at Mysore.

அக்கட்டுரையில் திப்புசுல்தானின் ஆட்சியின் போது எல்லா விதமான கிறிஸ்தவப் பிரிவுகளும் இருந்தன. ரோமன் கத்தோலிக்கர்கள், சேசுசபையினர், ஆங்கில லுத்தரன் சபையினர், செவன்ட்டே அமைப்பினர் என பல பிரிவினரும் இருந்தனர். (பக்கம் 248)

மைசூர் அரசில் 35,000 கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். ஆங்கிலேயர்கள் பிரெஞ்காரர்களுக்கு மதசுதந்திரம் இருந்தது. தேவாலயம் இருந்தது. திப்பு சுல்தானது இராணுவத்தில் ஐரோப்பியர்கள் இருந்தனர். திப்பு பிரெஞ்சுப் படைப்பிரிவினருக்காக தேவாலயமும் கட்டித்தந்தார்.

கனரா கிறிஸ்தவர்கள் ஆங்கிலேயரோடு கூட்டு சேர்ந்து கொண்டனர். அதோடு அவர்கள் பணக்கார விவசாயிகள், பெரிய வணிகர்களாகவும் இருந்தனர். அவர்கள் தேங்காய், மிளகு, முந்திரி போன்ற பொருள்களை விற்பவர்களாக இருந்தார்கள். அவர்கள் திப்புசுல்தானின் ஆட்சியை ஏற்றுக் கொள்ளவில்லை. (பக்கம் 248)

கனரா கிறிஸ்தவர்களைத் தவிர வேறு கிறிஸ்தவர்களை, தனது ராஜ்ஜியத்திற்கு உட்பட்ட கிறிஸ்தவ குடிமக்களை திப்புசுல்தான் துன்புறுத்தவே இல்லை, மதமாற்றமும் செய்யச் சொன்னதில்லை. மாறாக திப்புசுல்தானின் ஆட்சியில் மதசுதந்திரம் இருந்தது. திப்புசுல்தானின் தந்தையார் ஹைதர் அலி காலத்திலும் எல்லா மதத்தினரையும் நன்றாக மதித்துப் போற்றும் பண்பு நலன் இருந்தது.

பிரெசியாவில் சோனன்பர்கீ நகரில் ஜார்ஜ் மார்கிரெட் குருனர் தம்பதியினரின் மகனாக 8.10.1726இல் பிறந்தவர், தென்னிந்தியாவின் அப்போஸ்தலர் என வர்ணிக்கப்பட்ட கிறிஸ்டியன் பிரடெரிக் சுவார்ட்ஸ். இவர் 13.2.1798 வரை வாழ்ந்தவர். தமிழகத்தின் பலபகுதிகளில் கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்தவர். கி.பி.1779 ஆகஸ்ட் 24 இல் மைசூர் சென்றார். அங்கு ஹைதர் அலியைக் கண்ட காட்சியினை விவரமாகவே சொல்கிறார். ஹைதர் மதவிஷயங்களில் அக்கறை இல்லாதவராக இருந்தார். (Schwartz of Tanjore, page 108)

ஹைதரின் வாசஸ்தலத்தில் காரியக்காரர் அனைவரும் பிராமணர்களே. (பக்கம் 111)

கோட்டைக்கு வெளியே நூற்றுக்கணக்கான ஐரோப்பிய சோல்ஜர்கள் (படை வீரர்கள்) இருந்தனர். அவர்களில் சிலர் பிரெஞ்சுக்காரர், மற்றையவரோ ஜெர்மானியர், மலபார் கிறிஸ்தவரிலும் சிலரைப் பார்தேன். அவர்களைக் கண்டதும் ஆனந்தமடைந்தேன். அவர்களுக்கு ஏசுவின் மகிமையைச் சொன்னேன். உயரிய உபதேசமும் புரிந்தேன். அதனால் உள்ளம் குளிர்ந்தேன் (எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர், வரலாற்றுக் கதைகள், கலைமகள் காரியாலயம், சென்னை, 1965 ஹைதரின் வரிசை கட்டுரை பக்கம் 97) கேப்டன் பேடன் ஜெர்மனிய துருப்புக்களுக்கு தலைவர், நான் தாங்கியிருந்த முகாமிற்கே வந்து என்னை சந்தித்தார்.

ஹைதரின் மாளிகையில் இருந்தபோது பலரும் என்னிடம் வந்து கிறிஸ்தவ மதத்தைப் பற்றி கேட்டனர். அவர், அவரவருக்கு ஏற்றவாறு பேசி விஷயத்தைச் சொன்னேன். (பக்கம் 111)

அப்போது ஹைதரின் மகன் ஒருவர் என்னை வந்து சந்தித்தார். (இது திப்பு அல்ல). தர்பாரில் என்னை பார்த்து அன்புடன் மரியாதை தெரிவித்து, அவருடைய அறைக்கு வந்து போகும்படி என்னை வேண்டிக் கொண்டார். (பக்கம் 111)

ஹைதர் அலியிடம் சென்றதும் அவரிடம் கிறிஸ்தவம் மதத்தைப் பற்றிப் பேசினேன். யார் எந்த மதத்தைப்

பின்பற்றினாலும் ஹைதர் கவனிப்பதில்லை. இதுவே அவன் இயற்கை.

ஹைதரின் சமூகம் நான் சென்றதும் தனக்கு அருகே உட்காரும்படி சொன்னார். தரையிலே விலை உயர்ந்த இரத்தின கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. கால் செருப்புகளைக் கழற்றவேண்டுமென்று எனக்கு சொல்லப்படவில்லை. நான் சொன்னதை யெல்லாம் ஹைதர் கவனமாக கேட்டார். (பக்கம் 112)

ஹைதர் அலி மனம் விட்டு கிறிஸ்தவப் பாதிரியான என்னிடம் பேசினார்.

ஐரோப்பியர் சொன்ன சொல்தவறி நடந்தபோதிலும் தான் தவறி நடக்கப்போவதில்லை என்று ஹைதர்அலி கவார்ட்ஸிடம் சொன்னார்.

ஹைதர் அலியின் உயர்ந்த குணத்திற்கு நெல்லை கிறிஸ்தவத்தின் தந்தை என்று போற்றப்படும் கிறிஸ்டியன் பிரடெரிக் கவார்ட்ஸ் எழுதிய பயணக் குறிப்புகள் சாட்சி தந்து கொண்டிருக்கின்றன.

இப்போது சொல்லுங்கள், ஹைதரும் தீரன் திப்புசுல்தானும் கிறிஸ்தவத்தின் விரோதிகளா? உண்மையை உலகம் உணருமாக!

தீரன் திப்பு சுல்தான் இந்துக்களை இம்சித்தவரா? இந்து கோவில்களை இடித்தவரா?

இந்து முஸ்லிம் ஒற்றுமையின் திருவடிவம் திப்பு சுல்தான் என்று மகாத்தமா காந்தியடிகள் புகழாரம் சூட்டியுள்ளார்.(புலம் பெயர்ந்தோர் பார்வையில் திப்பு சுல்தான், பா.சிங்காரவேலன், கலகக்காரர்களும் எதிர்க் கதையாடல்களும்,டி.தருமராஜ் 2001,பக்கம் 57)

'மனிதர் தோன்றி வாழ்ந்து மறைந்த பின்னும் அவர்களது வாழ்வின் நுண்ணிய அதிர்வலைகள் இப்பிரபஞ்சத்தில் என்றும் நிரந்தரமாகத் தங்கி விடுகின்றன' என்ற இன்றைய அறிவியலாளர்களின் கோட்பாட்டின்படி திப்பு சுல்தான் மறைந்த பின்பும் இம்மண்ணில் தன்மான உணர்வுக்குப் பங்கம் வந்தால் விடுதலை உணர்வும் சுதந்திர வேட்கையும் அதிகார துஷ்பிரயோகத்தை எதிர்த்துத் தலைதூக்கும்.தலைதூக்க வேண்டும்.

தீரன் திப்பு சுல்தனைப் பற்றிய அண்மைக்கால கட்டுக்கதைகள் அவர் இந்து மதத்தினரை துன்புறுத்தியவர் என்று நாக்கூசாமல் சொல்கின்றன. இதில் உண்மை நிலை என்ன? தியாக வேங்கை திப்பு சுல்தான் இந்து மதத்தினரை துன்புறுத்தினாரா என்ற கேள்விக்கு விரிவாகவே விடை காண முயற்சிக்கும் தொடர் இது.

திப்பு சுல்தானின் ஆட்சியின் போது அரச நிர்வாகத்தில் முன்னணியில் இருந்தவர்கள் இந்துக்கள். திப்பு சுல்தானின் அரசில் அமைச்சராக அலங்கரித்து இறுதியில் காட்டியும் கொடுத்த பூர்ணையா, கருவூல அதிகாரியாக பணியாற்றிய கிருஷ்ணராவ், காவல்துறை மற்றும் தபால் துறை ஒற்றர் பிரிவிற்கு தலைவராக ஆஞ்சி ஷாமையா என்ற ஷாம

அய்யங்கார் என்று கூறிக் கொண்டே செல்லலாம். ஷாம அய்யங்காரின் சகோதரர் ரங்க அய்யங்கார் மற்றும் நரசிங்கராவ் இருவரும் ஸ்ரீரங்கப் பட்டிணத்தில் முக்கியப் பொறுப்பில் இருந்தவர்கள் ஆவர்.

வரி வசூல் துறையின் தலைமைப் பொருளாளராக இருந்தவர் சுப்பாராவ். நரசய்யா முன்ஷியாக பணியாற்றியவர் (Reports of the Mysore Archaeological Department 1916, P.75)

ஸ்ரீனிவாச ராவ், அப்பாஜி ராம் இருவரும் திப்பு சுல்தானின் நம்பிக்கைக்குரிய அதிகாரிகள். இவர்கள் அரசின் சார்பில் தூதர்களாகவும் சென்றார். படைத்துறையில் சிவாஜிராவ் ஹரிசிங் ஆகியோர் தளபதிகளாக பணியாற்றியவர்கள். முகலாயர்களின் அரசவையில் மூல்சந்தும், சுஜான்ராயும் திப்பு சுல்தானின் பிரதிநிதிகளாக செயல்பட்டனர். (Cw.Kirk Patrick, Select letters of Tippoo Sultan, London 1811, no, 73)

நாயக்ராவ் மற்றும் நாயக் சங் கானா மீது திப்பு சுல்தான் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார். (R.Ramchandra Punganuri, Memoirs of Hyder and Tippoo, Translated by C.P.Brown, Madras,1849, page 42,47)

கூர்கின் பௌஜ்தாராக நியமிக்கப்பட்ட நாகப்பையா பிராமணர் (Husain Khan Lohani, Tarikh-i- Coorg, Royal Asiatic Society of Bengal, Foot note 27a)

மலபார் காடுகளில் லாபம் ஈட்டித் தந்த மரங்களை வெட்டுவதற்கு தனிப்பட்ட உரிமையை வழங்கியது ஒரு பிராமணருக்குத்தான் (Malabar secret commission, Madras Records Volume 1716, January 1799,page 94) அஸப் என்ற பதவிக்கு கோயம்புத்தூரில் நியமிக்கப்பட்டவரும் பிராமணர்தான். பின்னர் அந்த பிராமணர் பாலக்காட்டிற்கும் அதிகாரியானார். (Malabar Commission First Commissioner Diaries volume ii, No.1663,page 223.)

திப்பு சுல்தானின் அமில்தார்கள் இந்துக்களாகவே இருந்தனர். மைசூர் படையில் இந்துக்களின் பிரதிநிதித்துவம் மிக முக்கியமானது. ஒழுங்கற்ற குதிரைப்படையின் ரிசல்தாராக ஹரிசிங் பணியாற்றினார். (Husain Ali Khan Kirmaani Nishan –i-Haidari, Bombay 1870,page 279)

மலபாரில் நாயர்கள் கலகம் செய்த் போது அதனை அடக்குவதற்காக அனுப்பப்பட்ட ரோஷன் கானுடன் துணையாக சென்றவர் சிரிபத் ராவ். (முற்கூறிய நூல் பக்கம் 275) கி.பி.1791

இல் காரன்வாலிஸ் பெங்களூரை முற்றுகையிட்ட போது அதனை எதிர்த்து 3000 வீரர்களுடன் திப்பு சுல்தான் படையில் போரிட்டது சிவாஜி என்ற மராட்டியர் (இவர் அவுரங்கஜேப் காலத்திய சிவாஜியல்ல' (Hamid Khan ,Tarikhi -i - Hamid Khan Bankipur ,M.P. 619, foot note 78a) மற்றொரு குதிரைப்படைக்கு தளபதியாக திப்பு சுல்தானின் படையில் பணியாற்றியவர் ராமாராவ் என்ற பிராமணர். (L.Rice, Mysore and Coorg, 3 volumes Bangalore 1876-1878, Volume I, page 299))

தீரன் திப்பு சுல்தானிடம் பணியாற்றிய உயர் பதவிகளில் செயல்பட்ட ஹிந்துக்கள், அதிலும் குறிப்பாக பிராமணர்கள் ஏராளம். இதையெல்லாம் மறைத்து விட்டுத்தான் திப்புவின் மீது புழுதி வாரித் தூற்றுகிறார்கள். திப்பு சுல்தான் இந்துக்களை தனது அரசில் முக்கியப் பொறுப்புகளில் வைத்து அழகு பார்த்தவர். திப்பு சுல்தான் இந்து கோவில்களை இடித்தவர் என்று இழிமொழிகளை இதயமில்லாதவர் கூறுகிறார்கள். உண்மை என்ன? தென்னாடு பழம் பெரும் கோயில்களுக்கும் மடங்களுக்கும் பெயர் போனதாகும்.திப்பு சுல்தான் காலத்திற்கு முன்பே அக்கோயில்கள் சிறப்புற்று இருந்தன.

ஸ்ரீரங்கப்பட்டனம்

ஸ்ரீரங்கப்பட்டினம் தொன்மையானது கி.பி.894 இல் திருமலை ஐயா இங்கு கோயிலைக்கட்டினார். கங்க தேசத்து அரசர் திருமலைராயர் கி.பி. 894 இல் ஸ்ரீரங்கபட்டணத்தில் ஆலையம் எழுப்பியதற்கு கோவிலில் கிடைத்த கல்வெட்டுக்களே சான்றாக உள்ளது. C .S Padmanabhan ,Temples of South India, Nagercoil ,1977, first edition 1979,page 97) கி.பி.1120 இல் விஷ்ணுவர்தனாவின் சகோதரர் உதயநித்யா கோவிலை விரிவுபடுத்தினான். இவ்விடத்திற்கு ஸ்ரீரங்கப்பூரம் அல்லது ஸ்ரீரங்கப்பட்டணம் என்று பெயரிட்டான் (C.S.ஸ்ரீனிவாசன் தென் இந்திய கோவில்கள்,சென்னை,பக்கம் 83)

அங்கு நாம் சென்றால் முதலில் காண்பது பழைய கோட்டையைத்தான்.கோட்டையின் பிரதான வாயிலை யானைவாசல் என்பர். கோட்டை இடிந்து கிடப்பதால் யானை வாசல் வழியாகவும் போகலாம். இந்த கோட்டை கி.பி.1454 இல் திம்மண்ணா நாயக்கரால் கட்டப்பட்டது.(வழித்துணைராமன், திப்பு சுல்தான், சென்னை, 1961 பக்கம் 222)

ஸ்ரீரங்கபட்டணத்து கோவிலைக் கட்டுவதற்கு திம்மண்ணா அனேக ஜைன மதக் கோயில்களை இடித்தார். 110 கோயில்களை திம்மண்ணா இடித்தார் என்ற குறிப்பும் உள்ளது. ஐந்து

மைல் தொலைவில் உள்ள கால்வாடி என்ற இடத்தில் இருந்த ஜைன கோவில்களை எல்லாம் இடித்து அங்கு புதைந்திருந்த அளவற்ற செல்வத்தைக் கொண்டு கோட்டை கட்டப்பட்டது என்று சரித்திர ஏடுகள் பேசுகின்றன.(தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், வேங்கடத்துக்கு அப்பால், சென்னை 1984, பக்கம் 49)

காவேரி நதி குடகு மலையிலிருந்து வருவதால் பெரும் பாறைகளை உருட்டிக் கொண்டு வந்து இங்கே சேர்த்திருக்கிறது. எனவே இவ்விடத்தில் காவேரியைக் கடப்பது சிரமமான ஒன்றாகும். இந்த இடத்தில் விஜயநகர அரச முன்னோர்கள் பல ஜைன கோவில்களை இடித்துக் கட்டியது ஸ்ரீரங்கப்பட்டணம் கோட்டை. இங்கு ரெங்கநாதர் ஆலையம் உள்ளது. அத்தோடு கங்கநாதர், நரசிம்மர், ஆழ்வார்கள் கோயில்களும் உள்ளது. (The Temples of South India ,V.Meena ,Kanyakumari page 66)

விஜயநகர அரசர்கள் அதன் பின் முஸ்லிம்கள், தீரன் திப்பு சுல்தான் கரங்களுக்கு ஸ்ரீரங்கக்கப்பட்டணம் வருகிறது. திப்பு சுல்தானின் மாளிகைக்கும் (பட்டன்மகல்) ரங்காக நாத கோயிலுக்கு இடையில் உள்ள தொலைவு 300 அடி கூட இராது. காலம் தவறாமல் இக்கோயிலில் ஆராதனை நடப்பதற்கு திப்பு உதவினார்.

இக்கோயிலில் திப்பு சுல்தான் பெயரைத் தாங்கிய பிரசாதம் வைக்கும் வெள்ளிப் பாத்திரங்கள் ஏழும், தீபத்தட்டுகளும் ஊது வத்தி நிலைப்புத் தண்டுகளும் இருப்பதை இன்றும் காணலாம். (Mysore Archaeological Reports 1912 page2)

ஸ்ரீரங்கநாதர் கோயில் மணியோசை திப்பு சுல்தானின் மாளிகைக்குத் தெளிவாகவே கேட்கும். ஒரு சமயம்குறிப்பிட்ட காலத்தில் அந்த ஓசை கேட்கவில்லை. திப்பு சுல்தான் இதனை கவனித்தார். கோயில் தர்மகர்த்தாவை அழைத்து விசாரணை நடத்தினார். தர்மகர்த்தாவோ ‘‘இத்தகைய தவறு ஏற்படாது. அருள் கூர்ந்து மன்னியுங்கள் ’’என்று வேண்டி நின்றார். திப்பு தர்மகர்த்தாவை மிகவும் கடிந்து கொண்டார். எச்சரித்தும் அனுப்பினார். முஸ்லிமான திப்பு சுல்தானின் ஆட்சியில் இந்தக் கோயில்கள் சரியாக பராமரிக்கப்பட்டது. அங்கு ஸ்ரீரங்கநாதர் கோயில் மட்டுமா. சில அனுமார் கோயில்களும் சைவ சமயக் கோயில்களும் அங்கே இருந்தன. திப்பு சுல்தான் மதவெறியராய் இருந்து இந்து மதத்தினரை துன்புறுத்தும் நோக்கம் கொண்டிருந்தால் இந்த கோயில்களை எல்லாம் விட்டு வைத்திருப்பாரா?

திப்பு சுல்தானின் ஆதரவைப் பெற்ற கோயில் கள் பல உண்டு,மைசூர் மேல் கோட்டையில் சிறந்து விளங்கும் நரசிம்ம சாமி கோயில், நாராயணசாமி கோயில் ஆகியவற்றிற்கும் திப்பு சுல்தான் வழங்கிய அற்புதக் கொடைகள் எண்ணிக்கையாலும் மதிப்பாலும் மிகுந்து காணப்படுகின்றன. (சுஜாவுத்தீன் சர்க்கார்,திப்புவின் அரசியல் வரலாற்று மயக்கமும் ஆய்வுத் தெளிவும்,சென்னை 1983,பக்கம் 208)

மைசூர் அருகே உள்ள மேல் கோட்டை நரசிம்மர் கோயிலில் ஒரு பெரிய தோல் முரசு உள்ளது. கி.பி.1786 இல் திப்பு சுல்தான் கோயிலுக்கு தந்த அன்பளிப்பு இது. தோல் முரசின் மேல் ஒரு பாரசீகப் பட்டயம் அழகாகப் பொறிக்கப் பட்டியிருக்கிறது. Mysore Archaeological Report, 1931,page 73) நாராயணசாமி கோயிலில் வெள்ளித்தாம் பாளங்கள் பல திப்பு சுல்தானால் தரப்பட்டது. (Mysore Archaeological Report 1917,p. 146) அதே நாராயணசாமி கோயிலில் தங்கத்தாலும் வெள்ளியாலும்,செய்யப்பட்ட ஆராதனைப் பாத்திரங்கள் பல காணப்படுகின்றன. (Mysore Archaeological Report, 1917,p. 21) சைவ சமயத்திற்குப் பெயர்பெற்ற நஞ்சன் கூடு நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்திலும் திப்பு சுல்தான் அளித்த அற்புதக் கொடைப் பொருட்கள் உள்ளன.

திரு நஞ்சுண்டேஸ்வர் கோயிலில் திப்பு சுல்தான் வழங்கிய கொடைப் பொருட்கள் ஏராளம் இருந்தாலும் இக்கோயிலிலுள்ள மரகதலிங்கம் ஒன்பது அங்குலம் உயரம் பளிச்சிடும் பச்சைக்கல்லில் ஆனது. அந்த லிங்கத்தை அந்த அலையத்திற்கு திப்பு சுல்தான் வழங்கியதால் அதற்கு பாதுஷா லிங்கம் என்றே பெயராகும். (Mysore Archaeological Report 1940, p. 23) நஞ்சன் கூடில் உள்ள திரு காந்தேஸ்வர சுவாமி கோயிலில் திப்பு சுல்தான் அளித்த ஆராதனைத் தட்டு உள்ளது. அதன் அடியில் நவரத்தினக் கற்கள் பொருத்தப்பட்டுள்ளது. அங்கு சுவாமியின் கழுத்தில் அணிந்திருக்கும் பொன்நிறம் பச்சை மரகதங்கள் பதித்து உள்ளது. அதுவும் திப்பு சுல்தான் அளித்ததாகும் (Epigraphia Carnatica vol 3 8894, plate 77, page 25)

மேல்கோட்டை நாராயணாசாமி கோயிலுக்கு திப்பு சுல்தான் ஒரு முறை 12 யானைகளை பரிசாக அனுப்பி வைத்தார். (Mysore Archaeological Report 1917 p.146) அதில் 2 ஆண் யானைகள், பத்து பெண் யானைகள் கலேல் என்ற பேரில் திருலட்சுமி காந்தர் கோயிலுக்கு திப்பு சுல்தான் ஆராதனை தட்டுகளையும் தாம்பூலத்தட்டுகளையும் வெள்ளிக் கும்பங்களையும் அன்பளிப்பாக தந்தார்.

இன்னும் அது திப்பு சுல்தான் பெயரிலேயே உள்ளது. (Mysore Archaeological Report 1918 page 23) மைசூர் மாநிலம் முழுவதும் சிறந்து விளங்குகின்ற கோயில்களை அனைத்திலும் திப்பு சுல்தானின் கொடைப் பொருட்கள் இருந்து வருகின்றன.

திப்பு சுல்தான் மதவெறியாராக இருந்து இந்து மதத்தவர்களை துன்புறுத்தி இருந்தால் மேல்கோட்டையில் அமைந்துள்ள இந்து வைணவ நரசிம்மா சாமி கோயில் பிரகாரத்தின் மேல் தளத்தில் புராண நிகழ்ச்சிகளை சித்தரிக்கும் படங்களுக்கு இடையில் திப்பு சுல்தானின் படமும் இன்றும் இடம் பெற்றிருக்கிறதே! அழகிய வண்ணத்தில் அது காட்சி அளிக்கிறதே! இந்துக்கள் அதனை அன்போடு அனுமதித்திருக் கிறார்களே. அது திப்பு சுல்தானனின் சமய ஒற்றுமைக்கு சான்று அல்லவா! (Mysore Archaeological Report 1945 page 59)

திப்பு சுல்தான் தந்த கொடை இந்தக் கோயில்களோடு நின்று விடவில்லை இந்து மத ஞானிகள் வாழ்ந்த பல்வேறு மடங்களுக்கு திப்பு சுல்தான் தானங்களை வழங்கி இருக்கிறார். பாபா பதன் கிரி ஊரில் உள்ள தத்தாத்ரியா பீடம் என்ற மடத்திற்கு ஆனகுண்ட அரசவம்சத்தினர் 20 கிராமங்களை இனாமாக தந்தனர். அது பின்னால் வந்த அரசர்களால் பறிக்கப்பட்டது. திப்பு சுல்தான் ஆட்சியில் அதனை அறிந்து மீண்டும் அந்த தத்தாத்ரியா பீடத்திற்கு 20 சிற்றூர்களை இனாமாகத் தந்தார். (Mysore Archaeological report 1931,p. 21)

இந்துமத மடங்களுக்கு சிற்றூர்களைத் தந்தது இந்த ஒன்று மட்டுந்தானா? புஷ்பகிரி என்ற இடத்தில் உள்ள புஷ்பகிரி மடத்திற்கு திப்பு சுல்தான் இரண்டு சிற்றூர்களை தானமாக வழங்கியிருக்கிறார். (Praxy Fernandes, Storm over Seringa Patanam 1969, page 243) சிருங்கேரி மடத்திற்கும் கேரளத்தில் பல கோயில்களுக்கும் தீரன் திப்பு சுல்தான் வழங்கிய தானங்களை பற்றியும் இந்துக்களை அன்போடு நடத்தியது குறித்தும் கேரளத்தில் மட்டும் நாயர், நம்பூதிரிகள் திப்பு சுல்தானை எதிர்ப்பதற்கான காரணங்களை பற்றியும் அடுத்த கட்டுரையில் காண்போம்.

சிருங்கேரியின் பாதுகாவலன் திப்பு

துங்கா (துங்கை) வின் கடக்கரையில் மலைகளின் கீழ் அமையப்பெற்ற சிருங்கேரி என்ற திருத்தலத்திற்கு சிக்மகளூர் மாவட்டத்தில் கடூர் தாலுகாவின் பத்திராவதி நகரம் வழியாக ஷிமோகாவை அடைந்து, அங்கிருந்து பேருந்து மூலம் செல்லலாம். துங்கபத்ரை நதிக்கரையில் அமைந்துள்ள சிருங்கேரி என்றதும் சங்கராச்சார்ய சுவாமிகளும், ஆதிசங்கர பகவத்பாதான் நிறுவிய சாரதா பீடமும்தான் நினைவிற்கு வரும்.

காலடி எனும் ஊரில் பிறந்து அத்வைத சித்தாந்தத்தைப் பரப்பிய ஆதிசங்கரர் நிறுவியமடங்கள் நான்கு. ரிஷ்ய சிருங்கமுனிவர் வாசம் செய்ததால் 'ரிஷ்யா சிங்கா கிரி' என்ற பெயர் ஏற்பட்டு, நாளடைவில் சிருங்கேரி என்று இவ்வூர் பெயர் மருவியது. இந்த ஊருக்கு வந்த ஆதிசங்கரர் சாரதா தேவியைப் பிரதிஷ்டை செய்தார். தட்சிண தேசத்தில் 'சிருங்கோயில் ஸ்தாபிக்கப்பட்ட பீடம் தட்சிணாம்மையம்' எனவே இது தட்சிணாம்னாய ஸ்ரீ சாரதாபீடம் சிருங்கேரி என்று பெயர் பெற்றது. இந்துக்களின் வேதங்கள் நான்கு அதன்படி பீடமும் நான்கே.

யஜுர் வேதத்தின் பீடம் தெற்கே சிருங்கேரி

அதர்வன வேத பீடம் வடக்கே பத்ரிநாத்

ரிக்வேத பீடம் கிழக்கே பூரி

சாமவேத பீடம் மேற்கே துவாரகை

சங்கர பகவத் பாதாசார்யார் ஸ்ரீ ஜகத் குருவின் பரம்பரையைத் துவக்கி வைத்தவர் ஆவார். கி.பி. 1770 முதல் 1814 வரை மூன்றாம் சச்சிதானந்த பாரதி பீடாதிபதியாக இருந்தார்.இவர் காலத்தில்தான் திப்பு சுல்தான் சிருங்கேரி மடத்திற்கு பெரிதும் உதவினார்.

செ. திவான்

ஸ்ரீசச்சிதாநந்த பாரதீ காலத்தில் நடந்த வரலாற்று நிகழ்விற்கு வருவோம். மராத்தியார்கள் சிருங்கேரி மடத்தை தாக்கி, அழித்து சூறையாடிய நிகழ்வுதான் அது. மராட்டியர் வரலாறு குறித்து எத்தனையோ நூல்கள் சமகாலத்திலேயே வெளிவந்திருக்கின்றன. மராட்டிய வீரர் சிவாஜி குறித்து பேராசிரியர் ஜாதுநாத் அவர்கள் உள்ளிட்ட பலர் எழுதிய நூற்றுக்கணக்கான நூல்கள் உள்ளன. மகாதேவ் கோவிந்த் ரானடே, துளசி வத்சல், பரட்டுல் சந்திர குப்தா, சி.ஏ.கின்கெய்ட், கோவிந்த் சகாரம் சர்தேசாய், எஸ்.ஆர்.சர்மா போன்ற இன்னும் எத்தனையோ மராத்திய வரலாறு குறித்து எழுதிய ஆசிரியர்கள் சிருங்கேரிமடம் மராத்தியர்களால் தாக்குதலுக்குள்ளானதைப் பற்றியோ கொள்ளையிடப்பட்டது பற்றியோ சொல்லியிருக்கிறார்களா என்று அடியேன் தேடினேன். அடியேன் பார்வையில் அந்த முக்கிய நிகழ்வு அகப்படவேயில்லை, வரலாற்றில் எவ்வளவு மறைப்புகள்!

ஸ்ரீ மூன்றாம் ஸச்சிதானந்த பாரதீ ஆசார்யாள் சிருங்கேரிமடத்தின் பீடாதிபதியாக இருந்த போது மராத்தியர்களால் சிருங்கேரிமடம் கொள்ளையிடப்பட்ட தகவலை வெளி உலகம் அறிந்தது எப்படி?

கி.பி. 1916 ஆம் ஆண்டு மைசூரில் தொல்லியல் துறையில் இயக்குநராகப் பணியாற்றியவர் ராவ் பகதூர் கே.நரசிம்மாச்சார் கட்டு நிறைய கடிதங்களைக் கண்டெடுத்தார். (Reports of the Mysore Archaeological Department, 1916, page 10, 11). In 1916 Rao Bahadur K. Narsimhachar, the then director of Archaeology in Mysore, discovered a bundle of letters, in the temple of Sringeri (S.N.Sen, Studies in Indian History, Calcutta university, 1930 pages 155 to 169).

கே.நரசிம்மாச்சார் கண்டெடுத்த கடிதங்களின் கட்டு சிருங்கேரி கோயிலில் கிடைத்தவை ஆகும். அவை திப்புசுல்தான் ஆட்சியின் போது எழுதப்பட்ட முப்பது ஆவணங்கள் ஆகும். அதில் ஒன்றே ஒன்றைத்தவிர மீதி அனைத்தும் சிருங்கேரி மடத்தின் பொறுப்பில் இருந்தவை.

கி.பி.1791 ஆம் ஆண்டிலிருந்து 1798 ஆம் ஆண்டு வரையிலான அக்கடிதங்களில் மௌலூதி காலக்கணக்கிலும், அதற்கு இணையான இந்துக்கள் வழங்கும் தேதிகளும் குறிக்கப்பட்டிருந்தன. (Mohibbul Hasan Khan, History of Tipu Sultan,, 1951, page 355)

திப்புவின் கடிதங்கள் கையால் செய்யப்பட்ட காகிதங்களில் எழுதப்பட்டிருந்தன. இக்காகிதங்களின் நீளம் 39.2 செ.மீட்டர்,

அகலம் 14.5 செ.மீ. இதன்மேல் தங்கத்தில் சூரியன் சின்னமாக பதிக்கப்பட்டிருக்கிறது. இச்சின்னத்தின் நடுவில் அராபிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. காகிதத்தின் நிறம் ரோஜா நிறம் (ஜலஜா சக்திதாசன், திப்புசுல்தான் ஒரு மதவெறியரா? சென்னை, 1988 பக்கம் 48) மொத்தம் 47 ஆவணங்கள் அதில் 15 கடதாக்கள். (A.K.Sastry, History of Sringeri, Page 43)

திப்பு சுல்தான் சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சச்சிதானந்த பாரதீ சுவாமிகளுக்கு எழுதிய 21 கடிதங்களும், கடிதா என்று சொல்லப்படும் முக்கியத்துவம் வாய்ந்த ஏடுகளும் உள்ளன. (Introduction - XXVII, Selections from the records of Sringeri Mutt by late Mr. Rajakaye Prasaktha, B.Ramakrishna Rao, Mysore dated 30 september 1926, History of Sringeri, A.K.Sastry)

கி.பி.1791 இல் மராத்திய குதிரைப்படைத்தளபதி ரகுநாதராவ் பட்வர்த்தன் சிருங்கேரி மடத்தைத் தாக்கி கொள்ளையிட்டான்; பலர் கொல்லப்பட்டனர், எண்ணற்றோர் படுகாயமடைந்தனர். பிராமணர்கள் பலர் கொல்லப்பட்டும் படுகாயமும் அடைந்தனர். சிருங்கேரி மடத்தின் சொத்துகள் அபகரிக்கப்பட்டன. மடத்திலிருந்த புனிதப் பொருட்களை மதியாது தூக்கி எறிந்தான். பெண் கடவுள் சிலையான சாரதாவின் சிலையைத் தூக்கி எறிந்தனர். மடாதிபதி கரக்கலாவிற்கு தப்பி ஓடினார். அங்கு இருந்து கொண்டு ஸ்ரீ மூன்றாம் ஸச்சிதானந்த பாரதீ ஆசார்யாள் திப்புசுல்தானுக்கு சிருங்கேரியில் மராத்தியரால் இழைக்கப்பட்ட கொடுமைகளையும் கோவில் கொள்ளையிடப்பட்ட விவரத்தையும் தெரிவித்து கடிதம் எழுதினார். (மொஹிபுல் ஹசன்கான், முற்கூறிய நூல் பக்கம் 355)

உணர்வரிய மெய்ஞானம் ஓங்கு பெரும் பீடம் சிருங்கேரி வியாக்யான பீடத்தின் குருபரம்பரை வரலாறு கி.பி. 788 முதல் 1964 முடிய தமிழில் திண்டுக்கல் வக்கீல் பெ.கா.ஷண்முகநாதன் பிரபாகரன், 1966ல் ஸ்ரீரங்கம் வாணிவிலாஸ் பிரஸில் அச்சிட்டு வெளியிட்ட 208 பக்கங்களைக் கொண்ட நூலில் பக்கம் 81, 82ல் உள்ள விவரம் அப்படியே இதோ...

''ஹைதரலிக்குப்பின் திப்புசுல்தான் மைசூர் சிம்மாசனம் ஏறினான். அவன் மராட்டியர்கள், நைஜாம், ஆங்கிலேயர்கள் ஆகிய மூவரின் தாக்குதல்களுக்கு ஆளானான். இதுதான் மூன்றாவது மைசூர் யுத்தம் (1790–1792) அச்சமயத்தில் பரசுராம் பாவே என்பவன் பெத்நூர்மீது படையெடுத்தான். அவனுடைய சைன்யங்கள் பட்டவர்த்தன் தலைமையில் மூடத்தனமாக சிருங்கேரியைக் கொள்ளையடித்து. ஆலயங்களை

கொள்ளையிட்டது. புனிதமான ஸ்ரீசாரதா தேவியின் ஆலயத்திலும் புகுந்து சீர் குலைத்தது. இந்தக் கொள்ளையில் பறிபோன சொத்துக்கள் அறுபது இலட்சம் மதிப்புள்ளவை (1791ல் அறுபது இலட்சம், இப்போது எத்தனை எத்தனை கோடி!)

பிராம்மண புரோகிதர்கள் கொல்லப்பட்டனர். ஆசார்யாளுக்கு நேர்ந்த இந்த துர்பாக்கியத்துக்கு வருந்தி திப்புசுல்தான் ஓர் ஆறுதல் கடிதம் அனுப்பினார். அதில் புண்ய ஸ்தலங்களுக்கு ஊறு செய்யும் துஷ்டர்கள் விரைவில் தங்களுடைய அக்கிரமத்தின் பயனை அனுபவிப்பார்கள். சிரித்துக் கொண்டு பாபம் செய்கின்றவன் பொறுக்க முடியாத சித்திரவதைக்கு உள்ளாவான் என்ற மூதுரை பொய்க்காது. குருவுக்குச் செய்யும் அபச்சாரம், குடும்ப நாசத்தையும், சொத்தின் அழிவையும் இன்னும் சகல முறைகளிலும் நாசத்தையும் உண்டாக்கும் என்று திப்புசுல்தான் பீடாதிபதிக்கு அறுதல் கடிதம் எழுதி, ஆலயங்களைப் புனருத்தாரணம் (புதுப்பித்துக்கட்டுதல்) செய்வதற்கும், ஸ்ரீ சாரதாதேவி ஆலயத்துக்கு ஸம்பு ரோக்ஷணம் (சீர் செய்தல், ஆலயத்தை நீராட்டுதல்) செய்வதற்கும் நானூறு பொற்காசுகளும் அனுப்பிவைத்தான். அத்தோடு ஒரு பல்லக்கும், யானைகளையும், வஸ்திரங்களையும் திப்புசுல்தான் சிருங்கேரிக்கு அனுப்பிவைத்தான்.

கே.ஆர்.வெங்கட்ராமன் என்பவர் K.R.Venkatraman (Formerly Director of Public Instruction, Pudukkottai) 1959 A The throne of transcendental wisdom Sri Sankaracharya's Sarada Pitha in Sringeri எனும் ஆங்கில நூலை திருச்சிராப்பள்ளி 2 யுனைடெட் அச்சகத்தில் அச்சிட்டு 176 பக்கங்களில் வெளியிட்டுள்ளார் அதில் பக்கம் 77, 78ல் உள்ள செய்தியை அப்படியே தருகிறேன்.

Tipu, who succeeded Haidar, was opposed by the Marathas, the Nizam and the English. In the course of the campaigns of the 'Third Mysore War' (1790 - 1792), Parasuram Bhau marched towards Bednur. His hosts commanded by a Patwardhan foolishly plundered Sringeri, looted the temples and desecrated the holy shrine of Sarada (1791). The loot that was carried away was of the value of sixty lakhs of rupees. Brahman priests were killed in the affray. In a letter commiserating the Acarya, Tipu wrote; 'People who sin against such a holy place will at no distant date suffer the consequences of their misdeeds. People do evil smiling, but will suffer the penalty in torments of agony; this adage will be fulfilled. Treachery to gurus will lead to all round ruin, destruction of all wealth and the ruin of the family. He (Tippu) sent four hundred rahatis for the restoration of the temple and the reconsecration of the image of Sri Sarada together with a palanquin, elephants and clothes. (Selections from the Records of Sringeri mutt 47 to 50 and 59, Mysore Archaeological reports page 74, 75, 76)

மாரத்தியர்களால் சூறையாடப்பட்ட சிருங்கேரி மடத்தினை திரும்ப புனர் அமைத்திட உதவியது யார்? திப்புசுல்தான் அல்லவா! கோவிலுக்கு பொன்னும், மணியும் பொருட்களையும் அள்ளித்தந்த அந்த மாபெரும் சமயப் பொறையாளர் மீதா கரைச் சேற்றை வீசுகிறீர்கள், இது நியாயமா? சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் சரித்திரத்தை பாரதி காவலர் கே.ராமமூர்த்தி 1999ல் சென்னையிலிருந்து 335 பக்கங்களில் வெளியிட்டார். அதில் இரண்டாம் பாகத்தில் சிருங்கேரி ஸ்தல ஸ்ரீ சாரதாம்பாள் கோயில் வரலாறு வருகிறது என்று விளம்பரம் உள்ளது. அந்த நூல் அடியேன் பார்வைக்கு கிடைக்கவில்லை. அதில் இந்த வரலாறு பற்றி எழுதப்பட்டிருக்கிறதா என்பதை அறிய முடியவில்லை. சக்திதாசன் ஜலஜா 1965ல் சிர்ங்கேரி ஸ்ரீ சாரதாபீட வரலாறு என்ற நூலை 40 பக்கங்களில் தந்துள்ளார்கள். அதில் பக்கம் 25ல்

‘மைசூரை ஆண்ட ஹைதர்அலி, ஸ்ரீ சிர்ங்கேரி பீடாதிபதிகளிடம் அளவு கடந்த பக்தி கொண்டவர். ஒரு சமயம் சிர்ங்கேரி ஆச்சாரியார் புனா சென்றார். அப்போது யானை, குதிரை, ஒட்டகம், பல்லக்கு, பட்டுப் பீதாம்பரங்கள் முதலியனவும், பத்தாயிரத்து ஐந்நூறு ரூபாயும் காணிக்கையாக அளித்தார் ஹைதர். திப்புசுல்தான் ஆண்டபோது ஸ்ரீ சிர்ங்கேரி பீடாதிபதிக்கு 21 கடிதங்கள் எழுதியிருக்கிறார். சிர்ங்கேரி பீடத்திடம் திப்புவுக்கு இருந்த விசுவாசமும் குருபக்தியும் அவற்றால் நன்கு விளங்குகின்றன என்று குறிப்பிடுகிறார்கள்.

திப்புவையும், ஹைதர் அலியையும் தூற்றுவதற்கொன்ற எழுதப்பட்ட மைசூர் சரித்திரத்தில் (History of Mysore) மார்க் வில்க்ஸ், அவரை அறியாமலே இரண்டாவது தொகுதியில் (முதற்பதிப்பு 1810) (இரண்டாம் பதிப்பு 1989) பக்கம் 97ல் ‘Hyder’s more than half - Hindoo... ஹைதர் பாதி இந்துவாக உள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். அந்த அளவிற்கு ஹைதர் அலியும் சமயப் பொறையாளராக பிற மதத்தினரை மதிப்பவராக இருந்துள்ளார்.

ஒரு சமயம் ஆசார்யாள் பூனாவில் தங்கி விட்டபோது, தன் இருப்பிடமான ஸ்ரீ ரங்கப்பட்டணம் வந்துபோக வேண்டுமென்றும் திப்புசுல்தான் ஸ்ரீருங்கேரி பீடாதிபதியைக் கேட்டுக் கொண்டுள்ளார். அவரை அழைத்துவர ஒரு ரஹதாரியை அனுப்பி வைத்தார்.

ஸ்ரீ சங்கரவம்சம் (சிருங்கேரி ஸ்ரீசாராதாபீடம்) எனும் நூலான கே.எஸ்.குளத்து அய்யர் 1985ல் சென்னையிலிருந்து 169 பக்கங்களில் வெளியிட்டார். அதில் பக்கங்கள் 104, 105ல்

திப்புசுல்தான் காணிக்கை என்ற தலைப்பில் திப்புசுல்தான் சிருங்கேரி மடத்திற்கு, அனுப்பிவைத்த பல்லக்கு, யானை, காணிக்கை, சொத்துக்கள் பற்றிய தகவல் விரிவாக தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி ஓய்வுபெற்ற வக்கீல் ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் 1959ல் எழுதி வெளியிட்ட நூல் ஸ்ரீசாரதாபீடம். இதனைப் பிரசுரித்தது கோயமுத்தூர் சிருங்கேரி ஸ்ரீ சங்கரமடம் கட்டிட நிர்மாணஸமிதி. 1ரூபாய் 25 பைசா விலையில் வாணிவிலாஸ் பிரஸ் ஸ்ரீரங்கத்தில் அச்சிடப்பட்ட இந்த நூல் 110 பக்கங்களைக் கொண்டது. அதில் பக்கம் 46 மற்றும் 47ல் திப்புசுல்தான் மடத்திற்கு செய்த உதவிகள், நாற்பது நாள்களுக்கு தினம் ஆயிரம் பிராஹ்மணர்களுக்கு ஸந்தர்ப்பணம் செய்தது, புனாவில் இருந்து மடாதிபதியை திப்புசுல்தான் தனது சமஸ்தானத்திற்கு அழைத்தது ஆகிய செய்திகளை விரிவாகவே சொல்லியிருக்கிறார்.

மதுரையிலிருந்து நான்காம் தமிழ்ச் சங்க காலத்தில் வெளிவந்த இதழ் செந்தமிழ். இன்னும் அந்த இதழ் வந்து கொண்டிருக்கிறது. அதில் 1922 பிப்ரவரி மார்ச் இதழில் தொகுதி 20, பகுதி 4ல் பக்கம் 162, 163, 164ல் ஆர்.எஸ்.நாராயஸ்வாமி ஐயர் பி.ஏ.பி., பி.எல். மதுரை சிருங்கேரி மடம் என்ற கட்டுரை எழுதியுள்ளார். அதில் துவக்கத்திலேயே குறிப்பிடுவார். அடியேன் கண்ட கடிதங்கள் 18ம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டவை. அவற்றில் நமது தேச சரித்திரபுருஷர்களின் (திப்புசுல்தான்) அன்யோன்ய பாவனைகளும் (எல்லோரிடமும் நட்பு கொண்டு அன்புடன் நடத்தல்) சரித்திர ஆராய்ச்சிக்கு உதவியான விஷயங்களும் அடங்கியிருப்பதால் அவை இங்ஙனம் எழுதி வெளியிடப்பட்டன என்று குறிப்பிட்டு 7 கடிதங்கள் திப்புசுல்தானால் எழுதப்பட்டதை பிரசுரித்திருந்தார். அவை திப்பு சிருங்கேரி மடத்தின் மீது கொண்ட அன்பை பறைசாற்றுகின்றன.

மைசூர் ராஜ்யாதிபதி திப்புசுல்தான் அவர்கள் ஸ்ரீமத்தி பரமஹம்ச ஜகத் குரு சிருங்கேரி ஸ்ரீசச்சிதானந்த பாரதி ஸ்வாமிகள் அவர்களுக்கு மரியாதையுடன் கேட்டுக் கொண்ட பிரகாரம் ப்ரிஞ்சாரி முதலான கொள்ளைக்காரர் உபத்ரவம் (தொந்திரவு) செய்யாமற் காக்கும் பொருட்டு கொப்பம் தாலூகா அமுல்தாருக்கு (திப்புசுல்தானிடம் பணியாற்றுபவர்) உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடன் மடத்தின் பந்தோபஸ்துக்காக ஒரு சிப்பாய் பட்டாளமும் அனுப்பப்பட்டிருக்கிறது. கடிதம் நான்கில் திப்புசுல்தான் ஸர்தார்ஸயத் மஹமத்திற்கு கடிதம் எழுதி

மடாதிபதி சமுத்திர ஸ்நாநத்துக்குச் செல்வதால் 20 பேர்களை சகாயத்துக்காக (உதவிக்காக) அனுப்பும்படி உத்திரவிட்டதோடு ஸ்வாமிகளே விசாரணை செய்து கொள்ள உரிமையையும் வழங்கியுள்ளார்.

திப்பு சுல்தான் ஹிஜ்ரி 1219 (கி.பி.1791)ல் மைசூர் ராஜ்யத்தில் உள்ள கிலாதார்களுக்கும், அமுல்தார்களுக்கும் எழுதிய கடிதத்தில் சிருங்கேரி மடம்

சம்பந்தமான காரியமாய்ப் போய்வரும் ஜனங்களை ஹிம்சிக்கவே கூடாது (தொந்திரவு செய்யக்கூடாது) என்றும், சர்வ ஜாக்கிரதையாய் இருந்து வேண்டிய மரியாதைகள் செய்து, அவர்களுக்கு வழியில் வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்திட வேண்டும் என்றும் உத்திரவிட்டிருக்கிறார்.

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் வேங்கடத்துக்கு அப்பால் என்னும் நூலை 1984ல் சென்னையில் 456 பக்கங்களில் வெளியிட்டார். அதில் பக்கம் 100 ல் மைசூரை ஆண்ட திப்புசுல்தானும், அவனது தந்தை ஹைதர் அலியும் அவர்களது காலத்தில் மடபீடாதிபதியை மிகவும் கௌரவித்து வந்திருக்கின்றார்கள் என்று போற்றியுள்ளார்.

'Sringeri Souvenir' 1963ல் ஆறு ரூபாய் விலையில் சென்னையிலிருந்து வெளியானது. (Sringeri Temples Kumbhabhishekam souvenir, Smriti Ku Sumangali. Published by The Sringeri Souvenir Committee for The Akhila Bharata Sankara Seva Samiti Madras) 166 பெரிய சைஸ் பக்கங்களைக் கொண்ட நூல் அது. அதில் பக்கம் 69, 70, 71ல் வெளிவந்துள்ள ஆங்கிலக் கட்டுரை Sringeri Gurus and Muslim Rulers சிருங்கேரி குருமார்களும் முஸ்லிம் ஆட்சியாளர்களும். கே.ஆர். வெங்கட்ராமன் என்பவர் எழுதிய கட்டுரையில், மராத்திய பட்வர்த்தன் கொள்ளையிட்டதற்குப்பின் சிருங்கேரி மடத்திற்கு திப்புசுல்தான் 400 ராகிட்ஸ் தொகையை கோவில் பராமரிப்பிற்காக அனுப்பியதோடு, யானைகளையும் இதர பொருட்களையும் அனுப்பிவைத்தார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

Sringeri the Great Pilgrim Centre என்ற நூல் ஆங்கிலத்தில் பெங்களூரில் இருந்து 1997 ல் 60 பக்கங்களில் வெளியானது. எல்.என். சாஸ்திரி கன்னடத்தில் எழுதிய நூலைத் தழுவி எழுதியவர் அரய்யா. அந்த நூல் பக்கம் 25ல் Once the Maratha General Parasuram Bhavu laid siege to Sringeri. The mutt and the temples were looted. He took away much health. (அறுபது இலட்சம் மதிப்பு கொள்ளை போது) He was guilty of killing Brahmins and breaking the idols.

Tipu sultan sent financial and material aid to Sringeri for the reconstruction of the temples and restoration of worship.

திப்புசுல்தான் சிருங்கேரி கோயில் திரும்ப எழுந்திட பொருளாதார மற்றும் தளவாடச் சாமான்களை வழங்கி உதவியதை இந்த நூல் தெரிவிக்கிறது. சேலம் இரா.இராஜேஸ்வி ஸ்ரீ சிருங்கேரியில் வெளியிட்ட உலகம் போற்றும் சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடம் எனும் நூலில் (2000) பக்கம் 7ல் முப்பதாவது பீடாபதியதியான மூன்றாம் ஸ்ரீ சச்சிதானந்த பாரதி சாமிகளிடம் ஹைதர் அலியின் மகன் திப்புசுல்தான் மிகுந்த மரியாதை வைத்திருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

திப்புசுல்தான் எழுதிய 21 கடிதங்களையும் ஜலஜா சக்திதான் திப்புசுல்தான் ஒரு மதவெறியரா? என்ற 1988ல் வெளியிட்ட நூலில் பக்கம் 51 முதல் 86 வரை விரிவாகவே சொல்லியுள்ளார். அதனைத் தொடர்ந்து எஸ்.எம்.இதாயத்துல்லா இந்து சமயமும் திப்புசுல்தானும் சங்கராச்சாரியார் அவர்களுக்கு எழுதிய கடிதங்களுடன் என்னும் நூலை 2001ல் வெளியிட்டுள்ளார். அதிலும் கடிதங்கள் முழுமையாக வந்துள்ளது (ஆர்வமுள்ளவர்கள் அந்த நூலை தேடி எடுத்து வாசித்துக் கொள்வீர்களாக)

ஒருமுறை திப்புசுல்தான் மராட்டியர்களுடன் சமரசம் பேசிட சிருங்கேரி சுவாமிகளையே தனது தூதுவராக அனுப்பி வைத்துள்ளார்.

திப்புசுல்தான் 1790ல் தமிழகப் படையெடுப்பின் போது கோபூர் கோவிலை (காஞ்சிபுரம்) கட்டிமுடிப்பதற்கு 10,000 பொன் வழங்கியுள்ளார். இக்கோயில் கட்ட அடிக்கல் நாட்டியவர் ஹைதர் அலி. (1780ல்) அத்தோடு அக்கோயில் விழாவில் நடைபெற்ற தேர்த்திருவிழாவிலும் வாணவேடிக்கை நிகழ்ச்சிகளிலும் திப்புசுல்தான் பங்கேற்றார். பிராமணர்களுக்கும் பெரிதும் உதவியுள்ளார். இதோ இது குறித்து கே.ஆர். வெங்கட்ராமன் தரும் தகவல்...

In 1792, from the camp in Kanchi Tippu invited the Jagadguru to supervise the elaborate ceremonies he had then arranged in the temples with the help of Brahmin priests. (Sringeri souvenir, 1963, கே.ஆர். வெங்கட்ராமன் கட்டுரை பக்கம் 71)

காஞ்சிபுரத்திற்கு சென்றாலும் சரி, மைசூர் சாம்ராஜ்யத்தில் உள்ள ஆலயங்கள் சென்றாலும் சரி, சிருங்கேரி மடம் ஆனாலும் சரி மதவித்தியாசமின்றி ஹிந்துக்களையும் இந்துக் கோயில்களையும் காத்திட உதவியவர் திப்புசுல்தான்.

இப்போது சொல்லுங்கள் திப்பு மதவெறியரா?

நாயர் நம்பூதிரிகளை இம்சித்தாரா திப்பு?

இந்திய வரலாறு பாலர் பாதிப்பு ஷ௵லாதர் ஆங்கிலத்தில் எழுதிய நூல் 1960 ஆகஸ்டில் பிரதமர் பண்டித நேருவின் சிறப்புரையோடு வெளிவந்தது. அந்த நூலின் கையெழுத்து பிரதியை சரிபார்த்து அறிய ஆலோசனைகள் வழங்கியவர்கள் டாக்டர் தாராசந்த், ஸ்ரீ.ஆர்.பி.நாயக், பேராசிரியர் ஹுமாயூன் கபீர். அதில் உள்ள ஒரு தலைப்பு வீரத்தந்தையும் தீர மகனும். அது ஹைதர் அலி, திப்பு சுல்தான் பற்றியது. அந்த நூல் 268 பக்கங்களை கொண்டது. அதில் பக்கம் 177 இல் உள்ள வரிகள் இதோ...

ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் நல்ல அரசர்கள். மதவித்தியாசம் இன்றி குடிமக்கள் எல்லோருக்கும் நன்மை செய்வதற்கு அவர்கள் முயன்றார்கள்.

மதவித்தியாசமின்றி மாற்றோருடன் நடந்து கொண்ட மன்னர் திப்பு சுல்தான் மீது அண்மைக் காலத்தில் எவ்வளவு களங்க சேற்றை வாரி இறைக்கின்றனர்.ஆங்கிலேயே ஆசிரியர்கள் அன்று செய்தது போல!

1893 செப்டம்பர் 11 இல் அமெரிக்காவில் நடைபெற்ற் சர்வசமயம் பேரவையில் விவேகானந்தர் கலந்து கொண்டார். அதற்கு முன்பு 1893 ஆகஸ்ட் இறுதியில் ‘அனிஸ்குவாம்’ என்ற ஊரில் பேராசிரியர் ஜே.எச். ரைட் (இவர்தான் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வ சமய பேரவையில் கலந்து கொள்வதற்கு அறிமுக கடிதம் கொடுத்தவர்.) இல்லத்தில் தங்கி இருந்தார். அப்போது அங்கு நடைபெற்ற கலந்துரையாடலின் போது விவேகானந்தர் சொன்னார்,

இந்திய மக்களின் உரிமைகளைப் பறிக்க வேண்டுமென்று ஆங்கிலேர்கள் மிருகங்கள் ஆகி விட்டார்கள்... அன்பு பேச்சுக்கள் அவர்கள் உதடுகளில் இருக்கும். ஆனால் அவர்கள் உள்ளமோ தீமைகள், எல்லா விதமான கொடுமையான

செயல்கள் ஆகியவற்றைத் தவிர வேறு எதையும் அறியாது. என் சகோதரனே,நான் உன்னை நேசிக்கிறேன் உன்னிடம் நான் அன்பு காட்டுகிறேன் என்று சொல்லிக் கொண்டே கழுத்தை அறுத்து விடுவார்கள். அவர்களுடைய கைகளோ இரத்தம் தோய்ந்த கைகளாக இருக்கும்.

இந்துக்கள் நமக்கு என்ன கொடுத்திருக்கிறார்கள்? அவர்கள் நமக்கு கோயில்களைக் கொடுத்தார்கள். முஸ்லிம்கள் நமக்குக் கொடுத்த செல்வம் என்ன? அவர்கள் நமக்கு அழகான அரண்மனைகளை அளித்தார்கள். ஆங்கிலேர்கள் நமக்குக் கொடுத்த செல்வம் என்ன? என்று ஒருவர் கேட்க அவர்கள் நமக்கு விட்டுப் போன செல்வம் குன்றுகள் போலத் தோன்றும் உடைந்த சாராயபாட்டில்கள் தான். ஆங்கிலேர்கள் கோடிக்கணக்கணக்கில் பணத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டார்கள்! ஊர் ஊராக, மாவட்டம் மாவட்டமாக எங்கள் மக்கள் பசியால் துடிக்கும் போது இவர்கள் தகாத தீய செயல்களைச் செய்யலாமா? என்று விவேகானந்தர் கேட்டார். *(சுவாமி கமலானந்தர் ,சுவாமி விவேகானந்தர் பற்றி மகாகவி பாரதியார் கூறியவை பாகம் 1ஸ்ரீ இராமகிருஷ்ன மடம், மயிலாப்பூர், சென்னை 4. முதல் பதிப்பு 2014 பக்கங்கள் 281, 282, 283, 284)*

சுவாமி விவேகானந்தர் கூறியது போன்று வெள்ளையர்கள் வெறும் சாராய பாட்டில்களை மட்டுமே விட்டுச்செல்லவில்லை. இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ்ந்து சேர்ந்து விடக்கூடாது என்பதற்காக வரலாற்றில் பல்வேறு கட்டுக் கதைகளையும் எழுதிவிட்டுத்தான் சென்றார்கள்.

அப்படி அவர்கள் எழுதிய, எழுதி வைத்த வரலாறுதான் கேரளாவின் மலபாரில் நாயர், நம்பூதிரிகளையும் கேரளா கோயில்களையும் திப்பு சுல்தான் அழித்தொழித்தார் என்று!

இதில் உண்மை என்ன?

இது குறித்து மிக மிக விரிவாகவே நாம் வரலாற்றில் அலசி ஆராய்ந்திட வேண்டிய அவசியமான காலகட்டத்தில் இருக்கிறோம்.இதோ இது குறித்த வரலாற்று உண்மைகள்...

லலிதாம்பிகா அந்தர்ஜனம் (1902–1987)

கேரளத்தில் கொட்டாரக்கரை எனும் ஊரில் கோட்டயத்து இல்லத்தில் கே.தாமோதரன் போற்றி செங்நாரப்பள்ளி ஆரிய தேவி தம்பதிகளுக்கு 1909 மார்ச் 30 இல் நம்பூதிரி குடும்பத்தில்

பிறந்தவர் லலிதாம்பிகா அந்தர்ஜனம் (நம்பூதிரி இல்லத்து பெண்). இல்லத்தில் வைத்து கல்விகற்றவர் ஆழமான சமுதாய பிரச்சனைகளை வலுவான ரீதியில் எடுத்து வைத்தவர். இவரது 'ஆத்யத்தை கதைகள்' (முதல் கதைகள்) 'மூடுபடத்தில்' (முகத்திரையில்) 'தகர்ன்ன தலமுற' (தகர்ந்த தலைமுறை) 'கொடுங்காற்றில் நின்று' (புயலிலிருந்து) 'கிளிவாதிலூடே' (சாணரம் வழியாக) 'காலத்திண்டே ஏடுகள்' (காலத்தின் ஏடுகள்) 'இருப்பது வருசத்தினு சேஷம்' (இருப்பது வருஷத்திற்கு பின்னர்) கதைகள் ஆகும். 'நிசப்த சங்கீதம்', 'லலிதாஞ்சலி' 'சரணமஞ்சரி' பாவதீப்தி ஆகியவை கவிதைகள் ஆகும். குழந்தைகளுக்கான நாவல் கிராம பாலிகா.

1977 இல் 20ஆயிரம் ரூபாய் வயலார் பரிசு பெற்ற இவரது நாவல் 'அக்னி சாட்சி'. கேரளா சாகித்திய அகாடமி பரிசு, ஓடக்குழல் பரிசு, மத்திய சாகித்திய அகாடமி பரிசு இப்படி பல பரிசுகளை பெற்ற நாவல் அக்னி சாட்சி. (நீல. பத்மநாபன், தற்கால மலையாள இலக்கியம், சென்னை 1985, பக்கம் 126) நம்பூதிரி சமூகத்தின் புகழ்மிக்க படைப்பாளிகளில் ஒருவரான லலிதாம்பிகா அந்தர்ஜனம் எழுதிய அக்னி சாட்சி மலையாள நூலை வசந்தி சங்கர நாராயணன் கேரளா சாகித்திய அகாதமி திருச்சூர் சார்பில் 1980இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 154 பக்கங்களில் வெளியிட்டார். அதனை தமிழில் சிற்பி பாலசுப்ரமணியம் மொழி பெயர்த்து 1998 இல் வெளியிட்டார். சாகித்திய அகாடமியில் 2016 இல் அந்த நூல் மறுபதிப்பு செய்யப்பட்டது.

நம்பூதிரி சமூகப் பெண்களின் அவலங்களை சித்தரிக்கும் மிகச் சிறந்த கலைப் படைப்பு இந்த நூல். நம்பூதிரி பெண்களில் அவலநிலையை அப்பட்டமாக நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது இப்புதினம். 1970களில் எழுதப்பட்ட இந்த நாவலில் லலிதாம்பிகா அந்தர்ஜனம் குறிப்பிடும் நம்பூதிரி பெண்களின் அவலங்களைப் பற்றிய சில பகுதிகள் இதோ...

''கன்னிப்பெண்கள் தம்புரான்களோ, நம்பூதிரிகளோ வருவதற்கு காத்துத் தவமிருந்தார்கள். மானம் பள்ளி அப்பன் நம்பூதிரி நாயர் குடும்பத்தைச் சேர்ந்த அம்மாளுக்குட்டியைக் கண்டு ஆசைப்பட்டார். அப்பன் நம்பூதிரிக்கு நாற்பது வயது தாண்டியிருந்தது.அம்மாளு அம்மாவுக்கோ பதினேழு வயது. (முன் குறிப்பிட்ட ஆங்கில நூல் பக்கம் 24).

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒழுக்கம் கெட்டவள் என நம்பூதிரி பெண் ஒருத்தி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டாள்.கேட்டவர் திடுக்கிடும் உள்ளம் அவள் தன்னோடு பாலுறவு கொண்ட நம்பூதிரி பெரியவர்களின்

பட்டியலைச் சொன்னாள். (முதற் கூறிய ஆங்கில நூல் பக்கம் 59) இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் நம்பூதிரிகளின் ஒழுக்கக்கேடுகள் இவ்வாறு இருந்தது என்று அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற பெண் எழுத்தாளரே தனது 'அக்னி சாட்சி' நாவலில் அம்பலப்படுத்துகிறார்.

மலையாள இலக்கிய உலகில் தலையாய ஒரு பெரும் புரட்சியை உருவாக்கியவர் சந்து மேனன். கேரளத்தில் உள்ள எடப்பாடி சந்து நாயர் கொடுங்கலூர் பார்வதி அம்மாள் மகளுக்குப் பிறந்தவர். 9.1.1847 இல் பிறந்த இவரது வாழ்வு 7.9.1899 இல் முடிந்தது.

தலைச்சேரி நீதி மன்றத்தில் ஆறாவது எழுத்தர், 1871 இல் கள்ளிக்கோட்டையில் தலைமை முன்சீப். மலபார் மாவட்ட நடைமுறை நூல் எழுதிய வில்லியம் லோகானுக்கு உதவி புரிந்தவர். மஞ்சேரி, பாலக்காடு, கள்ளிக்கோட்டை, ஒத்தப்பாலம், பரபனங்காடியில் பணியாற்றியவர். கி.பி.1890 இல் மலபார் திருமண ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அதில் சர்.டி. முத்துசாமி அய்யர், சர் சங்கரன் நாயர். தலை சிறந்த இந்த அறிஞர்களுடன் இவரும் நியமிக்கப்பட்டார். அப்போதுதான் கேரளத்தில் நாயர் குடும்பங்களின் திருமண முறை பற்றி விரிவாக எழுதி அதில் மாற்றம் தேவை என்று குறிப்பிட்டார்.

அப்புநெடுங்காடு என்ற முதல் மலையாள நாவலை 1887இல் எழுதியவர் குண்டலதா. இது மலையாள மொழியில் எழுதப்பட்ட நூல் அவ்வளவுதான். இதில் வரும் பாத்திரங்கள் மலையாளிகள் அல்லர், கதையும் மலையாளத்திற்கு வெளியே நடந்தது. கி.பி.1890 ஜனவரியில் சந்து மேனனின் 'இந்து லேகா' நாவல் வெளிவந்தது. மார்ச் மாதத்திற்குள் முதல் பதிப்பு விற்றுத் தீர்ந்தது. 1956க்குள் 53 பதிப்புகள் கண்ட இதன் சிறப்பை நீங்களே அறிந்து கொள்ளலாம்.

இந்த நாவல் சுருக்கத்தை பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை 1951 இல் 62 பக்கங்களில் வழங்கினார். பின்னர் அதை 224 பக்கங்களில் அவரே விரிவாகத் தந்தார் என்றாலும் இந்த நாவலின் மலையாள மூலத்தை தமிழில் இளம் பாரதி தந்தது. 1994ல் 475 பக்கங்களில் 20 அத்தியாயங்களை கொண்ட இந்த நாவலில் 11 வது அத்தியாயத்தில் நம்பூதிரிப்பாடைப்பற்றி மக்கள் பேசிக்கொண்டது வருகிறது. இவர் (நம்பூதிரிபாடு) மகா ஏமாத்துப் பேர்வழி, ஒரு இருபது பொம்பளைகளோடு இப்போது தொடர்பு உண்டு. இந்த ரெண்டு மாசத்திலேயே ரெண்டு பொம்பளைங்க' (இந்துலேகா, 1994 பக்கம் 194)

நம்பூதிரிபாடு: நான் வந்தப்போ கீழே வந்திருந்தே இல்லே? பார்த்த மாதிரி இருந்தது என்று சொல்லி கன்னம் கவிந்து நீண்டதாக ஒரு புன்னகை புரிந்தார்.

இந்துலேகா: நான் அப்போது கீழே இல்லை 'நான்' என்று பேசத் தொடங்கியதும் நம்பூதிரிபாடு விதிர்த்துப் போனார். ஒரு நாயர் பெண் தன்னுடன் இப்படி சரிக்கு சரி இது வரை பேசியதில்லை (நூல் பக்கம் 200) இது 1890ல் சந்துமேனன் காட்டும் இந்துலேகா நாவல் தரும் கேரள நாயர் பெண்களின் உரிமையற்ற நிலை. 19ஆம் நூற்றாண்டில் இறுதியில் இதே காலகட்டத்தில் வெளிவந்த நூல் Hindu Manners, customs and ceremonies by Abbe J.A. Dubois. Edited with notes, corrections and biography By Henry K. Beauchamp, Fellow of the University of Madras, Fellow of the Royal Historical Society, Member of the Royal Asiatic Society with a prefatory note by Hon. F. Maxmueller and a portrait, Third Edition, Oxford, 1906.

இந்த நூலின் முதல் பதிப்பு 1897 இல் வெளிவந்தது. இதே ஆங்கில நூலை ஜி.யூ. போப் சில திருத்தங்களுடன் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். A description of the character, manners and customs of the people of India and their institutions, religious and civil. Abbe J.A.Dubois. Translated from the French manuscript with notes, corrections and additions by Rev.G.U.Pope, Third Edition, AES New Delhi, 1989. 1879 இல் சென்னை ஹிக்கின் பாதம்ஸ் இந்த நூலின் மூன்றாவது பதிப்பை வெளியிட்டது. அதன் பிரதியை அப்படியே 1989 இல் AES Asian Education Services நிறுவனம் தந்தது.

என்னப்பா ஒரு புத்தகம் வெளிவந்தது பற்றி இப்படி வளவள என்று எழுதுகிறாயே என்று எண்ணி விடாதீர்கள். முதலில் சொன்ன Henry K. Beauchamp நூலில் சில முக்கியப் பகுதிகளை பிந்தைய G.U. Pope நூல் நீக்கி விட்டது என்பதற்காகத்தான் இரண்டு பதிப்புகளைப் பற்றி விளக்கமாகச் சொன்னேன். அந்த நூல் என்ன? எழுதியவர் யார்? சற்று விரிவாகவே பார்ப்போம். இந்திய மக்கள் பழக்க வழக்கங்கள் சடங்குகள் நிறுவனங்கள் அபே.ஜெ.எ. .துபுவா விளக்கக் குறிப்புகள், திருத்தல்கள், சேர்க்கைகள், ஜி.யூ.போப். தமிழாக்கம் வி.என்.ராகவன். அலைகள் வெளியீட்டகம், சென்னை 2008ல் 454 பக்கங்களில் 230 விலையில் வெளியிட்டது.

அபே ஜெ.எ.துபுவா பிரஞ்சுப் பாதிரியார். இந்த நூலை ஆங்கி மாக்கியவர் ஹெச்.கே.பீன் காம்ப் இதற்கு உதவியர் சென்னை சி.வி.முனிசாமி ஐயர். 1906இல் மூன்றாவது பதிப்பாக

வந்த நூல் 741 பக்கங்களை கொண்டது. முதல் பதிப்பு 1807 இல் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் வெளியிட்டுள்ளது. ஆனால் ஜி.யூ.போப்பின் மொழிபெயர்ப்பு 1816 இல் வெளிவந்தது. 1862 இல் இரண்டாவது பதிப்பு. மூன்றாவது பதிப்பு 1879. இந்த நூலில் பல பகுதிகள் நீக்கப்பட்டுள்ளது. இரண்டு பதிப்பகத்தாலும் நீக்கப்படாத பகுதிகள் சொல்கின்ற விஷயங்கள் இதோ.

'நாயர்கள் என்று அழைக்கப்படுவோரை மலபார் மாவட்டம் தவிர வேறெங்கும் காணமுடியாது. இந்த வகுப்பினரின் பெண்கள் பல கணவன்மார்களை திருமணம் செய்ய முடியும். போப் மொழி பெயர்த்த நூலில் இதன் ஆங்கிலம் I am not aware, for example that the very remarkable caste of Naymars or Nayars in which the women enjoy a plurality of husbands is to be found anywhere but in the forest of the coast of Malabar" (Page 3)

plurality பேரெண்ணிக்கை, கூட்டம், திரள். சென்னை பல்கலைக்கழகம் அகராதி பக்கம் 748)

Henry K. Beauchamp நூல் பக்கம் 16 முன் சொன்ன போப் மொழிபெயர்த்த நூலில் நீக்கப்பட்ட பகுதி இதோ,

Amongst these same people, again, is another distinct caste called Namboodiri which observes one abominable and revolting custom. The girls of this caste are usually married before the age of puberty, but if a girl who has arrived at an age when the signs of puberty are apparent happens to die before having had intercourse with a man, caste custom rigorously demands that the inanimate corpse of the deceased shall be subjected to a monstrous connexion. For this purpose the girl's parents are obliged to procure by a present of money some wretched fellow willing to consummate such a disgusting form of marriage; for were the marriage not consummated the family would consider itself dishonoured. (Pages 16&17)

நம்பூதிரி என்ற ஒரு வகை சாதியினர் வெறுக்கத்தகுந்ததும் அதிர்ச்சியூட்டும் ஒரு வழக்கத்தை கடைப்பிடிக்கிறார்கள். இந்தச் சாதியைச் சேர்ந்த பெண்கள் பருவம் அடையும் முன்பே திருமணம் செய்விக்கப்படுகிறார்கள். ஆனால்,ஒரு பெண் பருவமடைந்தற்கான அறிகுறிகள் காணப்படும் வயது வந்து யாருடன் உடலுறவு கொள்ளாத நிலையில் இறக்க நேரிட்டால் அந்த இறந்த பெண்ணின் உயிரில்லாத சடலம் அரக்கத்தனமாக தொடர்புக்கு ஆளாகாக்கப்படவேண்டும் என்பது அந்த ஜாதியின் கடுமையான வழக்கமாகும். இதற்காக அப்பெண்ணின் பெற்றோர் இந்த வெறுப்பூட்டத்தக்க திருமணத்தை

நிறைவேற்ற விருப்பமுள்ள ஏழை எவனையாவது பணம் கொடுத்து வரவழைக்கிறார். ஏனெனில் இந்தத் திருமணம் இப்படி நிறைவேறவில்லையெனில் அவர்களின் குடும்பமே அவமதிப்பிற்குள்ளாகும். (இந்துக்களின் பழக்க வழக்கங்களும் சடங்குகளும். மூலம் அ.பே.டியுபா உரை தமிழ் மணி, சீதை பதிப்பகம் சென்னை, 2012 பக்கம் 7,8)

அ.பே. டியுபா இன்னும் எழுதுகிறார்,

I have seen Brahman women on the coast of Malabar, who together with the women of other castes of that country, always appeared with their bodies half naked

மலபார் பிரதேசத்தில் பிராமண பெண்களும் வேறு சாதிப் பெண்களும் தங்கள் உடல் பாதி நிர்வாணமாகவே வைத்துள்ளனர். இடுப்பு வரை உடலை மூடுவதில்லை. (டியுபாவின் நூல், வி.என். ராகவன் மொழிபெயர்ப்பு பக்கம் 208) அ.பே.டியுபா தனது நூலில் கூறிய செய்திகளை உண்மை என்பதற்கு சான்று திருக்குறளிலேயே உள்ளது.

''பொருட்பெண்டிர் பொய்ம்மை மயக்கம் இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇ அற்று'' (913)

இந்த குறளுக்கு தமிழ் மரபுரைத்த மொழி ஞாயிறு தேவநேப்பாவாணர் கீழ்கண்டவாறு விளக்கம் தருகிறார்.

'இதே மக்களிடையே இனி அருவருப்பானதும் வெறுப்புண்டு பண்ணுவதுமான ஒரு வழக்கத்தைக் கொண்ட நம்பூதிரி என்னும் ஒரு தனிக்குலமே உள்ளது. இக்குலப்பெண்கள் வழக்கமாக பூப்படையும் முன் மணஞ் செய்து வைக்கப்படுகின்றனர். ஆயின் பூக்குறிகள் வெளிப்டையாகத் தோன்றும் பருவத்தை அடைந்த பெண் ஆடவனோடு கூடுமுன் இறக்க நேரின் அவள் சவ உடம்பைப் பேய்த்தனமாக புணர்ச்சிக்குட்படுத்த வேண்டுமென்பது கண்டிப்பான குலமரபாம். இதன் பொருட்டு அப்பெண்ணின் பெற்றோர் அத்தகைய அருவருப்பான மண வகையை முற்று வித்ததற்கு இசையும் ஒரு வெங்கப்பயலைப் பணப் பரிசு கொடுத்து அமர்த்த வேண்டுயுள்ளது.ஏனெனில் அம்மணம் முற்றுவிக்கப்பெறாவிடில் அக்குடும்பம் தன்மானத்தை இழந்து விட்டதாக கருதிக் கொள்ளும் இந்த பழக்கம் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நின்று போயிருக்கலாம். ஆனால் 18 ஆம் நூற்றாண்டில் 19 ஆம் நூற்றாண்டில் அது இருந்திருக்கிறது.

இந்திய ஆரியப் பூசாரியாக முதற்காலத்தில் பல அருவருப்பான சடங்குகளை ஆற்றிவந்தமை சென்ற நூற்றாண்டில் மார்க்க

சகாய ஆசாரியர் வெளியிட்ட சித்தூர் அதாலத்துக் கோர்ட்டுத் தீர்ப்பு என்றுஞ் சுவடியினின்று தெரியவருகிறது என்று நம்பூதிரிகளின் ஒருவகுப்பான கொடிய வழக்கம் இருந்ததை தேவநேயப் பாவாணர் உறுதிப் படுத்துவார்.

72பக்கங்களில் 1818 டிசம்பரில் வெளிவந்த நூல் சித்தூர் ஜில்லா அதாலத்து கோர்ட்டாருடைய தீர்மான அசலுக்கு சரியான நகல் என்று வந்தது டேக்கர் துரை கொடுத்த தீர்ப்பு இது.

மதுமாமிச பஷ்ணம்

லாகிரியிருலே ஸ்மாரகந்தப்பி ஆணும் பெண்ணும் ஏகமாய் விழுந்து கிடப்பார்கள். அந்தச்சமயத்திலே விப்பிரராகிய குருக்கள் எந்தஸ்திரியை அனுபவித்தாலும் தோவிமில்லையென்று வியாச பகவான் தர்ம சாஸ்திரத்திற்கு சொல்லியிருக்கிறார் என்று தனக்கு இஷ்டமான ஸ்திரீகளை அனுபவிப்பார்கள் (பழைய நூல் பக்கம் 42) தென்னிந்தியகுலங்களும் குடிகளும் என்ற நூலை எழுதியவர் எட்கர் தர்ஸ்டன். ஏழு தொகுதிகளைக் கொண்ட அந்த நூலில் அதில் ஐந்தாவது தொகுதியில் நாயர்கள் நம்பூதிரிகளைப்பற்றி விரிவாக எழுதியுள்ளார்.

கி.பி. 1885 இல் சென்னை அருங்காட்சியகத்தில் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட இவர் தென்னிந்தியாவின் சாதிகள் குறித்து விரிவாகவே எழுதியுள் ளார்.1909களில் அது ஆங்கிலத்தில் வெளிவந்தது. அதனை தமிழில் 1986ல் இருந்து தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் தொடர்ந்து வெளியிட்டது. க.ரத்னம் மொழிபெயர்த்தார். ஆங்கில நூலில் 5வது தொகுதியில் 152 வது பக்கம் முதல் 241 வது பக்கம் வரை நம்பூதிரி பிராமணர் பற்றிய குறிப்புகளும் தமிழ் நூலில் 160 வது பக்கம் முதல் 247 வது பக்கம் வரையிலும் பார்க்கலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஹாமில்டன் ‘நம்பூதிரிகள் சமயம், அரசு ஆகிய இரு துறைகளிலும் மேலாண்மை உடையவர்களாக விளங்குவதோடு, சிலர் சமயத் தலைவர்களாகவும் ஆட்சித்தலைவர்களாகவும் ஒருங்கே செயல்படுகின்றனர் என கூறியுள்ளனர். (A New Account of the East Indies 1744)’ மணமாகாதவர்களாக இறக்கும் நம்பூதிரி சிறுமியரும் பெண்களும் திருமணத்தின் சாயல் ஏதும் அவர்கள் மீது படாதபடி இவ்வுலகத்தை விட்டுச் சென்று விட அனுமதிக்கப்படுவதில்லை. நம்பூதிரிகளிடையே குழந்தை மணம் வழக்கில்லை என்று உறுதியாக கூறுவதற்கு இல்லை. நம்பூதிரி சிறுமியர் பூப்படையும் முன்

திருமணம் செய்விக்கப்படுகின்றனர். ஓரிரு திருமணங்கள் குழந்தை மணங்களாக நடைபெற்றுள்ளன என்று நீதிபதி கே.நாராயணமாரார் கூறியுள்ளார். (Mr. Justice K.Narayana Marar, Malabar Quarterly Review I, 1,1902)

நம்பூதிரிகள் ஒரு திருமணத்தில் உறுதியாக நிற்பவர்கள் அல்லர். ஓர் ஆண் நான்கு மனைவியர் வரை மணந்து கொள்ளலாம் எனச்சிலர் கூறுகின்றனர். ஒருவன் நாயர் பெண்களுடன் கொள்ளும் உறவிற்கு வரையறை ஏதுமில்லை.

Edgar Thurston, Castes and Tribes of Southern India,Volume 5,page 210) பதினேழாம் நூற்றாண்டில் இறுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மலபாரில் நிலை எவ்வாறு இருந்தது என எழுதும் ஹெமில்டன் கூறுவதாவது ”சாமோரின் மணம் புரிந்து கொள்ளும் போது மணமகளோடு ஒரு நம்பூதிரி அல்லது தலைமை பூசாரி உடலுறவு கொண்ட பிறகே அவர் உடலுறவு கொள்வார். அவர்கள் விரும்பினால் மூன்று நாள் வரை கூட சாமோரின் மணமகளோடு உடலுறவு கொள்ள அனுமதிக்க படுவர். தான் வணங்கும் தெய்வத்தின் அருளைப் பெற்றதாக தன் மனைவியின் கருவில் தங்கும் கரு அமைய வேண்டும் என்பதே இதற்கான காரணமாகும். அரசவையைச் சேர்ந்த பெரிய மனிதர்களும் சிலரும் பூசாரிகளுக்கு தங்கள் அரசரைப் போலவே இத்தகைய உரிமைகளை வழங்குவர். சாதாரண மக்கள் இத்தகைய மரியாதையினைத் தராதவர்களாகத் தாங்களே அப்பணியினை மேற்கொள்கின்றனர். (தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி ஐந்து, ஆங்கில மூலம் எட்கர் தர்ஸ்டன், தமிழாக்கம் முனைவர் கே. ரத்னம் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், 2003,பக்கம் 2018), (முற்கூறிய ஆங்கில நூல் பக்கம் 210, 211)

Madras Government Museums Bulletin Vol III, No 1 Anthropology Nambutiris, Notes on some of the people of Malabar, Fred Fawcett, AES 2001 page 66,67 இந்த நூலின் முதற் பதிப்பிலும், 1900 மெட்ராஸ், இதே கருத்து கூறப்பட்டுள்ளது. எட்கர் தர்ஸ்டன் நூலில் (ஆங்கிலம்) நாயர்களைப் பற்றி 283 வது பக்கம் முதல் 413 வது பக்கம் வரை விரிவாகவே தந்துள்ளார். தமிழ் மொழிபெயர்ப்பில் 290 வது பக்கம் முதல் 411 வது பக்கம் வரையில் அது உள்ளது.

தமிழ் நூல் பக்கம் 318 இல் நம்பூதிரிப் பிராமணர்கள் திருமணம் புரிந்து கொள்ளாதவர்களாக நாயர் சாதிப் பெண்கள் அனைவரோடும் உடல் உறவு கொள்ளும் பழக்கம் உடையவர்கள். உயர்ந்த சாதியராக போர்த்துக்கீசியர் கருதிப்

போற்றி வந்த பிராமணர்களுடைய இந்த உரிமையைப் பற்றி அவர்கள் எல்லா வகைப் பெண்களுடனும் குடித்துக் களித்து கூத்தாடி உறவு கொண்ட போது தெரிந்து கொண்டனர்.

'these Brahmans do not marry, but have the privilege of enjoying all the Nairesses. This privilege the Portuguese who were esteemed as a great caste, obtained and preserved, till their drunkenness and debauchery betrayed them in to a commerce with all sorts of women' (Sonnerat, Voyage to the East Indies 1774-1781) எட்கர் தர்ஸ்டன் ஆங்கில நூலில் பக்கம் 310 இல் 5 வது தொகுதி இதனைக் காணலாம். அதுபோல Madras Government Museum Bulletin vol. III No. 3 Anthropology Nayers of Malabar,F. Fawcett, First edition 1901 AES Reprint 1985,1999.2004,page 188, 198, 224 களில் இந்த விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

நாயர் சாதிப் ஆண்கள், பெண்கள் ஆகியோரது எழுதிடவே முடியாத அளவிலான ஒழுக்கக்கேடுகளை R.Kerr, General History and Collection of Voyages and Travels 1811 History of the discovery and conquest of India by the Portuguese of Herman Lopes de Castaneda.ஆர்.கெர் பொது வரலாறும் கடற்பயணங்களும் பெண்கள் பற்றிய தொகுப்பு 1811 இந்தியாவைப் போர்த்துக்கீசியர் கண்டுபிடித்ததும் வெற்றிகொண்டதுமான 1497 க்கு 1525 கும் இடையிலான வரலாறு போர்த்துகீசிய நூலில் விரிவாகவே நாயர்களது திருமண ஒழுக்கக்கேடுகளை சொல்கிறது. எட்கர் தர்ஸ்டனின் ஆங்கில நூலில் 5 வது தொகுதியில் பக்கம் 311 இல் விரிவாகவே காணலாம்.

மலபாரில் கேரளத்தில் நாயர்கள்,நம்பூதிரிகள் அவர்களது திருமணத்திய ஒழுக்கக்கேடுகளை இது வரை விரிவாக சொன்னதற்கு காரணம் இந்த காலகட்டத்தில்தான் திப்பு மலபாருக்குள் பிரவேசிக்கிறார்.

ஹைதர் –திப்புவின் மலபார் தொடர்பு

மலபாருடன் ஹைதர் அலிக்கும் திப்பு சுல்தானுக்கு இருந்த தொடர்புகளை துவக்கத்திலிருந்து பார்ப்போம்.

கி.பி.1757 இல் கள்ளிக்கோட்டை சமோரியனுக்கும் (அரசர்) பாலக்காடு (Palghat) அரசருக்கும் இடையே நிலவிய போர் அப்போது திப்புவின் தந்தை ஹைதர் அலி தனது மைத்துனர் மக்தூம் அலியை (Makhthum Ali) தனது படைகளுடன் அனுப்பி வைத்தார்.பாலக்காடு அரசருக்கு ஆதரவாகச் சென்ற ஹைதர் அலியின் படை கடல் பகுதியில் முன்னேறியது.சமோரியனை கைது செய்து பாலக்காடு அரசரின் உடமைகளைத் திரும்பப் பெற்றுத் தந்தது.இதற்கான இராணுவ செலவை பாலக்காடு அரசர் செலுத்த வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது.சில தவணைகளில் செலுத்தப் பட வேண்டிய அந்தத் தொகை எதுவும் 1766 வரை செலுத்தப் படவில்லை.இதனை அறிந்த ஹைதர் அலி தனது பார்வையை மலபார் மீது செலுத்தினார்.

மலபார் சிறு சிறு மாநிலங்களாக இருந்தது வடக்கு மலபாரில் சிரக்கல், கட்டநாடு கோட்டயம் குரங்கோட் பகுதிகள் நாயர்கள் கரங்களில் இருந்தது. கண்ணூரில் மாப்பிள்ளைமார்கள் ஆதிக்கம்,தெற்கு மலபார் கள்ளிக்கோட்டை சாமோரியனுக்கு கொச்சி அரசருக்கும் இடையில் சிக்குண்டு அலையாடியது.

கி.பி. 1766 ஜனவரியில் ஹைதர் அலி மலபார் மீது படையெடுத்தார். 1766 ஏப்ரலில் அப்பகுதிகளை வெற்றி கண்டார்; கோயம்புத்தூர் திரும்பினார்.மீண்டும் மலபாரில் கலகம் வெடித்தது. கோபங்கொண்ட ஹைதர் அலி மீண்டும் மலபாரை அடக்கினார். முதல் மைசூர்ப் போரில் (1767–1779) ஹைதர் அலி வெற்றி பெற்றார்.இரண்டாம் மைசூர்ப் போர் (1780–1784) காலகட்டத்தில் 1782 இல் ஹைதர் அலி மறைந்தார். தீரன் திப்பு சுல்தான் போரைத் தொடர்ந்து நடத்தினார். மலபாரில் மிகப் பெரிய பரப்பு மைசூர்ப் படைக்கும்

ஆங்கிலேப் படைக்கும் விளையாட்டுக்களமானது. மலபாரில் பெரும் பகுதி ஆங்கிலேயர் வசமானது.

கி.பி.1784 இல் திப்புவிற்கும் ஆங்கிலேயருக்கும் மங்களூர் உடன்படிக்கை (Treaty of Mangalore) ஏற்பட்டது. ஏனென்றால் உலகெங்கும் ஆங்கிலேயருக்கு ஆபத்து ஏற்பட்டிருந்த காலம் அது. பிரான்ஸ், ஸ்பெயின், ஹாலந்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் அப்போது இங்கிலாந்துடன் போரிட்டவேளை. எனவே உடன்படிக்கை திப்புவிற்கு ஆங்கிலேயருக்கும் இடையே ஏற்பட்டது,அதன் படி மலபார் திப்பு சுல்தானுக்கு கிடைத்தது. நறுமணப் பொருட்களின் (மிளகு போன்ற)வர்த்தகத்தால் அந்தப் பகுதியை திப்பு சுல்தான் வலுப்படுத்த முயன்றார்.

ஆங்கிலேயரை அடியோடு ஒழித்துக்கட்ட நடந்த இரண்டாம் மைசூர் போரில் ஆற்காடு நவாபு முகம்மது அலி வாலாஜா தவிர அனைவரும் ஹைதர் அலிக்கு (திப்பு சுல்தானுக்கு) ஒத்துழைப்புத் தந்தனர் என்பதும் நினைத்துப்பார்க்கப்பட வேண்டிய வரலாறு ஆகும். (பேராசிரியர் கோ. தங்கவேலு, இந்திய வரலாறு 3 வது தொகுதி சென்னை 2007, பக்கம் 400)

'முழந்தாளிட்டு உயிர் வாழ்வதை விட நின்று கொண்டு இறப்பதே மேல்' என்று வெள்ளையர் காலில் இறுதிவரை விழாத திப்புவை மலபாரில் மற்ற மதத்தவர்களிடம் தவறாக நடந்தார் என்று தவறாகவே எழுதி வைத்துக்கொண்டனர்.

ஹைதர் அலியின் மரணத்திற்குப்பின் அர்ஷத் பேக் மலபார் அரசாங்கத்தின் பொறுப்பாளராக இருந்தார். மீர் குலாம் ஹுசைன் மீர் இப்ராஹிம் திவான்களாக நியமிக்கப்பட்டு, உள்ளாட்சி நிர்வாகம் சட்டம் ஒழுங்கை கண்காணிக்க உத்தரவிடப்பட்டன.ஆனால் நிலைமை கட்டுக்குள் அடங்க வில்லை.

1786 இல் எர நாட்டிலும் கள்ளிக்கோட்டையிலும் மஞ் சேரியிலும் மாப்பிள்ளை முஸ்லிம்கள் கூர்கல் தலைமையில் திப்புவிற்கு எதிராகப் போராடினார்கள். அர்ஷத் பேக்கும் நாயர்களுடன் சேர்ந்து கொண்டு கபடத்தனம் செய்தார். இப்ராஹீம் விசுவாசமின்றி இருந்தார். இந்நிலையில் 1788 இல் திப்பு மலபாருக்கு விரைந்தார்.ஹுசைன் அலி கான் இராணுவ தளபதியாகவும் ஷேர் கான் நியமிக்கப்பட்டனர். கி.பி. 1788 ஏப்ரல் மாத முற்பகுதியில் கள்ளிக்கோட்டைக்கு திப்பு சுல்தான் வந்தார்.அப்போது நாயர்களுக்கு பின் வரும் அரசு அறிவிப்பை வெளியிட்டார்.

"உங்களிடையே ஒருத்தி பத்துப் பேரோடு உறவு வைத்துக் கொள்கின்றாள்.நீங்கள் உங்கள் தாயார்களையும் உடன்

பிறந்தவர்களையும் இந்த இழிவான வழக்கத்தை மேற்கொள்ள அனுமதித்துள்ளீர்கள். இவ்வாறு முறையற்ற ஒழுக்கத்தின் வழிபிறந்த நீங்கள் காட்டு விலங்கை விட மானங்கெட்ட வாழ்க்கை வாழ்ந்த படி உள்ளீர்கள். நான் இந்த அறிவிப்பின் படி உங்களுடைய இந்தப் பாவச் செயல்களிலிருந்தும் விடுபட்டு மற்ற மனிதர்களைப் போல நடந்து கொள்ளும் படி கட்டளையிடுகிறேன்" என்று திப்பு சுல்தான் ஆணையிட்டார்.

Tippu Sulthan is said to have issued the following proclamation to the Nayars,on the occasion of his visit to Calicut in 1788 And, since it is a practice with you for one women to associate with ten men, and you leave your mothers and sisters unconstrained in their obscene practices,and are thence all born in adultery,and are more shameless in your connections than the beasts of the feild. I hereby require you to for sake these sinful practices, and live like the rest of mankind" (T.A.Kalyana Krishna Aiyar, Malabar Quarterly Review, vol 3 1903)

(முற்கூறிய தர்ஸ்டன் ஆங்கில நூல் பக்கம் 311)

மறைத்திரு எஸ். மட்டீர் பாவ் செட் ஆகியோர் இது குறித்து தெரிவித்த செய்தி இதோ...

திருவாங்கூர் நாயர்களிடையே உள்ள வழக்கமான பல கணவர்களை ஒருத்தி உடையர்வர்களாயிருத்தல் பற்றிப் பேசிக்கொண்டிருந்த போது, 'ஆறு சகோதரர்கள் இரண்டு பெண்களைத் தங்கள் மனைவியராகக் கொண்டிருப்பது தெரியும் எனக் கூறினர் (...that he had known an instance of six brothers keeping two women") நால்வர் ஒருத்தியையும், இருவர் ஒருத்தியையும் மனைவியராக்கிக் கொண்டுள்ளனர் (Four husband to one and two to the other)

இன்றைய காலகட்டத்தில் இவ்வழக்கம் வெளியில் தெரியும் படி இல்லை. ஆனால் திப்பு சுல்தான் காலத்தில் இந்த அசிங்கமான வழக்கம் நடைமுறையில் இருந்தது என்பதற்கு சான்றுகள் உள்ளது. அதனால் தான் திப்பு சுல்தான் அதனை ஒழித்திட 1788 இல் உத்தரவு பிறப்பித்தார்.

"MALABAR AND ITS FOLK" A Systematic description of the social customs and Institutions of malabar by T.K.Gopal Panikkar B.A. 1900ல் சென்னை நி.கி. நடேசன் கம்பெனியார் இரண்டு ரூபாய் விலையில் வெளியிட்ட 280 பக்கங்களைக் கொண்ட நூல் இது. அந்த நூலில் கோபால் பணிக்கர் கூறுகிறார் பிராமணர்கள் நாயர் சாதி பெண்களைத் தடையேதுமின்றி வைப்பாட்டிகளாக வைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

இத்தகைய ஒரு பிடிப்பை அவர்கள் நாட்டவர்கள் மேல் ஏற்படுத்திக் கொண்ட பின் அந்தப் பிடிப்பு காலப் போக்கில் மேலும் இறுக்கவே செய்தது. இன்றும் கூட மாவட்டத்தின் கிராமப்புறங்களில் பிராமணர்களோடு இத்தகைய உறவினை ஏற்படுத்திக் கொள்வது தங்கள் குடும்பங்களுக்குச் சிறப்பினை கொடுப்பது எனக் கருதும் குடும்பத்தினர் உள்ளனர்.இந்த இழிவான நிலையின் பிரதிபலிப்பாக உருவானதே மலபார் திருமணச் சட்டம்.

(Thus it came about that the custom of concubinage,so freerly indulged in by the Brahmans with Nair women,obtained such firm hold upon the country that it has only been by the lapse of time).

1900 இல் வெளிவந்த இந்த நூல்களிடையே மலபார் நாயர், நம்பூதிரி, பிராமணர் பல ஆண்கள் ஒரு பெண்ணை வைத்துக் கொள்வது பற்றிய பிரச்னை பேசப்பட்டிருக்கிறது. தற்பொழுது இது இல்லாமல் இருக்கலாம். ஆனால் திப்பு சுல்தானின் காலத்தின் இது இருந்தால் தான் 1788ல் அதற்க்கு எதிராக உத்தரவு பிறப்பித்தார். திப்பு மலாபார் கவர்னருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், மலபார் பெண்கள் மார்பகத்தை மறைக்கும் துணி கூடப் போடாமல் நடமாடுவதைக் காண்பது எனக்கு வேதனை தருகிறது. இது நமது பார்வையையும் பண்பாட்டையும் பாதிக்கிறது.இது நமது கலை உணர்வுவையும் அற உணர்வையும் கொச்சைப்படுத்துகிறது.இப்பெண்கள் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களின் சமூகக் கட்டுப்பாடு தான் காரணமா? அல்லது வறுமை காரணமா? வறுமைதான் காரணமென்றால் அதைப் போக்க நாம் எவ்வகையில் உதவி அவர்களின் கௌரவமான வாழ்வுக்கு உதவ வேண்டும். சம்பிரதாயம்,சமூக கட்டுப்பாடுகள் காரணமென்றால் பழங்குடித் தலைவர்களுடன் பேசி இந்த இழிநிலையைப் போக்க முயற்சி எடுக்க வேண்டும். அவர்களின் மத உணர்வுகளையும் புண்படுத்தாமல், நட்பு ரீதியாக அறிவுறுத்தவும் அவர்களின் பண்பாட்டுப் பின்னணியை அறிந்து நீங்கள் உங்கள் முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

இது போன்ற சம்பிரதாய தடைகள் ஆண்களுக்கும் உண்டா? இல்லையென்றால் பெண்களுக்கு மட்டுமான இந்த அநீதி நீதிக்கு எதிரான ஒதுக்கல் கொடுமையே. இதற்கு வறுமை காரணமா? ஏதாவது அரசரின் தண்டனையா? இதில் எது காரணமான போதும் நமது அரசு தலையிட்டு அவர்களுக்கு சரியான நீதி வழங்குவது அவசியம்.

வறுமை, அரசு காரணம் இல்லையென்றால் தொன்மையான பழக்கம் தான் காரணமென்றால் நமது தாய்மாரை அரை நிர்வாணமாக்கிய பழக்கவழக்கத்தை இளைய தலைமுறை

தொடர எப்படி அனுமதிக்கிறது? என்று திப்பு சுல்தான் கடிதம் எழுதினார் The Sword of Tippu Sulthan, Bhagwan S. Gidwani எழுதிய நூலில் முதற் பதிப்பு 1976, அலெய்டு இரண்டாம் பதிப்பு 1978 பக்கம் 226 இல் இந்த விவரம் காணப்படுகிறது இதனை தமிழில் டாக்டர் வெ. ஜீவானந்தம் 'திப்புவின் வாள்' என்று முழிபெயர்த்துள்ளார்.(பக்கம் 190, 191)

மலபாரில் பெண்கள் மார்பகங்களை திறந்த நிலையில் திரிந்ததை ஒழித்திடவும் அவர்கள் மானத்தை மறைத்திடவும் திப்பு சுல்தான் உத்தரவிட்டார்.ஏற்கனவே அநாச்சாரங்களில் திளைத்திருந்த உயர் சாதியினருக்கு இதுவும் விரோதமாக அமைந்தது.தங்களின் காம காளியாட்டங்களுக்கு முடிவு கட்ட திப்பு உத்தரவிட்டதால் கோவில்களை இடித்தார் என்று அவரைத் தூற்றத் தொடங்கினார்கள்.கேரளாவில், மலபாரில் திருவிதாங்கூரில் திப்பு சுல்தான் இந்து சமயத்தாருக்கு அளித்த நன்கொடைகளைப் பற்றி சொல்வதற்கு முன் சுருக்கமாக அவரது மலபார் தொடர்புகளை சொல்லி முடித்திடலாம்.

1788 மே 9 கள்ளிக்கோட்டையிலிருந்து புறப்பட்ட திப்பு பேப்பூர் (Beypore) ஆற்றின் தென்கரை வழியாக பயணம் செய்தார் மலபாரில் புதிய தலைநகரத்திற்கு பாரூக்காபாத் அல்லது பாரூக்கியா (Farokhabad or Farrookhia) என்று பெயரிட்டு அடிக்கல் நாட்டினார்.அங்கு கோட்டை கட்டவும் உத்தரவிட்டார்.தலைநகருக்கு அத்தனை சாலைகளும் வந்து சேரும் வகையில் இருக்க வேண்டும் என்று ஆசைபட்டார். மற்ற கோட்டைகளை விட இது சிறந்ததாக இருக்க வேண்டும் என்றும் எண்ணினார்.கள்ளிக்கோட்டையிலிருந்து பலரைக் கொண்டு வந்து கொடியேற்றவும் செய்தார். மூன்றாம் மைசூர்ப் போரில் ஆங்கிலேயர் வென்றதால் (1790–1792) தலைநகர் மெல்ல அழியத் துவங்கியது.அது தற்போது (Ferokh) பரோக் என்ற சிறு கிராமமாக உள்ளது. (Imperial Gazatter 1909, vol xii p.88)

1788 ஜூலையிலிருந்து நவம்பர் வரை திப்புவால் ஜாகிராக நியமிக்கப்பட்ட ரவிவர்மா (Ravi Varma)தன்னை ஆட்சியாளராக அறிவித்துக் கொண்டான். அதோடு கள்ளிக்கோட்டையையும் கைப்பற்றினான். ஆத்திரமடைந்த திப்பு லாலி (Lally) மற்றும் கமர் உத்தீன் (Qamar ud Din) தலைமையில் 6000 மைசூர் படைகளுடன் 170 ஐரோப்பியப் படைகளையும் அனுப்பிவைத்தார். 1788 டிசம்பரில் ஒடுக்கப்பட்டது. எதிரிகள் எதிரிப் படை ஓடி ஒளிந்தனர், பலர் சிறைபிடிக்கப்பட்டனர், பலர் காடுகளுக்குள் சென்றனர்.

1789 ஜனவரியில் திப்பு சுல்தான் மலபார் சென்றார். அந்த வேளையில் 1789 ஏப்ரல் 22 இல் திப்புவின் அதிகாரி இர்வர்நாடு (Irvernad) எதிரிகளால் கொல்லப்பட்டார். நாயர்களை ஒடுக்குவதில் திப்பு தோல்வியடையக் காரணமாக இருந்தது, மலபார் அமைந்திருந்த பகுதி பெருமளவு மலைகளாகவும் அடர் காடுகளாகவும் இருந்தது. திப்பு வரும் போது ஓடி ஒளிவதும் அவர் சென்றதும் எதிர்ப்பதும் என்று மலபார் காடுகள் வசதியாக இருந்தன. மூன்றாவது ஆங்கிலேய மைசூர் போர் முடிந்ததும் ஆங்கிலேயோர்கள் வென்றதும் சிறு சிறு தலைவர்கள் தங்களது பகுதிகளை திரும்ப பெற்றுக்கொண்டனர்.

திருவிதாங்கூர் ராஜாவுடன் நடத்திய போரின் போது திப்பு சுல்தான் 1789 இல் பாலக்காட்டிற்கு அருகில் முகாம் அமைத்தார். அங்கு ராம வர்மாவிடம் பேச்சுக்கள் தொடர்ந்தது,ஆனால், திருப்தியாக அது இல்லை. திருவிதாங்கூர் மாநில எல்லையை ஒட்டிய பகுதிகளில் மலைகளில் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ள கலகக்காரர்களைப் பிடித்து வர திப்பு சுல்தான் தனது படையை அனுப்பி வைத்தார். 1789 டிசம்பர் 28 இரவு வரை போர் நீடித்தது. திருவிதாங்கூர் படை ஓட்டமெடுத்தது. மறுநாள் மைசூர் படை கணிசமான இடத்தைக் கைப்பற்றியிருந்தது.முதலில் நடந்த சிறு தாக்குததிலேயே ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு ஓடிவிட்ட திருவிதாங்கூர் படை, படைக்கலக் கொட்டிகளையும் வீரர்கள் தங்கும் முகாமையும் மைசூர் படை தாண்டியதும், 800 க்கும் அதிகமான நாயர்கள் புதிய படையைச் சேர்த்துக் கொண்டு மைசூர் படையினர் முன்னேறிச் செல்வத்தைத் தடுத்தது.ராமவர்மாவின் படைகள் வலதும் இடதுமாக புற்றீசல் போல் வந்து குவிய மைசூர் படை சீர்குலைந்தது, பீதியில் பேரச்சத்தில் வெருண்டு ஓடியது. இதைச் சாதகமாக எடுத்துக் கொண்டு சில வரலாற்றறிஞர்கள் தங்கள் போக்கின் படி எழுதித் தள்ளியுள்ளனர். இந்தப் போரில் திப்பு அந்தப் படையை வழி நடத்தியதாகவும் ராமவர்மா ராஜாவின் காலாட்படை வீரன் சுட்டான் அதனால் திப்பு காயம் பட்டதாகவும் உயிர் தப்பி ஓடியதாகவும், திப்புவின் சிவிகை,முத்திரைகள், வாள், கைத்துப்பாக்கி, வைர மோதிரங்கள், நகைகள் அடங்கிய பெட்டி எதிராளிகளிடம் சிக்கியதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (வில்க்ஸ் மைசூர் சரித்திரம் பாகம் 2 பக்கம் 358)

உண்மையில் அந்தத் தாக்குதலின் போது திப்பு சுல்தான் அங்கு இருந்தார் என்பதற்கு எந்த ஆவணங்களும் இல்லை. திப்பு சுல்தானே அதனை மறுத்துள்ளார். போரைத் தனக்கு தெரியாமலே நடத்தினார்கள் என்றும், தான் அதைக் கேள்விப்

பட்டதும் உடனடியாகப் படைகளை திரும்ப அழைத்துக் கொண்டதுடன் திருவாங்கூர் கைதிகள் ராஜாவிடம் அனுப்பப் பட்டனர் என்றும் தெரிவிக்கின்றனர். (Tippu to Hollond, january 1,1790,cons no 9) இந்த போரின் போது பாவ்னியும் (Pawney) கமர் உத் தீனும் கொல்லப்பட்டடார்கள். அவர்கள் மறைவிற்காக திப்பு சுல்தானின் முகாமில் இரங்கல் கூட்டம் நடைபெற்றது என்றும் சொன்னார்கள், ஆனால், அது வடிகட்டிய பொய். கமர் உத் தீன் நான்காம் ஆங்கில மைசூர்ப் போரில் *(1799)* கலந்து கொண்டார் என்பதற்கு தெளிவான சான்று உள்ளன.

திப்புவின் சிவிகையை கைப்பற்றினார்கள் என்கின்றார்கள் திப்பு சிவிகையைப் பயன் படுத்துவது இல்லை. திப்பு மிகப் பெரிய குதிரை வீரர்... பொருட்கள் கைப்பற்றப் பட்டதாகச் சொல்வதும் போகிற போக்கில் சொல்கிற கற்பனைகளே, திருவிதாங்கூர் ராஜா சென்னையின் கவர்னரும் கவர்னர் ஜெனரலாகயிருந்தவருக்கு அனுப்பி எந்தவொரு கடிதத்திலும் இது பற்றிய செய்திகள் இல்லை. நான்கு குதிரைகள் இரண்டு டிரம்ஸகள் மட்டுமே கைப்பற்றப்பட்ட தகவல் உண்டு (He only mentioned that four horses, two stands of coloeus and two drums fell in to the hands of his troops (Raja to medous , may) *1* பாகம் *1790* மெக்கன்சி நூல் பக்கம் *17)* இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல அந்தப் போரின் போது அது விபத்து போல திப்பு சுல்தானின் உத்தரவு இல்லாமலே நடந்தது என்று சென்னை கவர்னர் கென்னவேக்கு (Kennaway)க்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(Potical Proceeding National Archives of India April 2 1790. consutations no 1)

திப்பு சுல்தான் மீது இப்படியெல்லாம் அவதூறு பரப்பியவர்கள் அடுத்துச் செய்தது அவர் கோயில்களை இடித்தார் என்று, உண்மை என்ன?

1789 இல் திருவாங்கூர் படையெடுப்பின் போது திருச்சூரில் டிசம்பர் *14* முதல் *29* ஆம் தேதி வரை திப்பு சுல்தான் தங்கியிருந்தார்.அப்போது தனது படைகளுக்கு சமையல் பாத்திரங்களை வடக்கு நாதன் கோவிலிலிருந்து தான் பெற்றார்.திருச்சூரில் இருந்து கிளம்பும் போது கோவிலுக்குரிய பாத்திரங்களை பத்திரமாக ஒப்படைத்ததுடன் மிகப் பெரிய வெங்கல குத்து விளக்கையும் பரிசாக அளித்தார்.

ஏரநாடு தாலுகாவின் செலம்பர அம்சத்திலுள்ள மன்னூர் கோவிலுக்கு *70.42* ஏக்கர் ஈரநிலமும் *3.29* ஏக்கர் தோட்ட நிலமும் திப்பு வழங்கினார்.பொன்னானி தாலுகாவின்

வைலத்தூண் அம்சம் திருவாஞ்சிக்கும் சிவா ஆலயத்திற்கும் 46.02 ஏக்கர் நிலமும் 3.29 ஏக்கர் தோட்ட நிலமும் திப்புவால் வழங்கப்பட்டது. பொன்னானி தாலுகாவில் குருவாயூர் அம்சம் குருவாயூர் கோவிலுக்கு 46.02 ஏக்கர் ஈர நிலமும் 458.32 ஏக்கர் தோட்ட நிலமும் திப்புவால் அளிக்கப்பட்டது.

கள்ளிக்கோட்டை தாலுகாவின் கஸ்பா அம்சம் திருக்கண்டியூர் வெட்டக் கோரும் மக்கள் காவு கோவிலுக்கு 122.70 ஏக்கர் ஈர நிலமும் 73.36 ஏக்கர் தோட்ட நிலமும் திப்பு சுல்தான் அளித்தார்.பொன்னானி தாலுகாவில் கடிகாடு அம்சம் கப்டு மாடத்தில் ஸ்ரீ குமரன் (நம்பூதிரிபாட்) கோவிலுக்கு 27.97 ஏக்கர் நிலமும் 6.91 ஏக்கர் தோட்ட நிலமும் தந்தார் திப்பு.பொன்னானி தாலூகாவின் திருக்கண்டியூர் அம்சம் திருக்கண்டியூர் சமூகக் கோவிலுக்கு 20.63 ஏக்கர் ஈர நிலமும் 0.41 ஏக்கர் தோட்ட நிலமும் தந்தார் திருச்சூர் நடுவில்மாடம் திருமும்முவுக்கு 40.26 ஏக்கர் ஈர் நிலத்தையும் 22.13 ஏக்கர் தோட்ட நிலத்தையும் 4.17 ஏக்கர் மாரு வரி நிலத்தையும் திப்பு சுல்தான் தானமாக அளித்தார்.

சகல வழிகளிலும் இந்துக்களுக்கும் இந்துக்கோவிலுக்களுக்கும் பிராமணர்களுக்கும் ஆதராவாகச் செயல்பட்டவர் திப்பு சுல்தான் (மொஹிபுல் ஹசன், திப்பு சுல்தான் (தமிழில் அர்ஷியா ,பொள்ளாச்சி 2014 பக்கம் 416) 1919 இல் எழுதி 1921 இல் J.R ஹெண்டர்சன் வெளியிட்ட நூல் திப்பு சுல்தான் மற்றும் ஹைதர் அலி நாணயங்கள் பற்றியது. எனது நண்பர் நல்ல தம்பி அதனை 1987 இல் மறுபதிப்பு செய்தார்.அந்த நூல் 123பக்கங்களிலும் 9 பக்கங்களில் 132 பக்கங்களில் வெளியானது.அதில் பக்கம் 4 இல் ஹைதர் அலி வெளியிட்ட முதல் பகோடா (PAGODA) நாணயம் சிவன் பார்வதி உருவம் தாங்கியது, ஆறாவது வெளியிட்ட அரை பகோடா நாணயம் (HALF PAGODA) விஷ்ணு சங்கு சக்கரம் உருவம் தாங்கியது.

1.Siva seated with Parvathi on his left knee, in one of the God's right hand a trisul and in one of the left a deer,

2.Vishnu seated on his right side a chakra discus and on the left a sanku (J.R.Henderson,the coins of Haider Ali and Tippu Sulthan, Madras First, Published 1921 reprint 1987,page 4)

மைசூர் புலி எனப் புகழ் பெற்ற ஹைதர் அலி சென்னையைத் தாக்கிய பின்பு தனது நாடு திரும்பிக் கொண்டிருந்தார் தஞ்சையில் சிறப்பாகத் தொழில் புரிந்து நாட்டில் பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொண்டிருந்த சௌராஷ்ட்ரரை கண்டார்.இவர்களை மைசூர்ப் பகுதியில்

குடியேற்றித் தொழில் வளம் உண்டாக்கும் எண்ணத்துடன் 25 சௌராஷ்ட்ரக் குடும்பங்களை தம்முடன் அழைத்துச் சென்றார்.ஸ்ரீரங்கப்பட்டணத்தில் அருகில் இருக்கும் கஞ்சம் பகுதியில் சௌராஷ்ட்ரர் குடியேற்றப்பட்டனர்.இவர்களுக்குப் பல உரிமைகள் விட்டுக் கொடுக்கப்பட்டன.வரி விளக்கு அளிக்கப்பட்டது.சுருக்கமாகச் சொன்னால் சௌராஷ்ட்ரர்கள் தங்கள் விருப்பப் படி தொழில் நடத்துவதில் கவனம் செல்லும் படி வாழ்க்கை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. (K.K. சேதுராமன் தமிழ் நாட்டில் சௌராஷ்ட்ரர் முழு வரலாறு, மதுரை 1977, பக்கம் 74)

திப்பு சுல்தானின் மாளிகை தரியா தவுலத் ரங்கநாதர் ஆலயத்தை நோக்கியே இருந்ததது.திப்புவின் கோட்டைக்குள் 102 கோவில்கள் இருந்தன. ஆண்டு தோறும் 156 கோவில்களுக்கு திப்பு சுல்தான் மான்யம் வழங்கினார் என்று எனது தம்பி பன்னூலாசிரியர் N.K. ஜமால் முஹம்மது தனது தியாகச் சுடர் திப்பு சுல்தான் நூலில் சென்னை 2006,பக்கம் 62 இல் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீ கந்தையா மைசூர் கெசட்டின் ஆசிரியர் 156 கோவில்களையும் பட்டியலிட்டுள்ளார்.கோவில்கள், மசூதிகள் அழிப்பு உண்மையும் புரட்டும் வெ.பத்மநாபா அ.அன்வர் உசேன் 2015 சென்னை பக்கம் 59.

குருவாயூர் கோவிலுக்கு திப்பு நிலங்களை தானமாக அளித்ததோடு திப்புவின் படையெடுப்பின் போது குருவாயூர்க்கோயில் புரோகிதர்களை மூல பீடத்தில் இருந்த கிருஷ்னரது (குருவாயூரப்பன்) சிலையை அப்புறப்படுத்தி மறைத்து வைத்திருந்ததை அறிந்து புரோகிதர்களை வர வளைத்து தம் முன்னிலையிலேயே குருவாயூர் சுவாமியை மீண்டும் பிரதிஷ்டை செய்யுமாறு பணித்தார்.அத்தோடு கோவில்களை சுற்றியுள்ள பகுதிகளில் வரிவசூல் அனைத்தும் கோயிலுக்கே சேரவேண்டும் என்றும் உத்தரவிட்டார் திப்பு சுல்தானின் காலம் வரை அந்த உத்தரவுப்படி அக்கோவிலுக்கு அந்தப் பகுதியின் வரி வசூல் வந்து சேர்ந்தது (Mohamood of Bangalore) முஹ்மது பெங்களூரில் எழுதப்பட்ட உருது நூல் 1950 இல் வெளிவந்தது குதாதாவார்கள் (Qudha Dhaath Sircar) திப்புவின் சர்க்கார் என்பது நூலில் பெயர் SULTHANATH -E - QUDHADHAATH இந்த நூலில் பக்கம் 27 இல் இந்தத் தகவலைக் காணலாம்.

Mysore Gazatteer (Administration) மைசூர் கெஜட்டின் நான்காம் தொகுதி 1929இல் பக்கம் 38 இல் உள்ள தகவல் திப்பு சுல்தானின் நிர்வாகத்தைப் பற்றி திவான் பூர்ணய்யா என்னும் பிராமணர் தந்துள்ள தகவல்.

திப்பு சுல்தான் நன்கொடை அளித்த விபரம் (வராகன்களில்)

தேவஸ்தானங்கள் அக்ரகாரங்கள் 1.93,959 பிராமண மடங்கள் 20,000, இஸ்லாமிய ஸ்தாபனங்கள் 20,000, மொத்தம் 2,33,959...

திப்புவின் சமய ஒற்றுமைக்கு இவை சான்றுகள் அல்லவா!

திப்பு சுல்தான் தேச பக்தரா? மதவெறி முஸ்லிமா? என்று ஹிந்து முன்னணி 2 ரூபாய் 50 பைசா விலையில் 24 பக்கங்களில் ஒரு நூலை வெளியிட்டு அவதூறு பரப்பிவருகிறது. இதற்கு பதிலளிக்கும் விதமாக பல செய்திகளைச் சுட்டி காட்டியுள்ளேன். டி.கே. இரவீந்தரனின் பகதூர் கான் திப்பு சுல்தான் எனும் நூலை விகடன் பிரசுரம் 2014 இல் வெளியிட்டது. 256 பக்கங்கள் கொண்ட அந்த நூலின் இறுதியில் 255,256 பக்கங்களில் அவர் குறிப்பிட்டுள்ள செய்தி இதோ...

‘‘1778 (1788)இல் மலபார் பகுதி மீது படையெடுத்து சென்ற போது அங்குள்ள ஏழைப்பெண்கள் மேலாடையின்றி அரை நிர்வாணமாக வாழ்வதைக் கண்டு திடுக்கிட்டார்.வேதனையுற்ற திப்பு சுல்தான் தாம் மலபாரைக் கைப்பற்றியதும் அனைவரும் மேலாடை அணிய வேண்டும் என்று உத்தரவிட்டு நடைமுறைப் படுத்தினார்.இது அங்குள்ள மேல் ஜாதிக்காரர்களான நம்பூதிரி வர்க்கத்தைப் பெரிதும் சினமூட்டியது என்பதை கேரள வரலாற்றைப் படிப்பவர்கள் உணர முடியும்.,அது மட்டுமல்ல கேரள நாயர் பெண்கள் பல ஆண்களை திருமணம் செய்யும் வழக்கம் அன்று மலபார் பகுதியில் நடைமுறையில் இருந்தது. இதனால் தந்தை பெயர் அறியாத வாரிசுகள் உருவாகும் என்று நினைத்த திப்பு சுல்தான் இந்த நடைமுறையை தடை செய்தார்.இதுவும் அங்கிருந்த நம்பூதிரி நிலச்சுவான்தார்களை சினமூட்டியது.ஏனெனில் நம்பூதிரிகள் நாயர் பெண்களுடன் உறவு கொள்வது அந்நாளில் பிரபலமாக இருந்தது. நல்லிணக்கத்துடன் வாழ்வை நடத்தி வந்த திப்புவின் மீது அபாண்டப் பழி சுமத்தி அவரது வாழ்வில் சேற்றை வாரிப் பூசும் பாதகர்கள் இன்னமும் சிலர் இருக்கலாம் ஆனாலும் அவனது வாழ்க்கை சரித்திரம் இந்த மண்ணில் மகத்தான புதல்வனின் வீர வரலாறு’’ என்பார் டி.கே.இரவீந்திரன் .

‘‘இந்த மண்ணில் ஆங்கிலேயர்கள் முதன் முதலாகப் படுதோல்வியைத் தழுவியது திப்பு சுல்தான் கையினால் தான். அதற்கு முன்பு ஆங்கிலேயர்கள் யாரிடமும் தோற்க வில்லை.திப்பு சுல்தான் செய்த ஒரே தவறு அவர் ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்றது தான் என்பார் பேராசிரியர் அருணன். (வரலாறும் வகுப்புவாதமும் பேராசிரியர் அருணன், பேராசிரியர் தஸ்தகீர், (Dr. K.V.S. ஹபீப் முஹம்மத், சென்னை 2017 பக்கம் 71) அதனால்

தான் வெள்ளையர்கள் தங்கள் இஷ்டத்திற்கு புழுதி வாரி இறைத்தனர். ஆனால் அவர்களை அறியாமல் உண்மையைச் சொல்லியும் இருக்கிறார்கள்.

History Of Mysore, Mark Wilks எழுதிய இரண்டு பாகங்களை கொண்ட, முழுக்க முழுக்க திப்புவையும் ஹைதர் அலியையும் தாக்கி எழுதப்பட்ட நூல். முதல் பாகம் 850 பக்கங்கள் இரண்டாம் பாகம் 817 பக்கங்கள் 1810 இல் வெளிவந்த நூல் இரண்டாம் பாகத்தில் பக்கம் 97 இல் வில்க்ஸ் அவனையும் அறியாமல் ஹைதர் அலியை பற்றி எழுதுகிறார்.

''Hyder's more than half -Hindoo'' ஹைதர் அலி அரை இந்துவாகவே இருந்தார் என்று கூறுவார். மத வெறியர்களே இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்? ஹைதர் திப்பு வின் சமயஒற்றுமைக்கும் வீரத்திற்கும் மேலும் சில உதாரணங்களை சொல்லி ஆகவேண்டும். சேலம் நகராண்மைக் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் பண்டித புலவ வித்துவ தேவ நேயப்பாவாணர் 1956 இல் எழுதிய நூல் தமிழர் திருமணம், 1 ரூபாய் விலையில் 95 பக்கங்கள். அதில் சொல்வார் (பக்கம் 92) சேரர் மரபு அற்றுப் போய்ச் சேர நாட்டிற்குச் சோழ பாண்டி நாட்டோடு தொடர்பு நீங்கியதிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை நாயர் குலத்தில் பல்கணவம் கையாளப்பட்டு வந்ததாக தெரிகிறது.

பல் கணவ முறைப்படி இடைக்காலத்தில் ஒவ்வொரு நாயர் பெண்ணையும் இருவர் முதல் பன்னிருவர் வரை பல கணவரோடு கூடி வாழ்ந்தாள். ஒவ்வொரு கணவனும் மணந்த வரிசை முறை கொண்டு ஒப்பந்தத்திற்கேற்ப ஒரு நாளோ பல நாளோ தன் நாயர்த்தியோடு கூடியிருப்பான்.ஒரு நாள் பகலிலிருந்து மற்றொரு நாள் பகல் வரை ஒரு நாள் கணக்காகும் .ஒரு கணவன் வீட்டிற்குள்ளிருக்கும் போது மற்றொரு கணவர் வருவதில்லை.

நம்பூதிரி பிராமணர் இடைக்காலத்தில் நாயர்த்திமாரைத் தாராளமாய் பெண்டாள்வதற்கு மட்டுமின்றி அவரை முதலில் நுகர்வதற்கும் (முதற்கணவ) முன்நுகர்ச்சி வழிவகுத்திருந்ததாகத் தெரிகிறது.இதில் இன்று பல செய்திகள் பழங்கதைகள் ஆகிவிட்டன.

ஆனால், திப்பு சுல்தானின் காலத்தில் இது நடை முறையில் இருந்ததால் தான், அதை ஒழித்திட நடவடிக்கை எடுத்ததால் தான் திப்புவின் மீது தீராப் பழியை சுமத்துகிறார்கள் என்பது எவராலும் மறுத்திட முடியாத உண்மையாகும். மகாகவி பாரதி வெறுப்பின்றி எழுதுபவர். தனது 'இந்தியா'

பத்திரிகையில் 12.03.1910 இல் பக்கம் 2 இல் ஆங்கிலேயர் இந்திய சிற்றரசர்களைக் கைவசப்படுத்தியது என்ற கட்டுரை எழுதியுள்ளார். அதில் குறிப்பிடுவார், ''சுதேச ஜனங்களிடத்தில் அபகீர்த்தி அடைந்து வாழ்வதைப் பார்க்கிலும் ஒரு நிமிஷமானாலும் சுதந்திரத்தோடு ஜீவித்துப் பிராணனை விடுவது தான் மகா உத்தமமென்று நினைத்து திப்பு சுல்தான் ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்ட மாட்டேனென்று போரில் உயிரிழந்தார்'' (கால வரிசை படுத்தப்பட்ட பாரதி படைப்புகள் தொகுதி 6 சீனி விசுவநாதன், சென்னை, 2005, பக்கம், 736)

வெள்ளையரை எதிர்த்து நின்றதால் அந்த மாவீரன் மீது மாபழியைச் சுமத்தினார்கள்.கி.பி. 1788 இல் திண்டுக்கல்லுக்கு வந்த திப்பு சுல்தான் மலை மீது கோயில் கொண்டிருந்த அபிராமி அம்மனையும் பத்மகிரி நாதரையும் தற்போது ஊரின் நடுவில் அமைந்துள்ள காளவீரஸ்தீசுவர சுவாமி கோயில் பிரதிஷ்டை செய்யக் கட்டளையிட்டார் என்று கி.பி. 1815 இல் டர்ன்புல், சீங் என்ற இரண்டு எழுத்தாளர்கள் எழுதியதை அறிகிறோம் .(பூர்ணா தொகுத்த 'தெரியப்படாத திண்டுக்கல்' நூலில் சென்னை,2016 பக்கம் 126 இல் காணலாம். இந்தக் கட்டுரையை எழுதியவர் நா.முத்துலக்கையன். தலைப்பு வீரன் இல்லாத கோட்டையும் விக்கிரகம் இல்லாத கோயிலும்)

'Religious Policy of Tippu Sulthan' என்ற நூலை மகா மகோபாத்தியாய டாக்டர் ஹரிபிரஷாத் சாஷ்திரி கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருத துறைத்தலைவர் எழுதியது (Mahamabodhyaya Dr. Hari prasad shastri) அதில் திப்பு சுல்தான் 3000 பிராமணர்களை இஸ்லாத்தில் சேர கட்டாய படுத்தினார் என்றும் எழுதியிருந்தார்.முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஒடிஸாவின் ஆளுநராக இருந்த பி.என். பாண்டே (Dr. B.N. Pande) இதைப் படித்து அதிர்ச்சி அடைந்தார்.உடனே ஹரி பிரசாத் சாஸ்திரிக்கு கடிதம் எழுதினார்.திப்புவின் மீது சுமத்தப்படும் இந்தத் தகவலுக்கான ஆதாரம் எங்கே உள்ளது என்றார்.சாஸ்திரியார் பதில் எழுதிட வில்லை பல கடிதங்கள் எழுதினார் பாண்டே. இறுதியில் மைசூர் கெஜட்டில் உள்ளதாகச் சொன்னார் சாஸ்திரி.

மைசூர் பல்கலைக்கழக துணைவேந்தர் சர் பிரஜேந்திர நாத சீலுக்கு கடிதம் எழுதினார். அவர் மைசூர் கெஜெட்டின் புதிய பதிப்பைத் தயாரித்துக் கொண்டிருந்த பேராசிரியர் ஸ்ரீ கண்டைய்யாவுக்கு அந்தக் கடித்தை அனுப்பி வைத்தார்.

பேராசிரியர் ஸ்ரீ கண்டைய்யா மூன்று ஆயிரம் பிராமணர்கள்

தற்கொலை செய்து கொண்டது பற்றி மைசூர் கெஜெட்டில் தகவல் எதுவும் இல்லை என்றும், தாமே மைசூர் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பிரிவு மாணவராக இருந்தவர் என்ற முறையில் சொல்வதாகவும் தெரிவித்தார்.

(நாம் முன்னரே குறிப்பிட்டிருந்த அண்டப்புளுகுகளுடன் வில்க்ஸ் எழுதிய அவதூறான நூலில் அது உள்ளது.)

விக்டோரியா மகாராணியின் தனி நூலகத்தில் பாரசீகக் கையழுத்துப் பிரதியில் இது உள்ளது என்றும் கூறினார். ஆனால்,விசாரித்துப் பார்த்ததில் விக்டோரியா மகாராணியின் நூலகத்தில் அப்படி ஒரு கையெழுத்துப் பிரதியே கிடையாது என்று தெரியவந்துள்ளது.

இப்பொய்கள் திப்பு சுல்தான் மீது இந்துக்களின் இதயத்தில் வெறுப்புணர்வையும் பகைமையையும் உண்டாக்கத்திட்டமிட்டு புனைந்துரைக்கப் பட்டவை என்பது வெளிப்படை. ஆங்கிலேயர் விதைத்த இத்தகைய நச்சு விதைகள் வளர்ந்து இன்று மரங்களாக வேரூன்றி நிற்கின்றன. (கவிக்கோ அப்துல் ரஹ்மான், முத்து குளிக்க வாரீகளா? சென்னை 2016 பக்கம் 137) ஆனால் டாக்டர் சாஸ்திரியின் நூல் வங்காளம், அசாம், பீஹார், ஒடிசா, உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் பாட நூலாகவும் இருகிறது. அப்போது பாண்டே கல்கத்தா பல்கலைக்கழகத் துணைவேந்தரை அணுகி (அசுதோஷ் சவுத்ரி) உண்மையைச் சொல்லி அதனைப் பாடத்திட்டத்திலிருந்து வங்காளத்தில் எடுத்திட வைத்தார். மற்ற மாநிலங்களின் நிலை முழுவதுமாக தெரியவில்லை.

அண்ணல் மகாத்மா காந்தி 23.1.1930 யங் இந்தியா Young India இதழில் 31 ஆம் பக்கத்தில் திப்பு சுல்தான் குறித்து எழுதியுள்ளார். திப்பு சுல்தான் ஏராளமான கோவில்களுக்கு தானம் அளித்ததையும் சுதந்திரத்திற்காக பாடுபட்டதையும் குறிப்பிட்டு எழுதியுள்ளார்.

''Better a lion's life for two days than a jackal's life for two hundred years " நரியாக இருநூறு ஆண்டுகள் வாழ்வதை விட சிங்கமாக இரண்டு நாட்கள் வாழ்தல் போதும் என்று வீர கர்ஜனை காட்டியவர். திப்புவின் மதக் கொள்கைப் பற்றி Aurangazeb and Tippu Sulthan Evaluation of their Religiuos Policies Dr. B.N. Pande 1996 மற்றும் 2002 இல் டெல்லியில் இருந்து வெளியிட்ட நூலில் பக்கம் 14 முதல் 26 வரை படித்தறிந்து கொள்ளலாம். பேராசிரியர் சுரேந்திரநாத் சென் அறிஞர் டாட் வேல் ஆகியோர் திப்பு செய்தது

மதத்தின் பெயரால் அல்ல, அரசியலில் காரணங்களுக்காக ராஜாங்க காரியங்களுக்காக சில செய்திருக்கலாம் என்று திட்டவட்டமாக கூறுகிறார்கள்.

A Brief History of India என்ற நூலை பேராசிரியர் டாக்டர். மஜும்தார் (Dr. Majumdar) கல்கத்தாவில் இருந்து வெளியிட்டார் (1929)இதன் மறுபதிப்பு 1948, 1962, 1964களில் வெளிவந்தது. 1964 இல் வெளிவந்த நூலில் பக்கம் 259 இல் ஸி.சி. மஜூம்தார் குறிப்பிடுவார்...

திப்பு சுல்தான் மீது தேவையில்லாமல் பெயரை கெடுக்கின்ற கறைபடுத்துகின்ற இகழ்ச்சியை உண்டு பண்ணுகின்ற காரியங்களில் வரலாறு எழுதுபவர்கள் ஈடுபடுகிறார்கள். ஆனால் அவர் ஆற்றலாளர். விடா முயற்சியுடன் சுறு சுறுப்பாக பணியாற்றிய மன உரமிக்கவர். போற்றத்தகுந்தவர். நெஞ் சுரத்தோடு வீரமாக போரிடுபவர் என்று புகழ்கிறார்.

திப்பு சுல்தான் 1786, 1790 ஆம் ஆண்டுகளில் மதுரைக்கு வந்த போது 282 ஆம் குரு மகா சன்னிதானம் ஸ்ரீ.ஸ்ரீ பாம்பணி நாதாஜீ ஞானசம்பந்த தேசிக பரமாகாரிய சுவாமிகளை தரிசித்து உரையாடியதோடு ஆதின பூசைக்குரிய வெள்ளித் தாம்பளங்கள், தோல் முரசு, வெள்ளித் திருசின்னம், புனுகு, ஜவ்வாது, உயர்ந்த வகை அரபு நாட்டு அத்தர் வகைகள் வெள்ளி வாள், ஆண் யானை ஒன்று ஆகியவற்றை வழங்கியது அண்மையில் வெளிவந்த மதுரை ஆதின வரலாறு நூல் பக்கம் 74இல் காணப்படுகிறது.

திருவிதாங்கூரில் 108 வகையான வரிகள், தலையில் வளரும் உரோமத்திற்கும் பெண்களின் மார்பகங்களுக்கு வரி செலுத்த வேண்டும், 16 வயது முதல் 35 வயது வரையுள்ள இளம் பெண்கள் இவ்வரியை கட்ட வேண்டும், இவ்வரிக்கு எதிர்ப்பு தெரிவித்து வரி வசூலிக்கின்ற அதிகாரிகளின் தொல்லைகளைத் தாங்காத சேர்த்தலை என்ற வட்டத்திலுள்ள ஈழவப் பெண்ணொருத்தி தன்னுடைய இரு முலைகளை அறுத்து வாழை இலையில் வைத்து வரி வசூல் அதிகாரியிடம் கொடுத்தாள். அவள் இந்நாட்களில் முலைச்சிப்பறம்பு என்று அழைக்கப்படுகிறாள்.

ஜோசப் இடமருகு (மலையாளம்) தமிழில் தா. அமலா (இவர் தான் நாராயண குரு, நாளந்தா பதிப்பகம் சென்னை, 2000 பக்கம் 8) குமரி மண்ணில் கிறிஸ்தவம் என்றும் நூலின் ஜி. ஐசக் அருள் இதனை மேற்கோளாக காட்டியுள்ளார். (கேரளாவிலும் குமாரி மாவட்டத்தில் பெண்கள் பட்ட துயரங்

குறித்து தோள்சீலைப் புரட்சி குறித்தும் நூற்றுக்கணக்கான பக்கங்கள் அடியேனால் எழுதிட இயலும். அவ்வளவு ஆவணங்களை திரட்டி வைத்துள்ளேன். காலம் வரும் போது பின்னால் அது குறித்து எழுதிடலாம்)

திப்புவின் மறைவிற்கு பிறகும் கேரளாவில் பெண்களின் தூய நிலை தொடர்ந்ததை இது காட்டுகிறது.எனவே தான் ஆதிக்க சக்தியினர் திப்புவைத் தூற்றினர்.ஆங்கிலேய மற்றும் இந்திய வரலாற்று ஆசிரியர்களின் இத்தகைய போக்கினைக் கண்டு பேராசிரியர் பண்டிட் ரகுவரா தயாளு மிஸ்ரா (Pandit Raguvara Dayalu Misra) மிகவும் மன வேதனைப்படுகிறார். அவர் தான் எழுதிய ஹைதர் அலி எனும் இந்தி மொழி நூலின் முன்னுரையில் இக்காலத்தில் வரலாற்று ஆராய்ச்சி முழுவதும் இந்தியர்களின் கைகளுக்கு வந்து விட்டது. ஆனாலும் கூட இந்திய வரலாற்று ஆசிரியர்கள் பழைய அடிமை உயர்வோடு இன்னமும் ஆங்கிலேர்களைக் கண்மூ டித்தனமாகப் பின்பற்றுவது ஏன்? என்று கேட்கிறார்.

அவருடைய கேள்வி பொருளுடையது, நியாயமானது, அவருடைய கூற்றை மனதில் கொண்டு திப்புவின் வரலாற்றை ஆராய வேண்டும் என்று சுஜாவுதீன் சர்க்கார் 1983 இல் சொன்னார். ஆனால், இன்று அதை விட மோசமான நிலை. அடிமை உணர்வோடு மட்டுமல்ல புராண இதிகாச உணர்வோடு வரலாறு எழுதப்படுகிறதே, திரிக்கப்படுகிறதே, மழுங்கடிக்கப்படுகிறதே, இது நியாயந்தானா? பார் போற்றும் கவிஞர் அல்லாமா இக்பால் அழகாகச் சொன்னார்.

காவேரி ஆற்றின் கரையிலிருந்து திப்புவின் கோட்டையைப் பார்த்து விட்டு அல்லாமா இக்பால் எழுதிய புகழ் பெற்ற கவிதை ஸ்ரீரங்கப் பட்டணத்து தூசியை முத்தமிடுவதாகவும், அது புனித இடமாகவும்,மனிதரில் தலைசிறந்த வாழ்க்கை வாழ்ந்த திப்புவைப் புகழ்ந்து கொண்டே செலவார்.

ஏ! காவிரியே! கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நீ வீர நடைபோடுகிறாயே!

நீ சுமந்து செல்லும் செய்தி என்ன வென்று உனக்கு நினைவுள்ளதா?

நீ எந்த மாவீரனைச் (திப்பு சுல்தான்) சுற்றி நாள் தவறாமல் வளம் வந்து கொண்டிருக்கிறாயோ அந்த மாவீரனின் (திப்பு சுல்தானின்) குருதி (இரத்தம்) உனது அலைகளில் கொப்பளிக்கிறதே! அது தான் அந்தச் செய்தி அன்று கிழக்கு தூங்கிக் கொண்டிருந்த போது அவன் (திப்பு சுல்தான்)மட்டுமே விழித்துக் கொண்டிருந்தான்.

அல்லாமா இக்பால் கவிதை உண்மைதானே! 1799 மே 4 மாவீரன் வீழ்ந்ததற்கு பின் 1801 அக்டோபருக்கு இந்த நாடு முழுவதும் வெள்ளையர் வசம் வந்து விட்டதே! அத்தோடு வரலாற்றுப் புரட்டும் வந்தது '' வெள்ளையரோடு கூடிக் குலாவிய வஞ்சகரின் சரித்திரப் பொய்களும் நிறைந்தது. அவைகளை மாற்றிட உண்மையை உலகுக்கு உரைத்திடும் முயற்சியின் சிறு துளியே இக்கட்டுரை! இதனால் ஒருவர் பலன் பெற்றால் கூட அதுவே எனக்கு போதும்!

தீரன் திப்புசுல்தான் மத வெறியரா?

நடிகர் ரஜினிகாந்த் தீரன் திப்புசுல்தானின் வேடத்தில் நடிக் கக்கூடாது. ஏனென்றால், திப்பு சுல்தான் (20.11.175 - 4.05.1799) இந்து விரோதி என்று இராமகோபாலன் கூறியுள்ளார். அதுமட் டுமா பல ஆண்டுகளுக்குமுன் 'திப்பு சுல்தான் தேசபக்தரா? மதவெறி முஸ்லிமா?' எனும் 24 பக்கங்களைக்கொண்ட சிறு பிரசுரத்தை இரண்டு ரூபாய் ஐம்பது காசு விலையில் இந்து முன்னணி வெளியிட்டது. வரலாற்றின் உண்மை நிலை என்ன? நடுநிலைமையோடு ஆராய்வோம்!

வரலாற்றை தமக்கு ஏற்ப திரித்துக்கூறுவது இந்து முன்ன ணிக்கு, சங்பரிவாரத்திற்கு கைவந்த கலையாகும்.

நமது கண் எதிரே இன்றும் காட்சி தரும் ஸ்ரீரங்கநாதர் கோ யிலுக்கும் திப்பு சுல்தானின் மாளிகையான பட்டன் மஹாலுக் கும் இடைவெளி 200 அடி தூரம்கூட இருக்காது. இந்த சமயப் பண்பாளரையா மதவிரோதி என்கிறார்கள்?

சரத்சரன் சென்குப்தா (Sarath Charan Sengupta, Government and Administrative system of Tippu Sultan (1920) தனது நூலில், ஒரு தந்தை தன் பிள்ளைகளைக் கவனிப்பது போல், திப்பு சாகிப் நாட்டு மக்களின் நலனைப் பேணுவார் என்று வர்ணிக்கிறார். தங்களை எதிர்த்தவன். அதுவும் போர்க்களத்திலேயே சந்தித்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஒப்பற்ற வீரன் திப்பு சுல்தான் என்பதால் திப்புவைப்பற்றி ஆங்கில வரலாற்றாசிரியர்கள் குறைவாகவே எழுதியுள்ளனர். அவர்களுக்கு பின் வந்த ஹய வதனராவ் (Hayavadara Rao) இவரும் ஆங்கிலேயர் வழியிலே யே வரலாற்றை வரைகிறார். (இவர் எழுதிய History of Mysore மூன்று தொகுதிகளைக் கொண்டது. 1948ல் வெளிவந்தது. 1930ல் வெள்ளையர் ஆட்சியின்போது வெளிவந்த மைசூர் கெஜட்டின் எட்டு தொகுதிகளின் சுருக்கமே இந்த நூல் ஆகும்).

1966ல் ஹிந்தியில் பண்டிதர் ரகுவரதயாளு மிஸ்ரா எழுதிய ஹைதர் அலி நூலில் "இந்திய வரலாற்று ஆசிரியர்கள் பழைய

அடிமை உணர்வோடு இன்னமும் ஆங்கிலேயர்களை கண் மூடித்தனமாகப் பின்பற்றுவது ஏன்?" என்று வினா எழுப்புகின் றனர். அவரது கேள்வி நியாயமுடையது; பொருள் நிறைந்தது.

மைசூருக்கும், தென்னகப்பகுதிகளுக்கும், தென்னகப் பழங் கோயில்கள், மடங்கள் ஆகியவற்றைக் காணச் செல்பவர்கள் பல அதிசயக் காட்சிகளைக் காண முடியும்.

தீரன் திப்பு சுல்தான் கேயில்களுக்கும் மடங்களுக்கும் அள்ளி அள்ளிக் கொடுத்த கொடைப் பொருட்கள் இன்னும் திப்பு சுல்தானின் சமயக் கொடையை பறைசாற்றிக் கொண்டி ருக்கின்றன.

திப்பு சுல்தான் ஏதாவது ஒரு இந்துக் கோயிலை இடித்துத் தள்ள உத்திரவு பிறப்பித்தார் என்று அவர் போட்ட உத்தரவை இதுவரையில் யாரும் காட்டவில்லை.

ஸ்ரீரங்கநாதர் கோயில் மணி ஓசை குறிப்பிட்ட காலத்தில் ஒலிக்காதது கண்டு திப்பு சுல்தான் கோயில் தர்ம கர்த்தாவை அழைத்து விசாரணை செய்தார். தர்ம கர்த்தாவும் தவறுக்கு வருந்தி நின்றார் என்பது வரலாறு. (சுஜாவுதீன் சர்க்கார் எழுதி ய திப்புவின் அரசியல், 1983, 207, 208)

மைசூருக்கு மேல் திசையில் மேல் கோட்டை நரசிம்ம சாமி கோயிலில் உள்ள தோல் முரசு கி.பி. 1786ல் தீரன் திப்புசுல் தானால் தரப்பட்டது. (Mysore Archaeological Report, 1931, Page 73) மேல் கோட்டையில் உள்ள நாராயண சாமி கோவிலில் வெள்ளித் தாம்பளங்கள், தங்கத்தாலும் வெள்ளியாலும் செய் யப்பட்ட ஆராதனப் பாத்திரங்கள் பலவும் தீரன் திப்பு சுல்தா னால் அளிக்கப்பட்டவை. (Mysore Archaeological Report, 1917, Page 146, Page 211)

1916ம் ஆண்டு மைசூரில் தொல்லியல் துறையின் இயக்குந ராகப் பணிபுரிந்த ராவ்பகதூர் கே. நரசிம்மாச்சார், சிருங்கேரி கோவிலில் கடிதங்கள் அடங்கிய கட்டு ஒன்றினைக் கண்டெ டுத்தார். அதில் கோவில் மடாதிபதியின் முகவரிக்கு தீரன் திப் புசுல்தானால் எழுதப்பட்ட கடிதங்கள் 30 இருந்தன.

அந்தக் கடிதங்கள் திப்பு சுல்தானின் மதச்சார்பற்ற கொள் கைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. (Mysore Archaedogical Report, 1916 பக்கம் 1011, பக்கம் 73-76)

1988ல் திப்பு சுல்தான் ஒரு மதவெறியரா? என்று 100 பக் கங்களைக் கொண்ட நூலினை சங்கீத சிரோமணி ஜலஜா சக்திதாசன் M.A., M.Ed.

ஆதிசங்கரர் பாறையொன்றில் நிறுவியது சிருங்கேரி ஸ்ரீசாரதா பீடம். இதன் 30வது ஆச்சாரியார் ஸ்ரீ சச்சிதானந்த பாரதி III. அவரது காலம் 1770-1814. இந்த கால கட்டத்தில்தான் திப்புசுல்தானின் கடிதங்கள் எழுதப்பட்டன.

கே.எஸ். குளத்து அய்யர் எழுதிய ஸ்ரீ சங்கர வம்சம் சிருங்கேரி ஸ்ரீசாரதாபீடம், சென்னை 1984ல் வெளியிட்ட 169 பக்கங்களைக் கொண்ட நூலில் பக்கங்கள் 104, 105ல் திப்பு சுல்தான் காணிக்கை என்ற தலைப்பில் திப்பு சுல்தான் சிருங்கேரி மடத்திற்கு செய்த தானத்தை கே.எஸ். குளத்து அய்யர் விளக்கியுள்ளார்.

K.R. வெங்கட்ராமன் எழுதிய The Throne of Transcendental wisdom Sri Sankaracharya's Sarada Pita in Sringeri, 1959 நூலில் பக்கம் 77-79யிலும் இந்த விவரங்களைக் காணலாம்.

Sringeri Souvenir, 1963 சென்னையிலிருந்து வெளிவந்தது. அதில் பக்கம் 69ல் Sringeri Gurus and Muslim Rulers எனும் கே. ஆர். வெங்கட்ராமன் கட்டுரை தொடங்கி, 71வது பக்கத்தில் நிறைவடைகிறது. அதில் பக்கம் 71ல் திப்புசுல்தான் சிருங்கேரி மடத்திற்கு வழங்கிய தானங்கள் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறதா இல்லையா?

1958ல் ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் எழுதிய ஸ்ரீசிருங்கசிரி மஹிமை எனும் நூலில் பக்கம் 53, 54, 55ல் திப்பு சுல்தான் சிருங்கேரி மடத்திடம் நல்ல உறவு கொண்டிருந்தார் என்பதை விளக்குகிறதா இல்லையா?

திண்டுக்கல் வக்கீல் பி.கே. ஷண்முகநாதர் 1966ல் எழுதிய உயர்வரிய மெய்ஞ்ஞானம் ஓங்கு பெரும்பீடம் சிருங்கேரி வியாக்யான பீடத்தின் குல பரம்பரை வரலாறு எனும் 208 பக்கங்களைக் கொண்ட நூலில் பக்கம் 8183ல் சொல்லும் செய்தி இதோ:

'1971ம் ஆண்டு மராத்திய படைத்தளபதிகளில் ஒருவனான ரகுநாத் ராவ் பட்வர்த்தன் தலைமையிலான குதிரைப் படையொன்று சிரிங்கேரிக்குள் புகுந்து சூறையாடியிருக்கிறது. அப்போது பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். எண்ணற்றோர் படுகாயமடைந்திருக்கின்றனர். அவர்களில் பிராமணர்களும் அடக்கம். மடாலயத்தின்

சொத்துகள் அபகரிக்கப்பட்டன. மடத்திலிருந்த புனிதப் பொருட்களை மதியாது, அவமரியாதையாக நடந்து கொண்டிருக்கின்றனர். அங்கிருந்தப் பெண் கடவுள் சாரதாவின் சிலையைத்

தூக்கியெறிந்துவிட்டனர். இதையெடுத்து, அங்கேயிருக்க இட மில்லாமல் மடாதிபதி இடம் பெயர்ந்து கரக்காலாவுக்கு வந் துவிட்டார். அவர் திப்புவுக்கு மராத்தியக் குதிரைப் படையின் அட்டகாசத்தை விளக்கி ஒரு கடிதம் எழுதி, சிலையைப் புத்து தாரணம் செய்ய உதவி கேட்டிருந்தார். அதைக் கேட்டு கோ பமும், துக்கமுமாகிப் போன திப்பு அக்கடிதத்துக்குப் பதில ளித்தார். அதில், 'புனிதமான அந்த இடத்தில் இதுபோன்ற கேவலமானப் பாவச் செயல்களில் ஈடுபட்டவர்கள், தங்களின் குற்றச் செயல்களுக்கான விளைவுகளை நிச்சயம் அனுபவிப் பார்கள். 'கலியுகத்தின் செய்யுளான தவறுகள் செய்யும்போது சிரித்தவர்கள் அதற்கானத் தண்டனையை பெறும்போது அழு வார்கள்' (hasadhbih kriyate karma rudadbhir anubhuyate) அதற்கான நாள் வெகுதூரத்தில் இல்லை. குருவுக்குத் துரோகமிழைத்தவர் களின் பரம்பரை அழிவுக்குள்ளாகும் என்று எழுதியவர், உடன டியாக பெத்னூர் அஸாபுக்கு உத்தரவிட்டு 200 ரஹாதிஸ் பணம் ரொக்கமாகவும், 200 பணமதிப்புக்கு அரிசியும் மற்ற பொருட் களும், சாரதா சிலையை புத்துதாரணம் செய்ய உதவியும் செய் தார்.

மதுரை தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவந்த மாத இதழ் செந்தமிழ் (தற்போதும் வந்து கொண்டிருக்கிறது) மார்ச் 1922 இதழில் வால்யூம் 20, எண் 4 முகப்பு அப்படியே இதோ:

இந்த இதழில் மதுரை ஆர்.எஸ். நாராயணஸ்வாமி ஐயர் எழுதிய கட்டுரை பக்கம் 162,163,164ல் வந்துள்ளது. இதோ அக் கட்டுரை அப்படியே.

சிருங்கேரிமடம்

(குறிப்பு: அடியிற்கண்ட கடிதங்கள் 18ஆம் நூற்றாண்டினிறு தியில் எழுதப்பட்டவை. அவற்றில் நமது தேசசரித்திர புருஷர் களின் தன்யோன்யபாவனைகளும் சரித்திர ஆராய்ச்சிக்குதவி யான விஷயங்களும் அடங்கியிருப்பதால் அவை இங்ஙனம் எழுதி வெளியிடப்பட்டன. R.S.N)

கடிதம் I

மைசூர் ராஜ்யாதிபதி திப்புசுல்தான் அவர்கள் ஸ்ரீமத் பரம ஹம்ச... ஜகத்குரு சிருங்கேரி ஸ்ரீசச்சிதானந்த பாரதிஸ்வாமிகள் அவர்களுக்கு.

மர்யாதையுடன் கேட்டுக் கொண்ட பிரகாரம், ப்ரிஞ்சாரி முதலான கொள்ளைக்காரர் உபத்ரவம் செய்யாமற் காக்கும்

பொருட்டு, கொப்பம் தாலூகா ஆமல்தாருக்கு உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடன், மடத்தின் பந்தோபஸ்துக்காக ஒரு சிப்பாய்ப்பட்டாளமும் அனுப்பப்பட்டிருக்கிறது.

கடிதம் II

ஹிஜரா 1219 = (இங் 1791)

மார்க்க சீர்ஷ சுக்லபசஷ ஷஷ்டி.

மர்யாதையுடன், ராஜ்யப்பகைவர் நாசத்திற்காக, எங்கும் ஜபங்கள் நடத்தவேண்டுமென்றும், அதனால் ஏற்படும் செலவுகளுக்கு ஜாப்தா அனுப்பவேண்டுமென்றும் பிரார்த்திக்கப்படுகிறது.

கடிதம் III

ஹிஜரா 1219=(இங் 1791)

மர்யாதையுடன், கேட்டுக்கொண்டப்ரகாரம், வைதிக கர்மாக்கள் நடத்துவதில், யாரும் விக்னம் செய்யாமல் பந்தோபஸ்து செய்யும்படி, உத்தரவளித்திருக்கிறோம் என்பது இதன்மூலமாயறிவிக்கலாயிற்று.

சிருங்கேரிமடம்

கடிதம் IV

ஹிஜரா 1219 (இங் 1791)

ஸர்தார், ஸபத் மஹமத் அவர்களுக்கு,

சிருங்கேரி ஸ்வாமிகள் ஸமுத்திரஸ்நாநத்துக்குச் செல்லுகிறார்கள். அங்கங்கே ஜாகைகள் சௌகரியப்படுத்திக் கொடுக்க வேண்டும். போய்த் திரும்பவந்துசேரும்வரை, அவர்களுக்கு 20 பேர் ஸஹாயத்துக்காக அனுப்ப வேண்டும். தமது சிஷ்யரில் தர்மப்பிரஷ்டாவோர்களை, ஸ்வாமிகளே விசாரணைசெய்து கொள்ள உரிமையிருக்க வேண்டும்.

கடிதம் V

ஹிஜரா 1219 (இங் 1791)

மைசூர்ராஜ்யத்திலுள்ள கிலாதார்களுக்கும் அமுல்தார்களுக்கும் சிருங்கேரிமடசம்பந்தமான காரியமவய்ப்போய்வரும் ஜனங்களை ஹிம்ஸிக்கவே கூடாது.

கடிதம் VII

ஹிஜரா 1219 = (இங் 1791)

மைசூர்ராஜ்யத்திலுள்ள கிலாதார்களுக்கும் அமுல்தாரர் களுக்கும், சிருங்கேரிஸ்வாமிகள் யாத்திரையாய் வருகிறார்கள். நீங்களெல்லோரும் ஸர்வ ஜக்ரதையாயிருந்து, வேண்டிய மரி யாதைகள்செய்து, தலைநகர்வரும்வரை அவர்களுக்கு வழியில், வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கவேண்டும்.

கடிதம் VII

ஹிஜரா 1220 = (இங் 1792)

ஹைதராபாத் நிஜாம் அவர்களின் ப்ரதானமந்திரி சந்தலால் அவர்கள் ஸ்ரீமத் பரமஹ்ச... ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு நரசிம்ம பாரதி ஸ்வாமிகளுக்கு,

மிக்க மரியாதையுடன், ஸ்வாமிகள் செய்யும் கங்காமஹா யாத்ரையில் இந்த ராஜ்யத்தில் விஜயம் செய்வதாய் எண்ணங் கொண்டது, தாஸனுக்கு விசேஷ சந்தோஷமும், இத்தேசத்திற் குப் பெரும் பாக்கியமும் விளைவிக்கத்தக்கதாயிருக்கிறது.

இத்தேசத்திலுள்ள கர்மஸந்யாஸிகளும், ஞானசந்யாசிகளும், அவதூதர்களும், பதினெண்ஜாதியாரும், வகுப்பினரும், தம் தம் கர்மானுஷ்டானங்களை முறைதவறாது செய்து வருகிறார்களா வென்று விசாரணை செய்யவும், அவரவர் தர்மத்தில் அவரவ ரை நிலைபெறச்செய்யவும், ஸ்வாமிகளே பரமாதிகாரிகள்.

மதவிஷயத்தில் ஸந்நிதான ஆணையை ஒருவரும் மீறக்கூ டாதென்று இந்த ஸமஸ்தானாதிபதியான நிஜாம் அவர்களும், கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை இதன்மூலமாய் ஸந்நிதானத்துக்கு வணக்கமாய் அறிக்கை செய்து கொண்டேன்.

ஆர்.எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி.ஏ., பி.எல்., மதுரை ('செந்தமிழ்' இதழில் வெளியான கட்டுரை)

தீரன் திப்பு சுல்தானின் தந்தை ஹைதர் அலி காலத்தில் இருந்தே இந்துக்களைப் போற்றியுள்ளார்.

நாட்டின் பொறுப்புமிக்க உயர்ந்த பதவிகளில் ஹைதர் அலி இந்துக்களை நியமனம் செய்திருந்தார். திப்புவும் தனது தந்தையின் கொள்கையை அப்படியே அடியொற்றினார். பூர ணையா மிக முக்கியமான பதவியான மீர் அஸாபாக இருந்து

வந்தான். கிருஷ்ணா ராவுக்கு கருவூல அதிகாரி பதவி கொடுக்கப்பட்டிருந்தது. சாமையா அய்யங்காருக்கு தபால் மற்றும் காவல்துறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருந்தது.

அவனது சகோதரன் ரங்கா அய்யங்கார் மற்றும் நரசிங்க ராவ் ஆகியோர் தலைநகர் ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் மிக உயர்ந்தப் பதவிகளில் அமர்த்தப்பட்டிருந்தனர். ஸ்ரீனிவாஸ் ராவும் அப்பாஜி ராவும் திப்புவின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்து, முக்கியமானத் தூதுக் குழுக்களில் இடம் பெற்றிருந்தனர். மொகலாயர்களின் அரசவையில் மூல்சந்த் மற்றும் சுஜன் ராய் ஆகியோர் திப்புவின் தலைமைப் பிரதிநிதிகளாக இயங்கி வந்தனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக திப்பு தனது ஆதரவை சிரிங்கேரி கோவிலுக்கு மட்டுமின்றி, தனது சாம்ராஜ்ஜியத்திலுள்ள மற்ற கோவில்களுக்கும் விரிவுப்படுத்தியிருந்தார். நஞ்சன்கூட தாலுகாவிலுள்ள கலாலே கிராமத்தின் லட்சுமிகாந்தா கோவிலில் நான்கு வெள்ளிக் கிண்ணங்கள், வெள்ளித் தட்டு மற்றும் வெள்ளி எச்சில் படிக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளின் வழியே திப்பு அவற்றை அக்கோவிலுக்குப்

பரிசாக அளித்திருக்கிறார் என்பது தெளிவாகிறது. அதுபோலவே, மேலுக்கோட்டிலுள்ள நாராயணசாமி கோவிலிலுள்ள சில நகைகளும், தங்க மற்றும் வெள்ளிப் பாத்திரங்களிலும் உள்ள எழுத்துக்கள், அவை திப்பு பரிசளித்ததாக நமக்குக் கூறுகின்றன. இதே கோவிலுக்குத் திப்பு 1785ஆம் ஆண்டில் பன்னிரெண்டு யானைகளும், 1786ஆம் ஆண்டில் கெட்டில்டிரம் என்ற பெரியதொரு இசைக்கருவியையும் வழங்கியிருக்கிறார். நஞ்சன் கூட்டிலுள்ள ஸ்ரீகந்தேஸ்வரா ஆலயத்திலுள்ள விலைமதிப்பற்ற ஐந்து கற்களை அடியில் கொண்ட நகைக் கிண்ணம், திப்பு சுல்தான் பாதுஷாவால் வழங்கப்பட்டது. ஸ்ரீரங்கப்பட்டிணத்திலுள்ள ரங்கநாதர் கோவிலின் ஏழு வெள்ளிக் கிண்ணங்களும், சூடம் எரிய வைக்கும் கரண்டியும் திப்புவால் வழங்கப்பட்டவை என்று அவற்றில் பதிவிடப்பட்டுள்ளது. நஞ்சன்கூட் நஞ்சன்டேஸ்வரா ஆலயத்தின் பஞ்சை மரகதலிங்கம் பச்சா அல்லது பாதுஷா லிங்கா என்று அழைக்கப்படுவதிலிருந்து, திப்புவின் உத்தரவில் அது நிறுவப்பட்டது என்று அறிய முடிகிறது.

(மைசூர் ஆர்க்கியாலாஜிகல் ரிப்போர்ட் 1912, பக்கம் 2340. மேற்கோள் மொஹிபுல் ஹசன் எழுதிய History of Tipu Sultan, 1951. page 357 *தமிழாக்கம்: திப்புசுல்தான், எதிர் வெளியீடு, பக்கம் 413.*

எனது உறவினரும் மறைந்த பேராசிரியருமான ஏ.பி. இப்ராஹிம் குஞ்சு, மைசூர் கேரள உறவு 18ம் நூற்றாண்டில் என்ற நூலில் கேரளத்தில் திப்பு சுல்தான் கோவில்களுக்கு வழங்கிய 165 தானங்களை 90வது பக்கம் முதல் 128வது பக்கம் வரை விவரித்துள்ளார்.

அதில் சில மட்டும் இதோ:

1.எரநாடு தாலுகாவின் செலம்பரா அம்சத்திலுள்ள மன்னூர் கோவிலுக்கு 70.42 ஏக்கர் ஈரநிலமும் 3.29 ஏக்கர் தோட்ட நிலமும்.

2.பொன்னானி தாலுகாவின் வைலத்தூர் அம்சம் திருவாஞ்சிக்கும் சிவா ஆலயத்துக்கு 46.02 ஏக்கர் ஈரநிலமும் 3.29 ஏக்கர் தோட்ட நிலமும்.

3.பொன்னானி தாலுகாவின் குருவாயூர் அம்சம் குருவாயூர் கோவிலுக்கு 46.02 ஏக்கர் ஈரநிலமும் 458.32 ஏக்கர் தோட்ட நிலமும்.

4.கள்ளிக்கோட்டை தாலுகாவின் கஸ்பா அம்சா திருக்கண்டியூர் வெட்டக் கொரும்மக்கன்காவு கோவிலுக்கு 122.70 ஏக்கர் ஈரநிலமும் 73.36 ஏக்கர் தோட்ட நிலமும்.

5.பொன்னானி தாலுகாவின் கடிகாடு அம்சம் கட்டுமாடத்தில் ஸ்ரீகுமரன் (நம்பூதிரிபாட்) கோவிலுக்கு 27.97 ஏக்கர் ஈரநிலமும் 6.91 ஏக்கர் தோட்ட நிலமும்.

6.பொன்னானி தாலுகாவின் திருக்கண்டியூர் அம்சம் திருக்கண்டியூர் சமூகக்கோவிலுக்கு 20.63 ஏக்கர் ஈர நிலமும் 41 ஏக்கர் தோட்ட நிலமும்.

7.திருச்சூர் நடுவில்மாடத்தில் திருமும்முவுக்கு 40.26 ஏக்கர் ஈரநிலமும் 22.13 ஏக்கர் தோட்ட நிலமும் 4.17 ஏக்கர் மானாவாரி நிலமும்.

சகலவழிகளிலும் இந்துக்களுக்கும் இந்துக் கோவில்களுக்கும் பிராமணர்களுக்கும் ஆதரவாகச் செயல்பட்ட திப்பு, அவர்களின் பாதுகாப்புக்கும் வளமைக்கும் உறுதுணையாக இருந்த ஆட்சியாளர் திப்பு, அவர்களிடம் சகிப்புத்தன்மையையும், பெருந்தன்மையையும் காட்டிய திப்பு, அவர்களின் நம்பிக்கையைப் பாதுகாத்துவிட்டு, இந்துக்களின் மதச்செயல்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் காரியங்களில் எப்படி தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்க முடியும்? என்று வினா தொடுப்பார் பேராசிரியர் மொஹிபுல் ஹஸன்.

இந்து தேவஸ்தானங்களுக்கும் கோயில்களுக்கும் 1,93,959 வராகன்கள் திப்புவின் கஜானாவிலிருந்து வழங்கப்பட்டன.

பிராமணர் மடங்களுக்கு 20,000 வராகங்கள் அதுபோலவே, இஸ்லாமிய மதரஸாக்களுக்கும் 20,000 வராகங்களே வழங்கிய சமயப் பொறையாளர் தீரன் திப்பு சுல்தானை குறை சொல் வோர் வரலாறு பக்கங்களின் உண்மையினை உணர்ந்தால் சரி. அல்லது உணர்ந்தும் உணராததுபோல உளறிக் கொண்டிருந்தால் உண்மைத் தன்மையை உலகம் புரியாமலா போகும்!

தீரன் திப்பு சுல்தானின் கடைசி நாளில்...

காவிரியாற்றின் இரு கிளைகளில் உண்டான தீவு ஸ்ரீரங்கப் பட்டிணம், காவிரியின் மேல் முடிவில் அமைந்திருக்கிறது. ஹைதர் அலீ காலத்தில் இது மைசூர் ராஜ்யத்தின் தலைநகரமா யிற்று. இதனைக் கைப்பற்றிட வெள்ளையர் சூழ்ச்சி, துரோகம் செய்து இறுதியில் மாவீரன் திப்பு சுல்தானை வீழ்த்தினர்.

14.02.1799ல் ஜெனரல் ஹாரிஸ் தலைமையில் *21,000* வீரர்களைக் கொண்ட பெரும்படை வேலூரில் அணிவகுத்து அன்று இரவே அப்படை மைசூர் எல்லையை நோக்கிப் புறப் பட்டது.

20.02.1799ல் ஆம்பூர் அருகே ஹைதராபாத்திலிருந்து வெல் லெஸ்லியின் தலைமையின் கீழ் வந்த *16,000* வீரர்களும் சேர்ந்து கொண்டனர்.

6420 வீரர்களைக் கொண்ட பம்பாய் இராணுவம் ஜெனரல் ஸ்டூவர்ட் தலைமையில் கண்ணூர் அருகே அணிவகுத்து தயா ரானது.

கர்னல் ரீட் (Colonel Read) கர்னல் பிரவுன் (Colonel Brown) தலைமையிலான ஆங்கிலேய படைகள் திருச்சி ஸ்ரீரங்கத் திலிருந்து அணிவகுத்து *5.03.1799ல்* மைசூர் எல்லைக்குள் நுழைந்தன.

11.03.1799 வரை பெரியபட்டிணத்திலே இருந்து திப்பு சுல்தான் ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு வந்தார்.

மைசூர் படையின் தளபதிகள் ஆங்கிலேயர்களுடன் திருட் டுத் தொடர்பில் இருந்ததால், வெள்ளையரது முன்னேற்றத்தை தடுத்திடவில்லை. *(Muhibbul Hasan khan, History of Tippu Sulthan, Calcutta, 1951)*

18.03.1799ல் நடந்த போர் பற்றி ஆர்தர் வெல்லெஸ்லி கூறுகின்றார். “முன்னெப்போதும் இல்லாத அளவில் திப்பு சுல்தானின் படை மிக அற்புதமாக இருந்தது. திப்புவின் கா லாட்படை மிக முன்னேறியிருந்தது. ஆங்கிலேயரின் 33வது

படையை திப்புசுல்தானின் படைகள் துவம்சம் செய்தன. திப்பு சுல்தானின் குதிரைப்படை, ஜெனரல் பெயர்ட்டின் ஐரோப்பிய படையை ஓட ஓட விரட்டியடித்தது.

வெள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதும் திப்புசுல்தான் படைகள் உடனே போரில் இறங்கியிருக்க வேண்டும். அப் படி நடக்கவில்லை திப்புவிற்கு துரோகம் இழைக்கப்பட்டது. இதனால் வெள்ளையர் முன்னேறினர். போரில் தோல்வி என் பது சுல்தான் நம்பி களம் இறக்கிய தளபதிகள் செய்த துரோ கத்தால் விளைந்தது ஆகும். பூரணய்யாவும் அலீ சயீத் சாகிபும் நடந்து கொண்ட விதம் அருவருக்கத்தக்கது. அவர்கள் அந்த தருணத்தில் ஆங்கிலேயர்களை எதிர்த்து நின்று தங்களது சக்தி யைக் காட்டியிருக்க வேண்டும்.

கமர்உத்தீன்கான் தனது குதிரைப்படையுடன் ஆங்கிலேயர் மீது போரில் ஈடுபடும்போது தவறு தலாக மைசூர் படை வீரர்கள் மீது தாக்குதல் விழுந்தது. அது அத்தனையையும் சீர்கு லைத்துவிட்டது. இப்படிப்பட்ட சூழ்ச்சியில் திப்புசுல்தானின் தோல்வி தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது.

(Husain Ali Khan Kirmani, The History of Hyder Naik, London, 1842. The History of the reign of Tippu Sulthan, London, 1864)

போர்க்களக் காட்சிகள் வீரம் செறிந்தவை, துரோகம் மிகுந் தவை.

3.05.1799

ஸ்ரீரங்கப்பட்டணத்து கோட்டைச் சுவற்றில் முதல் உடைப்பு ஏற்படுத்தப்பட்டது. அன்று இரவு வெள்ளை அதிகாரிகள் அரண்மனை சரிவுகளில் கடந்து சென்று சுவற்றில் ஏற்பட்டி ருந்த பிளவையும், கோட்டைத் தாக்குதல் முறையையும் ஆய்வு செய்தனர்.

4.05.1799

3,000 ஐரோப்பியர்கள், 2000 சுதேசி வீரர்கள் என ஐயாயிரம் பேர் வெள்ளையர் சார்பில் தாக்குதலைத் தொடுக்க தயாராக இருந்தனர். குறிப்பிட்ட நேரம் வந்தது. துரோகம் வெளிப் பட்டது. மீர் சவதிக் கோட்டையின் பிளவுப் பகுதியில் கா வலுக்கு இருந்த தனது (திப்பு சுல்தானின்) படை வீரர்களை சம்பளம் போடப்படுகிறது என்று சாக்குச் சொல்லி அங்கிருந்து அனுப்பிவிட்டான்.

ஸ்ரீரங்கப்பட்டிணக் கோட்டையின் வடக்குப்பகுதியில் இரண்டு மதிற் சுவர்கள் இருந்தன. அதேபோல கிழக்கு மேற்குப்பகுதிக்கு எதிரிகளால் நெருங்க முடியாதபடி இரண்டு பெரிய நீண்ட ஆழமான அகழிகள் சுவர்களின் இரு மருங்குகளிலும் இருந்தது. தென் மேற்குப்பகுதியில் ஒரு பெரிய உயர்ந்த சுற்று வட்டமான சுவர் இருந்தது. கோட்டையின் உட்பகுதியிலும் தெற்கு சுற்றுச் சுவர்களின் உச்சியில் அதாவது மேல் தளங்களிலும் மறைந்திருந்து தாக்குவதற்குரிய முறையில் அமைந்து இருந்தது.

கோட்டைச் சுவர் 30 முதல் 35 அடி வரை உறுதியாகவும், கனமாகவும் இருந்தது. நீண்ட சதுரமான பாறைகளே உபயோகிக்கப்பட்டிருந்தன. பாறைகளை ஒன்று சேர்க்க பக்கவாட்டுகளில் கிளிஞ்சல் சுண்ணாம்பும் காறையும் கொண்டு பூசப்பட்டிருந்தது.

கோட்டைக்கு நான்கு வாயில்கள் நான்கு திசையிலும் இருந்தன.

இந்தக் கோட்டையில் ஒரு சுவரில்தான் விரிசல் ஏற்படுத்தினர். பூர்ணய்யா, மீர் சாதிக், குலாம் உத்தீன் கான் ஆகிய மூவரும் வெள்ளையருடன் சேர்ந்து துரோகம் செய்தனர்.

மீர் சாதிக், திப்புவின் படைத்தளபதியில் ஒருவரான நாதிம் என்பவனை அழைத்து கோட்டைக் காவல் பட்டாளத்திற்கு சம்பளம் பட்டுவாடா செய்யப்படுவதால், சம்பளம் பெற்றுப் போகும்படி அறிவிப்பு செய்தான். உள்கோட்டை காவல் வீரர்கள் நாதிம் கூற்றுப்படி நகருக்குள் சம்பளத்திற்காக காத்துக் கிடக்கும் வேளையில் கும்பினிப் படைகள் கோட்டைக்குள் நுழைய ஆரம்பித்தன.

(Mark Wilks, Historical sketches of the south of india in an attempt to trace the history of Mysore, Volume II, First Edition, 1810).

தீரன் திப்பு சுல்தானின் வீரமிக்க விசுவாசம் நிறைந்த தளபதி சயீத் கஃபார் பறங்கியரின் பீரங்கித் தாக்குதலுக்குப் பலியானார். சயீத் கஃபார் வீரமரணம் அடைந்ததும் கோட்டைக்குள் இருந்த துரோகிகள் எதிரிகளுக்கு சமிக்கை காட்டினர்.

கோட்டைக்குள் இருந்து வெள்ளை நிறக் கைக்குட்டையை அசைத்து அகழிக்குள் தயாராய்க் காத்து நின்ற கும்பினிப் படைகளுக்கு சமிக்கை செய்யப்பட்டது.

(பிரெஞ்சுக்காரர்களும் திப்பு சுல்தானுக்கு துரோகம் செய்தனர். 1798 ஏப்ரல் மாதத்தில் திப்பு சுல்தான் பிரெஞ்சுப் படையினர் 40,000 பேர் தனக்கு உதவிக்கு தேவையென்று கேட்

டிருந்தார். ஆனால், பிரெஞ்சுப்படையினர் வெறும் நூறு மட்டுமே திப்புசுல்தானுக்கு உதவிக்கு அனுப்பப்பட்டனர்.

திப்புசுல்தான் ரிப்பார்ட் (Ripard) என்ற பிரெஞ்சுத் தளபதியின் உதவியாளரிடம் கப்பல் வாங்கக் கொடுத்த பணத்துடன் அவன் காணாமல் போனதும் துரோகம்தான்.)

திப்பு சுல்தானிடம் பணிபுரிந்த பிரெஞ்சு தேசத்து டியூபெக்கிடம் 4.05.1799 மதியம் 1 மணியளவில் மீர்சாதிக் சமிக்கை செய்தான்.

அதன்பின் கும்பினிப்படை தாக்குதலை தொடுத்தது. அன்று மதியம் 1.30 மணியளவில் மீர்சாதிக் வெள்ளைத் துருப்புகளுக்கு சமிக்கை செய்தான்.

ஹைதராபாத் நிஜாமுக்கும் திப்பு சுல்தானுக்கும் இடையே என்றுமே நேச உறவு இருந்ததில்லை. மராட்டியப் படைகள் ஸ்ரீரங்கப்பட்டிண உடன்படிக்கைக்குப் பின் திரும்பிச் சென்றபோது எப்படி கொள்ளையிட்டு சென்றனவோ அவ்வாறே நிஜாம் படைகளும் அப்போது எதிரில் அகப்பட்ட பொருளைச் சூறையாடியதுடன் பயிர்களையும் அழித்து நாசம் செய்தன.

கர்னூல் ஜில்லா முழுவதையும் நிஜாம் வைத்துக் கொள்ள முயன்றதை திப்பு சுல்தான் ஏற்கவில்லை. இருவருக்கும் இடையே கசப்பு நிலையே இருந்தது. எனவே, நிஜாமும் திப்பு சுல்தானுக்கு எதிராகவே துரோகம் செய்தான்.

3.05.1799ல் ஸ்ரீரங்கப்பட்டிணத்து கோட்டைச் சுவரில் வடமேற்கு மூலையில் சுவர் மூச்சுவிட்டு நின்று கொண்டிருந்ததைப் பார்த்த திப்பு சுல்தான் அவைகளைப் பலப்படுத்திட உத்தரவிட்டார். ஆளுநர் மீர் சாதிக் ஒப்புக்கு சில பூச்சுகளை செய்து தனது துரோகத்தை வெளிப்படுத்தினான். ஆங்கிலேயர் குறி பார்த்து பீரங்கி கொண்டு தாக்கவும் சுவரில் பெரிய பாதை விழுந்தது.

4.5.1799 அன்று திப்பு சுல்தான் சத்திரத்திற்கு வந்தார். உணவை கொண்டு வர சொன்னார். சாப்பிடத் தொடங்க ஆரம்பித்தபோது சையத் கமரின் மரணச் செய்தியும் வந்தது. எழுந்து சென்ற திப்புசுல்தான் தன் எதிரே அரசாங்க ஊழியர்கள் கண்ணில் படாததால் தனது மெய்க்காப்பாளர் ராஜாக்கான் மற்றும் வேலைக்காரர்கள் இருபது பேருடன் சுவர் இடிந்த திசைக்கு ஓடினார். திப்பு அங்கு வருவதற்கு முன்பே வெள்ளையர் அப்பகுதியில் அவர்களது கொடியினை ஏற்றி இருந்தனர். பாதுகாப்பு அரண்களைக் கைப்பற்றவும் முன்னேறினர்.

கடும் போர் திப்பு சுல்தான் தரை இறங்கி சாதாரண போர் வீரனைப் போல போர்க்களத்தில் நின்று தனது வீர வாளைச் சுழற்றினார். திப்புவின் துருப்புகள் சிதறியிருந்தன. தனது குதிரையில் ஏறி தண்ணீர் வழிந்தோடிய மதகு அருகில் இருக்கும் சிறு வழியை நோக்கிச் சென்றார்.

திப்பு சுல்தான் தப்பிச் செல்ல நினைத்திருந்தால் அது அவருக்கு எளிதான ஒன்றாகவே இருந்திருக்கும். திப்பு சுல்தானுக்கு மிக அருகில் மதகு இருந்தது.

கோட்டையில் இடிந்த சுவர்ப் பக்கம் 600 அடி தூரத்தில் உயரமான சுவர் ஒன்று இருந்தது.

அந்தச் சுவரில் ஒரு சிறு கதவு. அதன் வழியாகத்தான் வீரர்களுடன் குதிரையை செலுத்திக் கொண்டு வந்தார் திப்பு சுல்தான்.

மீர் சாதிக் தந்திரமாக கோட்டைக் கதவின் உட்புறமாக நின்று கொண்டதோடு நில்லாமல் திப்பு சுல்தானும் அவருடன் வந்தவர்களும் போர்க்களம் சென்றபோது கதவைப் பலமாக மூடி தாள் போட்டு விட்டவன். மீர்சாதிக் உடனிருந்த மீர் நாயிம் தளத்தின் மீது ஏறி வேறு யாரும் கதவைத் திறந்து விடாதபடி இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டான்.

கதவு மூடப்பட்டதை அறியாத தீரன் திப்பு களத்தில் எதிரில் வந்த ஆங்கிலேயர்களை கொன்று குவித்துக் கொண்டிருந்தார்.

திப்புவின் காலில் காயம்பட்டது. குதிரையுடன் கோட்டைக்குள் செல்லலாமே என்றால் அந்தப் பக்கத்து கோட்டைக் கதவு மூடிக் கிடந்தது. மீர் நாயிம் குள்ள நரி போல மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். கதவைத் திறக்கவில்லை.

இப்போது தீரன் திப்புவிடம் அவரது மெய்க்காப்பாளர் ராஜாகான், “மன்னரே, தாங்கள் இன்னார் என்று தெரிவித்தால் உடனே கதவைத் திறப்பார்கள்” என்று ஆலோசனை சொன்னான். திப்பு சுல்தான் அதற்கு உடன்படவில்லை.

வாசல் அருகே வந்த திப்பு சுல்தான் இரண்டாவதாகவும் காயம்பட்டார். வெள்ளையர் படை துப்பாக்கியால் சுட்டும் தீவைத்து அழித்துக் கொண்டே வந்தது. திப்புவின் மீது மூன்றாவது காயம் ஏற்பட்டது. அவரது நெஞ்சின் இடதுபுறம் குண்டுகள் துளைத்தன. உடனிருந்தவர்கள் திப்புவை தூக்கிச் செல்ல முயன்றனர். முடியவில்லை.

திப்புவின் குதிரையும் கொல்லப்பட்டது. எங்கும் மரணம் அடைந்தவர்களின் சடலங்கள், கூக்குரல்கள். கீழே விழுந்து

கிடந்த திப்பு சுல்தானின் இடுப்பில் ஒரு அழகிய விலையுயர்ந்த தங்கபட்டை. அதில் உடைவாள் சொருகப்பட்டிருந்தது. மினு மினுக்கும் தங்க கச்சையைக் கண்டதும் கும்பினி சிப்பாய் ஒரு வன் திப்புவின் இடுப்பில் இருந்து எடுக்க எத்தனித்தான்.

இடது மார்பில் ஒரு குண்டும் மற்றொரு குண்டு நெற் றிப் பொட்டிலும் மூன்றாவது குண்டு வலது காதுக்கு மேலா கப்பாய்ந்து தாடை வரை சென்று தைத்து விழுந்து கிடந்த நிலையிலும் தசை இடுப்புக் கச்சையை எடுக்க குனிந்த ஆங் கிலேய சிப்பாயை தன்னந்தனியாக, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில், தன் வீர வாளுக்கு இரையாக்கியவர் தீரன் திப்பு. அப்போது வீரனின் துப்பாக்கி திப்பு மீது குண்டு களைப் பொழிந்தது. இப்போதும் திப்பு இன்னொரு பிரிட்டீஷ் வீரனை தாக்கிச் சாய்த்தார்.

(A. Allan, An account ot the campaign in Mysore (1799), calcutta, 1912).

ஆங்கிலேயப் படைகள் அரண்மனைக்குள் புகுந்தன. சல் லடை போட்டுத் தேடின. திப்பு சுல்தானின் உடலைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. போரின் போது காயம்பட்ட திப்பு சுல் தான் கோட்டையின் வடக்கு வாசல் அருகே வீழ்ந்து கிடப் பதை அங்கிருந்து வந்த படைத்தலைவர் சொன்னான்.

மேஜர் பெயர்டு மற்றும் சில சதிகாரர்கள் திப்பு வீழ்ந்து கிடந்த இடத்திற்கு விரைந்தனர். திப்புவின் பல்லக்கு கண்டுபிடிக்கப்பட்டது. மெய்க்காப்பாளர் ராஜாகான் மரணத் தருவாயில் போராடிக் கொண்டிருந்தார்.

மேஜர் பெயர்டுக்கு, ராஜாகான் திப்பு சுல்தான் போர்க் களத்தில் வீரத்தழும்புகளுடன் வீழ்ந்து கிடந்த இடத்தை அடையாளம் காட்டினார்.

சிறந்த வெள்ளை நிறத்தில் ஆன மேற்சட்டை, பூ வண்ணம் கொண்ட தொள தொளவென்ற கால் சட்டை, இடையில் பட் டினாலும் பருத்தியினாலும் ஆன துணியைக் கட்டியிருந்தார் திப்பு. இடுப்பில் பச்சை நிற பெல்ட் அதில் சிவப்பு நிற பை. காயம்பட்டு வீழ்ந்ததால் தலைப்பாகை தலையில் இல்லை. தோளில் ஆபரணம் போன்ற பட்டை அணிந்திருந்தார். கம்பீர மான தோற்றத்தில் அசாதாரணமான வீரராகத் திகழ்ந்தார். (செ. திவான், வேலூர் புரட்சியில் வீரமிகு முஸ்லிம்கள், பக்கம் 104)

கண் கண்ட சாட்சியான மேஜர் ஆலன், இப்போரில் தான் கண்ட காட்சியை தனது நூலில் எழுதினார்.

வாசல் கதவின் வழியாக திப்பு சுல்தானின் உடல் கொண்டு வரப்பட்டபோது அவரது கண்கள் திறந்திருந்தன. அவரது உடல் இளஞ் சூடாக இருந்தது. அப்போது நானும் திரு. வெல் லெஸ்லியும் திப்பு உயிருடன் இல்லை என்பதை நம்ப முடி யாமல் இருந்தோம்.

அவரது நாடித் துடிப்பையும் இதயத் துடிப்பையும் அறிந்த பின்புதான் இந்த சந்தேகம் எங்களை விட்டு அகன்றது. அவர் இறந்துவிட்டார் என்பதை உறுதி செய்து கொண்டோம்.

4.5.1799 இரவு ஸ்ரீரங்கப்பட்டிண நகரில் அத்தனை வீடு களும் ஆங்கிலேயத் துருப்புகளால் கொள்ளையடிக்கப்பட்டன.

அந்த இரவில் எல்லாமே நடந்தது என்கிறான் ஆர்தர் வெல்லெஸ்ஸி. முஸ்லிம்கள் வெட்டிக் கொல்லப்பட்டனர். அவர்களின் சொத்துக்கள், வீடுகள் சூறையாடப்பட்டு கொள் ளையிடப்பட்டன.பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாயினர். சயித் சாகிப், கமர் உத்தீன்கான் குடும்பப் பெண் கள் மிகவும் அவலத்திற்கு ஆளாயினர்.

கும்பினிப் படைகளிடம் அளவுக்கு அதிகமான கொள்ளைப் பொருட்கள் இருந்தன. தங்கம், வெள்ளி கட்டிக் கட்டியாக அவர்களிடம் இருந்தது. ஒரு நகைச் சிமிழ் மட்டும் 4,50,000 மதிப்புள்ளது. (அக்கால மதிப்புப்படி) திப்பு புஜத்தில் சுற்றி அணியும் வைரங்கள் பூட்டிய காப்பு ஒன்றை சிப்பாய் ஒரு வன் 1500 பவுண்டுகளுக்கு விற்றான். அதை வாங்கிய கும்பினி மருத்துவர் அதனை 2000 பவுண்டுகளுக்கு விற்றவர்.

6.05.1799 ஸ்ரீரங்கப்பட்டிணம் வெல்லெஸ்லியின் பொறுப் பிற்கு அதிகாரப் பூர்வமாக வரும் வரை அங்கு கொள்ளை களும் கொலைகளும் தொடர்ந்தன.

கொள்ளையோ கொள்ளை திப்பு சுல்தானிடமிருந்தும் ஸ்ரீரங்கப்பட்டணத்திலிருந்தும் ஆங்கிலேயர் அன்று அடித்த கொள்ளை மூன்று கோடி. (அப்போதைய மதிப்பு) ஜெனரல் ஹாரிசிற்கு 21,43,530 ரூபாய் கிடைத்தது, மீர் ஆலத்திற்கு ஒரு லட்சம் வராகன் கிடைத்தது.

4.05.1799 அன்று இரவெல்லாம் கொள்ளை, கொலை, குலைநடுக்கம், குழப்பம் நீடித்தது. கோரம் நிறைந்தது. அன் றிரவு இன்று நடந்ததுபோல் என்றுமே எங்குமே கொடுமை நடந்தது கிடையாது என்று வெல்லெஸ்லியே ஒப்புக் கொள் கிறார். (தீரன் திப்பு சுல்தான், பக்கம் 247)

மே திங்களின் 4ம் நாள் பகலும் இரவும் மட்டும் இறந்து விட்ட திப்புவின் வீரர்களின் எண்ணிக்கை, 12 ஆயிரத்திற்கும் மேலிருக்கும். இறந்து கிடந்த உடல்களில் பெண்களின் உடல் களும், பச்சிளம் குழந்தைகளின் உடல்களும் பல ஆயிரம் இருந்தன. (சுஜாவுதீன் சர்க்கார், திப்புவின் அரசியல், பக்கம் 262)

1799 மே 4 இந்திய வரலாற்றில் இரத்தம் தோய்ந்த நாள். ஊரெங்கிலும் 12,000 மனித உடல்கள் மண்டிக் கிடைந்தன. அவற்றை அடக்கம் செய்வதே பெரும் பிரயத்திமையாயிற்று. (மாவீரன் திப்பு சுல்தான், ஜி. ஆளவந்தார், பக்கம் 200)

05.05.1799 திப்பு சுல்தானின் இறுதி நிகழ்வு முழு இராணுவ மரியாதையுடன் நடந்தது. சந்தூக்கை அந்தரங்கச் சேவகர்கள் நால்வர் தூக்கிச் செல்ல, ஐரோப்பிய படைகள் அணிவகுத்துச் செல்ல ஊர்வலம் நடந்தது.

திப்பு சுல்தானின் இரண்டாவது மகன் அப்துல் காலிக் குதி ரை மீது ஏறி பின்னால் சென்றான். தெருவெல்லாம் மக்கள் வெள்ளம்.

கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. கஞ்சத்தில் உள்ள கும்பாள் என்ற லால்பாக்கிற்கு தீரனின் உடல் கொண்டு வரப் பட்டது.

வழியில் ஏழை எளியவர்களுக்கு 5,000 ரூபாய் தானமாக வழங்கப்பட்டது.

மண் அழுதது, வான் அழுதது, மழை ஓவொன்று கொட் டியது. இடி, மின்னல் பலமாக ஒலித்தது, ஒளித்தது.

மின்னலின் கோரம் காவிரியின் வடகரையில் இருந்த பிரிட் டீஷாரின் பம்பாய் சேனையின் பாசறை மீது பாய்ந்தது. கூடா ரங்கள் எரிந்தன. லெப்டினென்ட் பார்க்ளே, லெப்டினன்ட் கிராண்ட் என்ற இரண்டு ஆங்கிலேய அதிகாரிகள் பலியாயினர்.

மற்றும் சிலரும் முகாமில் இடி மின்னல் தாக்குதலால் இறந்து போயினர் என்று வில்க்ஸ் தனது நூலில் பக்கம் 751ல் தெரிவித்துள்ளார்.

தீரன் திப்பு சுல்தானின் உடல் அடக்கம் ஆகும் வேளையிலும் பல ஆங்கிலேயர்கள் கொல்லப்பட்டனர்.

நாட்டின் விடுதலைக்காக திப்பு தன் உயிரைத் தியாகம் செய்தார். பேராசை கொண்ட பிரித்தானியருக்கு எதிராகப்

போரிட்டார். திப்பு உயிர் வீழ்ந்தபோது "இனி இந்தியா எமதே" என்று வெள்ளையர்கள் எக்காளமிட்டனர்.

மைசூர் போரில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் பிரிட்டீஷாரால் பாராட்டப்பட்டனர். பிரிட்டீஷ் பாராளுமன்றம் வெல்லெஸ்லிக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

திப்பு சுல்தானின் ஆட்சிப் பகுதி நான்கு வகையாக பிரிக்கப்பட்டது. மைசூர் அதைச் சுற்றியுள்ள சில பகுதிகளை மைசூர்

அரசவக விட்டுவிட்டு, ஸ்ரீரங்கப்பட்டிணம் உள்ளிட்ட மீதிப் பகுதியை பிரிட்டீஷார் தாங்களே வைத்துக் கொண்டனர்.

குர்ரம், கொண்டா, கூட்டி, சித்தன துர்க்கம் முதல் கோலார் வரை உள்ள பகுதிகள் நிஜாமின் பங்காகச் சென்றது. குர்ரம் குண்டா கமருதீன் கானுக்கு கொடுக்கப்பட்டது.

இவன் கும்பினிப் படையை பின்தொடர்ந்து சென்று அவர்களுக்கு வரும் தபால் தொடர்புகளைத் துண்டிக்கவும், பண்டக உதவி வருவதை தடுத்தி நிறுத்திடவும் வேண்டியவன். தீரன் திப்புவின் குதிரைப்படையின் பெரும் பகுதி இவன் பொறுப்பில்தான் இருந்தது. இந்த துரோகியும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. பறங்கியருக்கு பக்கபலமாக இருந்து படுபாதகம் புரிந்தான் அந்தத் துரோகி. மைசூரின் புதிய அரசின் திவானாக பூர்ணய்யா நியமிக்கப்பட்டார்.

துரோகிகள் வாழ்ந்ததாக வரலாறு இல்லை

'இரு நூறு ஆண்டுகள் ஆட்டு மந்தையாக வாழ்வதை விட இரண்டு நாள் சீறும் புலியாய் வாழ்வதே சாலச் சிறந்தது' என்று சூளுரைத்த பரிசுத்தப் பெருவீரன் தியாகச் சுடர் திப்பு சுல்தான்.

வணிகக் கொடிப்பிடித்து வஞ்சக வலை விரித்து உளமார்ந்த திருநாட்டை வளைத்துக் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தை வீழ்த்திவிட்டு வந்தான். சிம்மாசனத்தில் அமர வேண்டுமெனச் சபதமெடுத்து மண்ணின் மானம் காத்து, தன் மானம் காக்க இறுதி மூச்சு உள்ளவரை போராடிய இந்தியாவின் பெரு வீரன் இமலாயப் புகழ் திப்பு சுல்தானின் இறுதி நாளைக் கொஞ்சம் சொன்னேன். இதயத்தில் கொஞ்சம் நீங்களும் நினைத்துப் போற்றுங்களேன்.

இலக்கியச்சோலை

1	இஸ்லாமிய செயல் வீரர்களின் அடிப்படை தகுதிகள்	ரூ. 150.00
2	இம்பாக்ட் பக்கம்	ரூ. 40.00
3	பசுவதை ஒரு வரலாற்றுப் பார்வை	ரூ. 60.00
4	மனித இனத்திற்கெதிரான குற்றம்	ரூ. 100.00
5	ஷஹீத் செய்யித் குதுப் வாழ்க்கை வரலாறு	ரூ. 30.00
6	பத்ருப் போரின் அரசியல்	ரூ. 40.00
7	அகக்கண்	ரூ. 60.00
8	இறைநம்பிக்கையாளர்களின் வழிகாட்டி	ரூ. 50.00
9	7/22 கோவை: போலீஸ் நடத்திய வெடிகுண்டு நாடகம்	ரூ. 10.00
10	இஸ்லாமியப் பார்வையில் நேர நிர்வாகம்	ரூ. 80.00
11	கர்கரேயை கொன்றது யார்?	ரூ. 140.00
12	மொஸாத்: உலக பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண்	ரூ. 90.00
13	தென்காசி குண்டுவெடிப்பு	ரூ. 15.00
14	பாட்லா ஹவுஸ் என்கௌவுண்டர்: நிழல்களும், நிஜங்களும்	ரூ. 25.00
15	இடஒதுக்கீடும், முஸ்லிம்களும்	ரூ. 20.00
16	ஈமான்: விளக்கு மாடங்கள்	ரூ. 40.00
17	இஸ்லாம்: சந்தேகங்களும், தெளிவுகளும்	ரூ. 25.00
18	வார்த்தைகளின் வலி தெரியாமல்	ரூ. 50.00
18	தொடரும் பயணங்கள்	ரூ. 50.00
20	இஸ்ரேலிய உறவின் விபரீதங்கள்	ரூ. 40.00
21	குர்ஆன் கூறும் பனீ இஸ்ராயீல்	ரூ. 35.00
22	புனையப்பட்ட வழக்குகள் புதைக்கப்பட்ட வாழ்வுகள் (2ம் பதிப்பு)	ரூ. 150.00
23	இஸ்லாமிய சமூகத்தில் பெண்களின் நிலை	ரூ. 70.00
24	மேலப்பாளையம் முஸ்லிம்கள்	ரூ. 80.00
25	காலித் மிஷ்அல்	ரூ. 100.00
26	தமிழக முஸ்லிம்களின் அரசியல் வரலாறு	ரூ. 45.00
27	பாபரி மஸ்ஜித் இடிப்பு: தொடரும் வரலாற்று துரோகம்	ரூ. 60.00
28	வேண்டாம் மரண தண்டனை ஏன்?	ரூ. 50.00
29	அண்ணலார் கற்றுத் தந்த தலைமைத்துவம்	ரூ. 130.00
30	ரமலான் மேடை	ரூ. 100.00
31	மதமும் ஜனநாயகமும்	ரூ. 55.00
32	இடிந்தகரை சிந்தனைகள்	ரூ. 60.00
33	கோட்சேயின் குழந்தைகள்	ரூ. 180.00

34	சங்பரிவார்: நேற்று இன்று நாளை	ரூ. 110.00
35	மஹ்ஷரை நோக்கி	ரூ. 120.00
36	முஸ்லிம்களும் தமிழகமும்	ரூ. 140.00
37	நபிகளார் நம்மோடு வாழ்ந்தால்	ரூ. 60.00
38	கோளாறு எங்கே?	ரூ. 100.00
39	பாலஸ்தீனம்	ரூ. 60.00
40	நல்ல தமிழ் எழுதுவோம்	ரூ. 35.00
41	அல் இஃவானுல் முஸ்லிமூன்	ரூ. 75.00
42	இறை நம்பிக்கையாளர்களின் தொழுகை	ரூ. 90.00
43	நல்ல காலம் பிறக்குமா...?	ரூ. 65.00
44	எனது தலைவர் ஓர் இஸ்லாமியர்	ரூ. 20.00
45	மதரஸாபட்டினம்	ரூ. 100.00
46	விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்	ரூ. 130.00
47	மதரஸாபட்டினம்	ரூ. 100.00
48	தமிழக முஸ்லிம்களின் கடல் வாணிப வரலாறு	ரூ. 35.00
49	இஸ்லாம் ஓர் எளிய அணுகுமுறை	ரூ. 35.00
50	புத்தம் போதிக்கும் யுத்தம்	ரூ. 35.00
51	குற்றம் நடந்தது என்ன?	ரூ. 50.00
52	ஷூரா	ரூ. 25.00
53	நகரத்தில் ஊரடங்கு உத்தரவு	ரூ. 75.00
54	தொழுகை பயிற்சி ஒழுங்கும் சமூகப் பரிமாணமும்	ரூ. 50.00
55	ஐ.எஸ்.ஐ.எஸ். சாதித்தது என்ன?	ரூ. 25.00
56	நிறவெறியை குத்தி வீழ்த்திய வித்தகன்	ரூ. 15.00
57	இஸ்லாத்தின் தனிமனித சமூக உரிமைகள்	ரூ. 55.00
58	துரோகி?	ரூ. 150.00
59	ஹாஷிம்புரா மே 22	ரூ. 120.00
60	சிறுபான்மை முஸ்லிம்களுக்கான இஸ்லாமிய சட்டம்	ரூ. 120.00
61	மாப்பிளா முஸ்லிம்கள்	ரூ. 60.00
62	நபி (ஸல்) வரலாறு	ரூ. 250.00
63	RTI - தகவல் அறியும் உரிமை சட்டம்	ரூ. 40.00
64	ஹமாஸ் இயக்க அரசியல் பார்வை	ரூ. 40.00
65	ஏகாதிபத்தியத்தின் எதிரி சதாம் ஹுஸைன்	ரூ. 90.00
66	திப்பு சுல்தான் அவதூறுகளும் பதில்களும்	ரூ. 70.00
67	ரணங்கள் (நாவல்)	ரூ.

‘200 ஆண்டுகள் ஆட்டு மந்தையாக வாழ்வதை விட இரண்டு நாள் சீறும் புலியாய் வாழ்வதே சாலச் சிறந்தது’ என்று சூளுரைத்த பெருவீரன் தியாகச் சுடர் திப்பு சுல்தான்.

வணிகக் கொடிப்பிடித்து வஞ்சக வலை விரித்து இந்திய திருநாட்டை வளைத்துக் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தை வீழ்த்திவிட்டு வந்தான். சொந்த மண்ணை பாதுகாக்க சபதமெடுத்து, மண்ணின் மானம் காத்து, தன் மானம் காக்க இறுதி மூச்சு உள்ளவரை போராடிய இந்தியாவின் பெரு வீரன் இமலாயப் புகழ் திப்பு சுல்தான் மீது சுமத்தப்படும் பல்வேறு அவதூறுகளுக்கு உரிய ஆதாரங்களுடன் மறுத்துள்ளார் ஆசிரியர்.



வரலாற்று ஆய்வாளர்
செ. திவான் M.A., M.Phil

ILAKKIYACHOLAI
இலக்கியச்சோலை

₹ 70.00

ISBN 978-81-935275-8-0
9 788193 527580